



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியினுள்ளே...

## கவிதைகள்

நிவேதா
தமிழ்நதி
கறுப்பி
திருமாவளவன்
டீசே தமிழன்
ஆனந்த பிரசாத்
மயூ மனோ
சேரன்





## சிறுகதைகள்

தேவகாந்தன்
ஸ்ரீரஞ்சனி
மெலிஞ்சி முத்தன்
த.மைதிலி
வ.ந.கிரிதரன்





## கட்டுரைகள்

சுல்பிகா
மணி வேலுப்பிள்ளை
அ.முத்துலிங்கம்
வீரகேசரி மூர்த்தி
திரவியம் சர்வேசன்
முருகேசு பாக்கியநாதன்
எஸ்.சந்திரபோஸ்

## நேர்காணல்

க.நவம்

அட்டைப்படம் - நன்றி இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2012 புரட்டாதி இதழ் - 48**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

# கனடாச் சிறப்பிதழ்

"ஜீவநதி"யின் 48ஆவது இதழ் கனடாச் சிறப்பிதழாக மலர்கிறது. அவுஸ்திரேலியச் சிறப்பிதழாக "ஜீவநதி" மலர்ந்து மூன்று மாதங்களில் கனடாச் சிறப்பிதழையும் வெளியிடக் கூடியதாக உள்ள சூழலை நினைத்துப் பார்க்கின்றபோது மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் உள்ளது.

சஞ்சிகையொன்று பிரதேசம் சார்ந்தோ அல்லது நாடு சார்ந்தோ சிறப்பிதழ் ஒன்றை வெளியிடுவது என்பது புதிய விடயமன்று. சஞ்சிகையின் வழமையான அம்சங்களுடன் குறித்த பிரதேசத்துக்குரிய அல்லது நாட்டுக்குரிய எழுத்தாளர்களின் சில படைப்புகளை இடம்பெறச் செய்து அச்சிறப்பிதழை வெளியிடுவதே இது வரை நடைமுறையாக இருந்து வந்திருக்கின்றது. ஆனால், அவுஸ்திரேலியச் சிறப்பிதழைப் போன்று, "ஜீவநதி"யின் கனடாச் சிறப்பிதழும் முழுமையாகக் கனடா வாழ் எழுத்தாளர்களின் படைப்புகளை மாத்திரமே தாங்கி வருகின்றது என்பது பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறாக, கனடா வாழ் எழுத்தாளர்களின் படைப்புகளை மாத்திரம் இடம்பெறச் செய்து, முழுமையான கனடாச் சிறப்பிதழை வெளியிடக் கூடியதாக அமைந்தமைக்கு எழுத்தாளர்களின் ஒத்துழைப்பே பிரதான காரணமாகும். குறித்த காலத்திலேயே தமது ஆக்கங்களை அனுப்பி வைத்து, திட்டமிட்டபடியே ஜீவநதியின் 48ஆவது இதழாகக் கனடாச் சிறப்பிதழை மலர வைத்திருக்கிறார்கள். கனடா வாழ் எழுத்தாளர்களுடனான தொடர்புகளை ஒன்றிணைப்பதற்கு எழுத்தாளர் "நவம்" அவர்கள் எங்களுக்கு உறுதுணையாக இருந்தார். இவர்களுக்கு எமது நன்றிகள்.

இதேவேளை, சென்ற வருட சிறந்த சஞ்சிகை ஆசிரியருக்கான கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது ஜீவநதி ஆசிரியருக்குக் கிடைத்துள்ளது என்ற இனிப்பான செய்தியையும் தனது வாசகர்களுடனும் ஆதரவாளர்களுடனும் ஜீவநதி பகிர்ந்து கொள்ள விரும்புகின்றது.

**-க. பரணீதரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுல்பிகா

# கனேடியத் தமிழர்களின் கலை இலக்கிய வாழ்வியல்

1983 இற்குப் பின் பெருமளவில் கனடாவுக்கு குடிபெயர்ந்து புகலிட வாழ்வினை ஆரம்பித்த இலங்கைத் தழிழர்களது வாழ்வியலானது தாயகத்தில் இடம்பெற்ற பலவகையான இழப்புக்களை ஈடுசெய்யும் பெரும் முயற்சியாகவே இருந்து வந்திருக்கின்றது. கலை, இலக்கிய இயக்கமும் அதனோடு கூடிய செயற்பாடுகளும் கூட இப்பல்வகையான இழப்புகளை ஈடு செய்வதற்கான கருவியாகவே பயன்பட்டு வந்திருக்கின்றது. இந்த வகையில் அவர்களது கலை இலக்கிய வாழ்வியலானது பல் பரிமாணத் தளங்களைக் கொண்டு இயங்குகின்றது. ஏறக்குறைய கால் நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட இவ்வாழ்வியல் ஏனைய சிறுபான்மைக் குழுக்களின் கலை இலக்கிய பாரம்பரியங்களையும் விஞ்சி நிற்பதாக அமைந்திருப்பதற்கு இந்த பல்பரிமாணங்கள் தான் காரணமாக அமைகின்றது.

1960 இற்கு பிற்பகுதியிலும் 1970 இற்கு முற்பகுதியிலும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தவர்களுடன் ஒப்பு நோக்கும் போது பிந்திய குடிவரவாளர்களின் கலை இலக்கிய வாழ்வியல் முற்றிலும் வேறுபட்டது. இதற்கு முக்கிய காரணம் அவர்களது குடிப்பெயர்வு, சமூகப் பின்னணியாகும். முதலாவது சந்ததிக்குரிய குடிவரவாளர்கள் பொருளாதார வளங்களுடையவர்களாகவும், கல்வி, தொழில் தகமை கொண்டவர்களாகவும் இருந்தனர். மேலும் எண்ணிக்கையில் குறைந்தவர்களான இவர்கள் மேல்தட்டு வர்க்க, அல்லது மேல் மத்தியதர வர்க்கத்திலிருந்து வந்தவர்களாகவும் இருந்ததால் ஆங்கிலமொழிப் புலமையுடன் மேலைத்தேய கலாச்சார விழுமியங்களுடன் நேரடிப் பரிச்சயமுடையவர்களாகவும் அதன் பால் விருப்பு கொண்டவர்களாகவும் இருந்தனர். இதனால் அவர்கள் ஆங்கிலேய முதன்மை கொண்ட கனேடிய பொது நீரோட்டத்திற்குள் தங்களை இணைத்துக் கொள்ளவும் இசைவாக்கிக் கொள்ளவும் இலகுவில் முடியுமானதாக இருந்தது.

எனினும் 1983 இற்குப்பின் கனடாவிற்கு குடிபெயர்ந்தோரில் பெரும்பான்மையானோர் இவர்களிலிருந்து வேறுபட்ட குடிவரவு, சமூகப்பின்னணிகளைக் கொண்டிருந்தனர். பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டடோர், சமூக ரீதியாக பின்தங்கியோர், கல்வியை இடைநிறுத்த நிர்ப்பந்திக்கப்பட்டோர், தொழில் தகமைகள், திறன்கள் குறைந்தோர், போர், முரண்பாட்டு வாழ்வியலுக்குள் அல்லலுற்றோர் என பல்வகைப்பட்ட பின்தங்கல்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோர் பெருமளவில் இருந்தனர். மேலும் அவர்கள் ஆங்கில மொழி அறிவு குறைந்தவர்களாகவும் மேலைத்தேய கலாச்சாரப் பாரம்பரியங்களில் பரிச்சய மற்றவர்களாகவும் இருந்தனர். மேலும் ஒப்பீட்டளவில் பெரும் எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழ் குடிவரவாளர்களின் குடும்ப அங்கத்தவர்களும் உறவினர்களும் 1990 களில் இக்குழுமத்திற்குள் இணைந்து கொண்டனர். மேற்குறித்த சமூக பொருளாதார கல்வி நிலமைகள், மேலைத்தேய குறிப்பாக ஆங்கில–ஐரோப்பிய கனேடிய குடிவரவாளர்களின் பொது நீரோட்டத்தினுள் இணைவதற்கான தடைகளாக அமைந்தன. இந்நிலமை, தமிழர்கள் தமக்குரிய கனேடிய சமூக நிலைப்படுத்துதலை தனித்துவமாக அல்லது தமது பாரம்பரிய சமூக அம்சங்களுடன் நிலைப்படுத்துவதற்கான தேவைகளையும் உருவாக்கியது. இந்தப் புதிய வாழ்வியல், தேசியம், இனப்பிரச்சினை தொடர்பான போராட்ட அம்சங்களுடன் இணைந்ததாகவும் அமைய வேண்டும் என அவர்களால் நோக்கப்பட்டது. பலதரப்பட்ட போர் இழப்புக்களுடன், தாய் நாட்டில் தமது இனத்துவக் குழுமத்தின் ஒட்டு மொத்தமான நிராகரிப்பும் இதனை மேலும் அவசியப்படுத்திற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நாட்டில் தேசியத்தனித்துவம் உட்பட இழந்தவைகள், மறுக்கப்பட்டவைகள் சார்ந்ததாக கலை இலக்கியங்கள் உருவாக்கப்படுவதும் புத்துயிர்க்கப் படுவதும், மாற்றமடைவதும் அவசியமாயிற்று. இவை கனேடியத் தமிழர்களின் கலை இலக்கியங்களின் பொதுத்தளங்களாக இருந்த போதும், புதிய வாழிட சமூக சூழலுக்குள் கண்டு கொள்ளப்படுகின்ற கரிசனை களுக்குரிய விடயங்கள், வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இவை வளர்ச்சியும் மாற்றமும் கண்டுள்ளன. இவ்வகை யில் தமிழர் கலை இலக்கியங்களின் வடிவங்கள், அது பேசுகின்ற விடயங்கள், அதன் சமூக அரசியல் சார்பு நிலைகள், கலை இலக்கியக்களின் தேவைகள், நோக்கங்கள் போன்றன மீளக்கட்டமைக்கப் பட்டுள்ளமையை மிகத் துல்லியமாக நாம் வேறுபடுத்தி இனங்காணலாம். இவை கனேடியத் தமிழர்களின் கலை இலக்கிய வாழ்வியலுக்குள் பல்வேறு தளங்களையும் வாய்ப்புக்களையும் கூட விரிவுபடுத்தியுள்ளன. கலை இலக்கியங்கள் செயற்படுகின்ற இந்தத் தளங்கள் யாவும் கனேடியத் தமிழர்கள் வாழ்வியியலில் முக்கித்துவம் உடையவை. இப் பல்தள இயக்கமானது தமிழர் கலை இலக்கியத்தினை ஒரு வகையில் செழுமைப்படுத்தி யுள்ளதாகவே நோக்க வேண்டியுள்ளது. கனேடியத் தமிழர்களின் கலை இலக்கிய வாழ்வியலுக்குப் பின்வரும் பரிமாணங்கள் உள்ளன.

1) போராட்ட வழிமுறை / யுத்தி
2) பாரம்பரியம்/ தேசியத் தனித்துவம்
3) தொழில்துறை
4) அழகியல் அறிவுத்துறை
5) சமூக அந்தஸ்து விடயம்
6) வாழ்வியல் அழுத்தங்களின் வடிகால்
7) பொழுதுபோக்கு / களியாட்ட விடயம்

## போராட்ட வழிமுறை / யுத்தி

1980களின் பிற்பகுதியிலிருந்து கனேடியத் தமிழர்கள் கலை இலக்கியத்தினை, சமூகப் போராட்டத்திற்கான வழிமுறை அல்லது யுத்தியான முன்னெடுக்கின்ற நிலமை உருவாகி வந்திருக்கின்றது. ஆயுதப் போராட்ட அணுகுமுறையைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டோரும், அதனால் பாதிக்கப் பட்டோரும், அதில் வெறுப்படைந்தோரும், பெருமள வில் கலை இலக்கியத்தினை சிந்தனைகளிலும் கருத்தாக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய ஓர் யுத்தியாகவும், அறிவியல் ரீதியான கலந்துரை யாடலுக்கான களமாகவும் பயன்படுத்த முனைந்தனர். இவ்வகையில் குறிப்பாக இலங்கைத் தமிழ் தேசியப் இனப் பிரச்சினையை விளங்கு வதற்கும், அதனை அணுகு வதற்கும், தீர்வு காண்பதற்குமான கண்ணோட்டங் களை முன்வைக்கின்ற, மீள் பார்வை செய்கின்ற களமாகவும் கலை இலக்கியங்கள் மாற்றமடைந்தன. விளைவாக, கவிதை, சிறுகதை, நாடகங்கள், நடனங்கள், பாடல்கள், குறுந்திரைப் படங்கள், திரைப் படங்கள் இவற்றின் வேறுபட்ட கலவைகள் எனப் பல் தரப்பட்ட கலை இலக்கியங்களின் வடிவங்கள் எண்ணில் அடங்காத அளவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவை வரலாற்று விபரணப் படைப்புக்களாக இப்போராட்ட வழிமுறைகளை முன்னெடுக்கின்றன. அறிந்தோ அறியாமலோ இடம்பெறுகின்ற இச்சமூகப் போராட்டத்திற்கான ஊக்கமானது அல்லது உந்துத லானது ஆக்கங்களின் உருவாக்கத்தினை கூர்மைப் படுத்தியுள்ளதுடன் விரிவாக்கியுமுள்ளது. இவ்வகை யில் கலை இலக்கிய ஆக்கங்கள் மாற்றுக் கருத்துக் கான இன்றியமையாத ஊடகமாகவும், பரப்புரை களுக்கான வினைத்திறன் மிக்க சாதனமாகவும், ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் ஒன்றிணைப்ப தற்குமான உத்தியாகவும் மாற்றமடைந்திருக்கின்றன. விளைவாக கனேடியத் தமிழர்களின் கலை, இலக்கியங்கள், பெருமளவில் "இரசனைக்கானவை" என்ற அழகியல் வெளிப்பாட்டுத் தளத்திலிருந்து "சமூக மாற்றத்திற்கானவை" என்ற சமூக அரசியல் தளத்திற்கு இடம்பெயர்க்கப்பட்டிருக்கின்றது. கனேடியத் தமிழர்கள், கலை இலக்கியங்களை ஏனைய தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பார்க்க கூடுதலான அளவு மாற்றுக் கருத்துக்களை உருவாக்கும் சாதனமாகப் பயன்படுத்தி உள்ளனர்.

மற்றொரு புறத்தில், கனேடியத் தமிழ் சமூகத்தில் நிகழும் சமூக, கலாச்சாரப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் கலை, இலக்கியங்களுக் கூடாகப் பேசப்படுவது ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. எனினும், ஒரு சில ஆக்கங்கள் அவற்றினை மிக மிகக் காத்திரமான வகையில் வெளிப்படுத்தி யுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகங்கள், பால்நிலை பாரபட்சங்கள், பொய்மைகளும், மூட நம்பிக்கை களும், பல்வகை பாலியல் திசை கோட்படுத்துதல்கள், வீட்டு வன்முறைகள், பெற்றாரிய விடயங்கள், முதியோர் துஷ்பிரயோகங்கள் போன்ற விடயங்கள் அவற்றுள் அடங்கும். பொது அரசியல் விடயங்களுக்கு அப்பால் சமூக அரசியல் விடயங்களாக இவை பேசப் படுகின்றன. இந்த வகையில், இவை மனித உரிமைகளையும் அதன் பாற்பட்ட மாற்று சமூக- கலாச்சார பண்பாடுகளையும் விழுமியங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வைத்து வாதிடுகின்றவையாகவும் நோக்கப் படலாம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பார பட்சங்கள், பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் அல்லது சமூக பொருளாதார வர்க்க/ வகுப்பு ரீதியான வேறுபாடுகள், பாரபட்சங்கள், கரிசனைக்குரிய விடயங்கள் பற்றி பேசுகின்ற கலை இலக்கியங்கள் மிக அரிதாகவே உருவாக்கப்படுகின்றன. ஆச்சரியப் படத்தக்க வகையில், மேலைத்தேய, குறிப்பாக பொருள் முதன்மை, முதலாளித்துவ கனேடிய சமூக அமைப்புக் குள், தமது வாழ்வியலை நிலைப்படுத்திக் கொள்ள விளைகின்ற, புதிய குடிவரவு சமூகமானது எதிர்கொள் கின்ற விடயங்களுக்கான இடம், கனேடியத் தமிழர் கலை இலக்கியங்களில் போதுமானதாக இடம்பெறவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், இவ்விடயங்கள் தொடர்பாக எழுகின்ற உளவியல் நெருக்கிடைகளும் மன உளைச்சல்களும் பற்றி இவை பேசுகின்றன. தனி மனித, குடும்ப அநுபவங்களாக இவ்வுளவியல் அம்சங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்ற அளவிற்கு, ஒட்டு மொத்தமான சமூகப் பொருளாதார கட்டமைப்பு சார்ந்த பிரச்சினையாக முன் வைக்கப்படாத நிலை காத்திரமான ஒரு ஆய்வுக்குரிய விடயமாகும்.

### பாரம்பரியம் / தேசியதனித்துவம்

கனேடிய தமிழ்ச்சமூகம் போருக்குள் இருந்து, அதன் இக்கட்டுக்களின் அழுத்தங்களை சுமந்து கொண்டு குடிபெயர நிர்ப்பந்திக்கப்பட்ட சமூகமாகும். குறிப்பாக தேசியம், அதன் பாற்பட்ட தனித்துவ அம்சங்களும், (மொழி, கலை, கலாசார உட்பட) தாய் நாட்டில் அங்கீகரிக்கப்படவில்லை, புறக்கணிக்கப்பட்டன என்ற நிலைமைக்குள் இருந்து வெளியேறியமையினால் அவற்றை பாதுகாக்க வேண்டும், உயிர்ப்பிக்கவும் புதிதாக கட்டமைக்கவும் வேண்டுமென்ற இயல்பான, நேர்மையான விருப்பும் கரிசனையும் அவர்களுக்கு இருந்தது. இந்நிலமை தமிழ் கலை இலக்கிய பாரம்பரியங்களை கனடாவில் வளர்த்தெடுக்க வழி கோலியது. ஆரம்ப காலங்களில், நடனம், இசை, நாடக மரபுகள் போன்றன குறிப்பாக தனிப்பட்டவர்கள் குழுக்களின் முயற்சிகள் ஊடாக வளர்ந்து வந்துள்ளன.

கனேடிய பல்பண்பாட்டுச் சூழல், சிறுபான்மை இனக்குழுமங்களின் தனித்துவத்தைப் பேணவும் வளர்க்கவும் வாய்ப்புக்களை வழங்குவதுடன் ஊக்கமும் அளிக்கின்றது. அரச நிதி ஊக்குவிப்புக்கள் ஏனைய சமூகங்களின் முன்னெடுப்பு, வளர்ச்சிகள் போன்றன தமிழரது வாழ்வியலுக்குள் தனித்துவமான கலை இலக்கிய அம்சங்களை தக்க வைக்க உதவி வந்திருக்கின்றன. வருடாந்த உற்சவங்களாக, விழாக் களாக, சமய கலாச்சார நிகழ்வுகளுக்கு ஊடாக இவை வெளிப்படுத்தப்படுகின்றன.

கலை, இலக்கிய பாரம்பரியத்தைப் பேணுவது மற்றொரு வகையில் முக்கியத்துவப்படுத்தப்படு கின்றது. வளர்ந்து செல்கின்ற கலை, கலாச்சார ரீதியான சந்ததி இடைவெளியை குறைப்ப தற்கும் அந்த இடைவெளி காரணமாக, பாரம்பரியக் கலை இலக்கிய அம்சங்களை இழந்து போகக் கூடிய சாத்தியம் அதிக மாக இருப்பதன் காரணமாகவும், விழிப்புணர்வுடன் கலை இலக்கியங்களை வளர்ப்பதும், அடுத்துள்ள சந்ததி களை அதில் பரிச்சயப்படுத்துவதும், தமிழர்களுக்கு அவசியமான விடயமாக உள்ளது. குறிப்பாக தமிழர் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் இதற்கான வாய்ப்புக்கள் விரிவடைந்து வருகின்றமை தொடர்ச்சி யான தக்க வைத்தல்களுக்கு வழிகோலுவ தாக உள்ளது.

### தொழில் துறை

குடியமர்வின் ஆரம்ப காலப்பகுதியில் தொழில் வாய்ப்புக்கு உரிய ஒரு விடயமாக பல்வேறு துறைகளில் கற்ற கலைத்திறனுள்ளோரால் நோக்கப் பட்டது. தனிப்பட்டவர்கள், தத்தமது கலை ஆற்றல்களை ஊதியம் பெறும் நோக்கில் பயன்படுத்தினர், குறிப்பாக நடனம் சங்கீதம், இசை போன்றன இவ்வகையில், தொழிற்துறையில் வளர்ச்சி அடைந்தன. 1990களுக்கு பின், பெருமளவான தமிழர்களின் குடியமர்வு, குறிப்பாக பணவசதியுடன் ஐரோப்பிய நாடுகளில் இருந்து குடியேறிய தமிழர்கள் இவ்வாய்ப்புக்களை பெரிதும் பயன்படுத்துகின்ற நிலை பாரியளவில் ஏற்பட்டதால் அத்தனியாள் முயற்சிகள் விரிவாக்க மடைந்தன. கலைக்கூடங்கள், நாடக அரங்குகள் போன்றன நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகவும் தனிப்பட்டவர்களாலும் நிறுவப்படலாயிற்று. தொழில் நுட்பம், கருவிகளின் இணைப்பு, அரங்கங்கள் தொடர் பான நுட்பங்கள், தமிழர் கலை இலக்கிய மரபு களுக்குள் உள்வாங்கப்பட்டு முறையான நிபுணத்துவம் வாய்ந்த துறைகளாக வளர்த்தெடுக்கப் பட்டுள்ளன.

கனடாவின் பல்பண்பாட்டுக் கலாசாரத்தின் விழுமியங்கள் இந்த வகை வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளன. ஏனைய குழுக்களின் கலை இலக்கியப் பாரம்பரியங்களின் அம்சங்களின் உள்வாங்குதல் மொழி பெயர்ப்புகளுக்கூடாக வரும் கலாசார பெயர்வு, கனேடிய வாழ்வியல் அம்சங்களின் இணைப்பு போன்றன கலை இலக்கிய தொழிற்துறை நிபுணத் துவத்தை மேலும் செழுமைப்படுத்தி உள்ளது. இவை கனேடிய தமிழர்களின் கலை இலக்கியங்களுக்கு புதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாணங்களையும் வழங்கியுள்ளன. அச்சகங்கள், களியாட்டுக்குழுக்கள், வியாபாரத் தலங்கள் பலவும் கலை இலக்கியங்கள் சார்ந்து உருவாகியுள்ளன.

### அழகியல் அறிவுத்துறை

தமிழர் பெரும்பான்மையாக வாழுகின்ற ரொறன்ரோ நகரில் பாடசாலைக் கலைத்திட்டமானது சிறுபான்மையினரது கலை இலக்கியங்களை சிறப்பு அறிவுத்துறைகளாக ஏற்றுக் கொள்கின்றது. இதன் காரணமாக தமிழர் கலைகள், அழகியல் கல்விக்கான மாற்றுச் சித்திகளை வழங்கக் கூடிய அறிவுத்துறை களாக மாற்றமடைந்துள்ளதுடன், வளர்ச்சியும் பெற்று உள்ளது. கல்வித்துறையின் இவ்வங்கீகாரம் இக்கலைகள் மேலும் செழுமையடைவதற்கும், சந்ததியூடாக நிலைத்து நிற்பதற்கும் வழிவகுக்கின்றது. நடனம், சங்கீதம், இசைக்கருவிகள் வாசிப்பு, மேடைப்பாட்டு எனப் பலவகையான சித்திகளுக்கான சான்றிதழ் பெறுகின்ற துறையாக வளர்ச்சி அடைவதால் இதனை கற்கும் மாணவர் தொகையும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலை அழகியல் அறிவுத்துறையாக மீளமைக்கப்படுவதற்கும் முறைமையான கலைத் திட்டங்கள் ஊடாக நிபுணத்துவத்துவமும் தொழில்நுட்ப இணைப்புக்கள் ஊடாக அபிவிருத்தி அடைய வேண்டிய வாய்ப்பினையும் ஏற்படுத்துகின்றது. முன்னொரு போதும் இல்லாதவாறு தமிழர்களின் அழகியல் அறிவுத் துறைகள் நாட்டார் வழக்கு நாடக நடன கலை வடிவங் களையும் அதன் இலக்கிய பாரம்பரியங்களையும் செழுமைப்படுத்தி கனேடிய வாழ்வியலுக்குள் இணைக் கின்ற போக்கினையும் காணக் கூடியதாகவுள்ளது.

### சமூக அந்தஸ்து விடயம்

தாய் நாட்டில், கலை இலக்கியப் பாரம் பரியத்தின் மரபு ரீதியான கலைகள், குறித்த சமூக வகுப்பினுள் இடம்பெறுகின்ற, மட்டுப்படுத்தப்பட்ட விடயமாகவே இருந்து வந்திருக்கின்றது. குடிபெயர்வு வாழ்வு இந்நிலைமையை வேறுபட்டதாக மாற்றியமைத் துள்ளதாகவே நோக்க வேண்டியுள்ளது. கூத்துக் கலைகள், எழுத்து இலக்கியம் போன்றன பின் தங்கியோர் விடயங்களாகவும் ஏனைய கலைகள் சார்பளவில் செலவு கூடியவிடயங்களாக இருந்ததால் மேல் தட்டு வகுப்பினருக்குரியதாகவும் இருந்து வந்திருக்கின்றது. கனேடிய குடிபெயர்வு வாழ்வியல் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஓரளவுக்கு குறைத்துள்ள தால், இவ்விடயங்கள் யாவும் எல்லோருக்கும் எட்டக் கூடிய விடயமாக மாறியுள்ளது. அவரவர் தனிப்பட்ட தெரிவுகளுக்கும் இடமளிப்பதாக இருந்த போதிலும், தாய் நாட்டு சமூக நோக்கின் தாக்கங்கள் இன்னும் மிகைத்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

### வாழ்வியல் அழுத்தங்களின் வடிகால்

முன்னொரு போதும் இல்லாதவாறு தமிழர் களின் கலைகளும் இலக்கியங்களும் வாழ்வியல் அழுத்தங்களின் வடிகால்களாகவும் மாற்றம் அடைந் துள்ளது. குடிபெயர்வு காரணமான அழுத்தங்கள் குடிபெயர்வுக்கான பின்புலங்களின் அழுத்தங்கள், குடியமர்வில், அதன் நிலைப்படுத்தலில் ஏற்படும் அழுத்தங்கள், பல்கலாச்சார சூழலினால் ஏற்படும் மரபு வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்கள் காரணமான அழுத்தங்கள் போன்றவற்றிற்கு ஈடுகொடுக்க தனிப் பட்டவர்கள் கலை இலக்கியப் படைப்புக்களை செய் கின்றனர். அது அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் மன ஆறுதலையும் திருப்தி அளிப்பதாகவும் அமைகின்றது.

அதேவேளை பல கலை இலக்கியங்கள் இனக்குழு சார்ந்து ஏற்படுகின்ற கூட்டுத்தாக்கங்களில் இருந்து ஆற்றுப்படுத்துவதற்கான உத்திகளாகவும் மாற்றமடைந்து வருகின்றன. குறிப்பாக நாடகங்கள், நடன நிகழ்வுகள், யோகக்கலைகள் போன்றன புதிய நுட்பங்களுடன் விரிவாக்கப்பட்டு இவ்வகையான பரிகாரத்திற்குரிய அம்சமான விரிவாக்கம் பெற்று உள்ளன. கலைகளை பயில்வதும், உருவாக்குவதும், இரசிப்பதும், அனுபவிப்பதும், அதில் பங்கேற்பதும் இவ்வகையில் பரிகார நுட்பங்களாக மாறியுள்ளன.

### பொழுதுபோக்கு/ களியாட்ட விடயம்

கனேடிய தமிழர்களின் தொடர்பாடல் ஊடகங்களின் மிகை வளர்ச்சியுடன் சார்ந்து குறிப்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலத்திரனியல் ஊடகத் தின் வளர்ச்சிக்கூடாக தமிழர் கலை இலக்கியங்கள் பொழுதுபோக்குக்குரிய களியாட்ட அல்லது மகிழ்வுக் குரிய விடயங்களாகவுள்ளன. ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது இலங்கைத் தமிழருக்குரிய கலை இலக்கிய விடயங்கள் பொழுது போக்குக்காகவும் மகிழ்வுக்காகவும் பயன்படுவது குறைவாகவே உள்ளது. மாறாக மிகக்காத்திரமான, சிக்கலான சமூகவியல் விடயங்கள் சார்பானதாகவே தமிழர் கலை இலக்கியங் கள் வளர்ச்சி அடைந்துள்ளன. மகிழ்வுக்கான நிகழ்துகை கலைகள், இலக்கியங்கள் போன்றன தென்னிந்திய மரபு சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய தாகவே இன்னும் உள்ளன. இவ்வகையில், தமிழர் கலை இலக்கிய வடிவங்கள், பரவலான, ஜனரஞ்சக மகிழ்வுக்குரிய யுத்திகளாக அல்லது வடிவங்களாக விரிவாக்கப் படவில்லை என்றே தோன்றுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வு தின்னியும் ஓராயிரம் பாடல்களும்

அதிகாலையின்
இருள்மயக்க வேளைகளில்
உணர்வுதின்னும் கழுகுகள் கவ்விப்
பறந்துபோகும்
என் செஞ்சொண்டுக் கனவுலகின்
பாடல்களை
இனி வருந்துவதற்கு
ஏதுமில்லாமற்போல
மரத்துக் கிடக்கும் மனதினருகில்
புல்லிலும் பனிக்காற்றிலும் நொறுங்கிப்
போகுமதிர்வுகள்
இலைகளில் மெல்லொளி பாய்ச்சிப்
பரவிக்கிடக்கின்றன
கடற்கரைகளில் கால் பாவித் திரிந்த
கிளிஞ்சல் தேடும் சிறுமி
சிறகுகளைக் களவெடுத்ததாய்
நண்டுகள் குறைகூறுகின்றன
செம்மீன்கள் செட்டை விரித்து
கடல் கடந்துகொண்டே சபிக்கின்றன
மற்றுமொரு கடல் களையிழந்து
சேற்றுக்குட்டையாகிற்றாம்
அவளடி பட்டு
அருவருத்த பாடல்கள்
இலவம் பஞ்சாய் மாறி
திசைக்கொன்றாய்ப் பறந்துவிட
காயும் வெயிலில் சோம்பிக்கிடந்து
பனிக்குளிரில் உயிர்த்தெழுந்து
உணர்வு விழுங்கும்
கழுகுமாயினேன் நான்.

**நிவேதாவின் 2 கவிதைகள்**




# நமக்கானதோர் மாலைப்பொழுது

நானெழுதும் ஒவ்வொரு
வாக்கியத்துக்குமெதிரான
பிரதி வாக்கியமொன்றை
வனைந்துகொண்டிருக்கிறதொரு பறவை
சொல்லொன்று பூமியில்
வந்து தெறிப்பதற்கும்
பனம்பழம் கொப்பறுந்து
விழுவதற்குமான நிகழ்தகவினை
எந்தப் பின்னமும்
உறுதிசெய்வதாயில்லை
பருந்துநிழலும் படரா
பாலைவெளிதாண்டி
மணல்ரேகை கிழித்து
உனக்கும் எனக்கும் மட்டுமேயான
சிறிய, மிகச் சிறியதேயெனினும்
பொழுதொன்றைக் கண்டடைய
எத்தனைமுறை கூர்ந்து பார்த்தாலும்
உனதந்தப் பாவனை
நிராகரித்துவிடுகிறது
"இந்தப் புன்னகை உனக்கானதல்ல.."
குளிக்கும்போது கோர்த்துக் கோர்த்துச்
சேகரித்த வார்த்தைகள்
கதவுதாண்டும் முன் உலர்ந்துவிடுகின்றன
ஈரத்தைப் போல
விட்டுவரவேண்டியிருக்கிறது
வார்த்தைகளையும்
குளியலறைக்குள்ளேயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வேலுப்பிள்ளை

# நொறுங்குண்ட இருதயம் ஓர் அரிய நாவல்




"எங்கள் சரித்திரத்தை எங்களைப் போலொத்த ஓர் ஏழைப்பெண் எங்கள் மேல் அனுதாபங்கொண்டு எழுத ஏவப்படுவாளேயல்லாமல், இதில் ஓர் ஆண் பிள்ளை நேரம்போக்க ஏதொன்றுமில்லை" என்கிறாள் இந்நாவலின் தலைமகள் கண்மணி. இறக்குந் தறுவாயில் அவள் வாய்ப்பிறப்பு அது. எனினும், இந்நாவலாசிரியரோ "புகழ் பூத்த நியாயதுரந்தராகவும் பூஜ்யராகவும் அறிஞராகவும் திகழ்ந்த கலாநிதி ஐசாக் தம்பையாவின் மனைவியாரான மங்களநாயகம் தம்பையா" ஆவார்.

பருத்தித்துறை ஜே.ரி. அப்பாப்பிள்ளை "நூற் பிரயோகம்" என்று தலைப்பிட்டு இந்நாவலுக்கு எழுதிய முன்னுரையில், "தின்னத் தின்னத் தெவிட்டாத தெள்ளமுதுபோல, இந்நூலும் வாசிப்போர்க்கு எஞ்ஞான்றும் பிரீதியே கொடுக்குமென்றும், வாசிக்கும் பொருட்டு இதனைக் கையிலேந்தினோர், முற்றும் வாசியாது கைநெகிழவிடுதல் கூடா தென்றுஞ் சற்றுமையமின்றித் துணி கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்துணிபு முற்றிலும் உண்மை என்பது எமது சொந்த அனுபவம்.

நாவலின் கருவை அப்பாப்பிள்ளை ஒரே வசனத்தில் எடுத்துரைத்துள்ளார்: "தம்முடைய அரிய உதரக்கனிகளாகிய பெண்பிள்ளைகளைத் தெய்வ பயமற்ற துட்டர்கையில் மனைவியராகக் கொடுக் கும்படி பெரும்பாலுமேவி விடுகின்ற பொருளாசையென்னுங் கொடிய நோய் வாய்ப்பட்டு வருந்துந் தந்தைகளது நிலமையைக்கண்டு பரிதாபித்து அரிய சற்போதகமாகிய மருந்தை இனிய சரித்திர ரூபத்துட் பொதிந்து ஆசிரியர் கொடுத்திருக் கின்றார்."

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் (1914–ல்) வெளிவந்த இந்த நாவலின் பிரதி ஒன்றை, இலங்கை முழுவதும் அப்பழுக்கற்ற காட்டுமிராண்டித்தனம் மேலோங்கிய அண்மைக் காலகட்டத்தில், பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அரும்பாடுபட்டுக் கட்டிக் காத்து வந்துள்ளார். பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ்ப்பாணம் "புனைவகம்" ஊடாக அதனை மீளப் பதிப்பித்துள்ளார். விலை ரூபா 475.

எத்துணை அரிய காலகட்டத்தில் இந்த நாவல் தலைகாட்டியது என்பதற்கு, அதன் முதற் பந்தியே சான்று பகர்கிறது: இலங்கையின் முடியாய் விளங்கும் யாழ்ப்பாண நாட்டிலே கல்விச்சாலைகளும் செல்வப் பிரபுக்களும் மலிந்து பொலிந்து விளங்குமோர் சிறு கிராமம் உண்டு. இக்கிராமத்தில் பசுமையான புற் கம்பளத்தால் மூடப்பட்ட மைதான வெளிகளையும் குளிர்ந்த நிழல்கொடுக்குஞ் சோலைகளையும் ஆங்காங்கே பலவகைக் கனிகொடுக்கும் ஏராளமான விருட்சங்களையும் இவ்விருட்சங்களின் கனிகளைக் களிப்போடுண்டு சந்தோஷத்துடன் பாடும் பலவர்ணப் பட்சிசாலங்களையும் அழகிய தாமரைத் தடாகங்களை யும் அத்தடாகங்களில் குருவியினங்கள் வந்து மிகு மகிழ்ச்சியோடு கூடுவதையும் அரிய சுகந்தங் கொடுக்கும் மல்லிகை, முல்லை, செவ்வந்தி, செண்பகம், மகிழ், மருக்கொழுந்து, திருவாத்தி, றோசா முதலியன நிறைந்த பூங்காவனங்களையும் அப்பூங்கா வனங்களில் இனிய கீதங்களை இசைக்கும் வண்டினங் களையும் அவை செடிக்குச்செடி புட்பத்திற்குப்புட்பம் பறந்து பலவர்ணமாய் இயங்கிக்கொண்டிருப்பதையும் எந்நேரமும் இன்பமான குளிர்காற்றுப் பூங்காவனங் களிலும் விருட்சங்களிலும் செடிகளிலும் வீழ்ந்து கிசுகிசுவென்று வீசிக்கொண்டிருப்பதையும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய பெரிய தேவாலயங்களும் கோயில்களும் கல்விச் சாலைகளும் வீடுகளும் மற்றும் பாரிய கட்டடங்களும் இக்கிராமத்திற் கூடாகச் செல்பவர்களின் கண்ணை கவராதுவிடா. செழிப்புஞ் சிறப்பும் நிறைந்தோங்கும் இக்கிராமத்திலுள்ள விருட்சங்களுக்கும் பயன்களுக்கும் மழைத்தாழ்ச்சியான காலத்திற் கமக்காரர் நீர் பாய்ச்சுவார்கள். சுருக்கிக்கூறின் இக்கிராமம் ஏதேன் தோட்டத்தை நிகர்த்ததென்னலாம்."

இந்த நாவலில் "யாழ்ப்பாணம்" திரும்பத் திரும்ப "யாழ்ப்பாண நாடு" என்று குறிப்பிடப்படுகிறது. இது யாழ்ப்பாண வரலாற்றின் தனித்துவத்தை உணர்த்தும் மொழிவழக்கு. அத்தகைய நாட்டில் மக்களை வேட்டையாடும் நோக்குடன் பல்வேறு தரப்புகள் தம் படைக்கலங்களுடன் பல திசைகளுக்கும் சென்றுவந்துள்ள அண்மைக் காலகட்டத்தில், "சிலர் வேட்டையாடும் நோக்கமாய்ப் பல திசைகளுக்குந் தம் துப்பாக்கிகளுடன் சென்ற" அன்றைய காலகட்டத்தை விதந்துரைக்கும் இந்நாவலை நயந்துவக்க நேர்ந்தமை எத்துணை முரண்நகை!

"கண்மணியைக் கண்ணுற்றது" என்னும் முதலாம் அத்தியாயத்தில், அரசாங்க உத்தியோகம் சார்ந்த சமூக ஏற்றத்தாழ்வு வெளிப்படுகிறது. தகப்பன் சுப்பிரமணியர் அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டது குறித்து மகள் கண்மணி கூறுகிறாள்: "ஐயா! ...நாங்கள் உத்தியோகத்தை இழந்துவிடச் செய்ததும், மனுஷர் பார்வையில் தங்களைக் கடவுள் மானபங்கப்படுத்தியதும், பெருந்துக்கமும் வெட்கமுமாயிருக்கின்றது." அதற்கு, "கண்மணீ! ... உலகத்தவர்களின் கண்முன் நான் மானவீனப்பட்ட பொழுதிலும்..." கடவுள் தன்னைக் கைவிடவில்லை என்று அவளுக்கு ஆறுதல் கூறுகிறார் தகப்பன். "அருளப்பா" என்னும் 2ம் அத்தியாயத்தில் அருளப்பாவின் தகப்பன் கைலாசபிள்ளை இடும் முழக்கத்தில் புலப்படும் உடைமை, உத்தியோகம், குலம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் இன்றும் செல்லுபடியாகும்:

"நீ சுப்பிரமணியரின் மகளை விவாகஞ்செய்ய நினைத்திருக்கிறாயென்பதாகக் கேள்விப்பட்டேன். உன்னைப்போல் மடையனை நான் காணவில்லை. சுப்பிரமணியரின் குலமென்ன? அவரிடம் என்ன சீதனம் பெறலாமென்று எண்ணியிருக்கிறாய்? அவர் அரசாட்சி உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்டுச் "சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே" என்று திரிந்து சிறிது காலத்திற்கு முன் சொற்ப முதலுடன் வியாபாரத்தில் கையிட்டார். உனக்கு சீதனம் தருவதற்கு அவருக்கு வழிவகையாது? முதலாவதாக நீ அவரின் குடிகுலத்தையும், எங்கள் குலத்தையுமெண்ணாது பெண்ணைக்கண்டு இன்னற்பட்டு எல்லாவற்றையும் மறந்து என்னெண்ணப்படி நடவாது அவளை மணம் முடிக்கத் தீர்மானித்தது எனக்கு நூதனமாயிருக்கிறது. ஆகா! பெருங் கெட்டிக்காரனாகவிருக்கிறாய். உன் மைத்துனி சற்குணவதிக்கு உன்னை மணஞ் செய்து வைக்க நான் தீர்மானித்திருப்பதையும், உனக்கோர் மைத்துனி இருப்பதையும் முற்றாய் மறந்து "மாடு நினைத்த இடத்தில் பட்டியடைக்கலாம்" (என்று) எண்ணினாய் போல் விளங்குகின்றது. பெற்று வளர்த்த உன் பெற்றாரின் விருப்பத்தைச் சற்றும் வினாவாது, சுப்பிரமணியரின் மகளை விவாகஞ்செய்யவா யோசித்து இவரிடம் தூதுசொல்லிவிட்டாய்? மடத்தனமான எண்ணங்களை விட்டுப்போட்டு என்முன் நில்லாது போய்விடு."


மகன் அருளப்பாவின் நிலைப்பாடு அதற்கு நேரெதிர்மாறானது மட்டுமல்ல, என்றென்றும் செல்லுபடியாக வல்லது. அவன் தாயிடம் சொல்லுகிறான்: "அம்மா!... சுப்பிரமணியரை அரசாட்சியார் உத்தியோகத்திலிருந்து அநியாயமாய் விலக்கியது எனக்கு நல்லாய்த் தெரியும். அவர் களவெடுத்ததால் அல்லது இழிவான செய்கையைச் செய்ததால் விலக்கப்படவில்லை. தம் துரைமாருக்குச் சாஷ்டாங்கஞ்செய்து அடிபணியாததால் விலக்கப்பட்டவரென்றும், நீதி, நெறி நேர்மை நிறைந்தவராதலால் துரைமாருடன் நியாயமாய் எதிர்த்து வாதாடி வந்தவரென்றும் விசாரணையில் அறிந்தேன். அப்படிப்பட்ட குணம் வியக்கப்படதக்கதன்றி இழிபானதல்ல. அவர் இப்போது வியாபார முயற்சியிற் கையிட்டு முன்னிருந்ததிலும் நேர்த்தியாகவிருக்கிறார். சீதனம் மோசமில்லாமற் தருவார். எனக்குச் சீதனத்தைப் பற்றிக் காரியமில்லை. அவரின் மகளை நான் கண்டு அவள் அழகானவளென்றும், அவள் முகத்தோற்றத்திலிருந்து நற்குணசாலியென்றும் நன்றாய் மட்டிட்டுக் கொண்டேன். அவளுக்குச் சாதாரண கல்வியறிவு உண்டென்றும் விசாரணையில் அறிந்தேன். இம்மூன்று இலட்சணங்களுமிருப்பதால் அப்பெண்ணை நான் விவாகம் முடிப்பதற்கு நீங்கள் தடைசொல்ல நியாயமில்லை. சீதனத்தை ஒரு பெருங் காரியமாய்க் கவனிக்கலாமா? ஐயா சுப்பிரமணியரின் குடிகுலத்தையிட்டு இரண்டாந் தரமாகப் பேசினார். சாதி பார்ப்பதைப் போல் மடைமை ஒன்றுமில்லை. "குலத்தளவேயாகுங் குணம்" என்றபடி ஒவ்வொருவரின நடையினாலேயே அவரவர் குலம் விளங்கும். சுப்பிரமணியரின் விசேஷமான குணத்தையிட்டு வியந்து பேசாதார் யார்? எவரும் அவரையொரு நற்குணசாலியென நன்குமதித்து நடத்துகிறார்கள். அவரோர் சிறு வியாபாரியாயிருந்த போதிலும் அவருக்கு நடக்கும் மதிப்புப் பெரிய உத்தியோகத்தர்களுக்கில்லை. இதை நீங்கள் விசாரித்தறிந்து கொள்ளலாம். இன்னும் எங்களுக்கெத்தனைபேர் வசை சொல்லுகிறார்கள்; எந்தக் குடும்பத்தைத்தான் குற்றஞ் சொல்லாதும் வசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாதும் விட்டிருக்கிறார்கள். எங்களுக்கு வசை சொன்னதை என் காதாரக் கேட்டிருக்கிறேன். சுப்பிரமணியருக்கும் அப்படியே யாதும் வசை சொன்னதை ஐயா கேட்டிருக்கிறபடியால்தான் அவரையிட்டு இழிவாய்ப் பேசினாராக்கும். ஆண்சாதி பெண்சாதியென இருசாதிகளன்றி வேறுசாதிகளிருப்பதை நான் விசுவாசிக்கவில்லை. அப்படித்தான் சாதியென நீங்கள் நின்றாலும், சுப்பிரமணியரையும் வேளாளரென்றுதான் யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். நாங்களும் வேளாளர்தான், அவரும் வேளாளர்தான். நாங்கள் அவரிலும் உயர்வென்று எப்படிச் சொல்லலாம்? நான் முன்சொல்லியபடி உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பலரும் வசை சொல்வது எம் ஊர் வழக்கம். ஆனபடியால் சாதியை முக்கியமாய்க் கவனிப்பதை நாங்கள் விட்டுப்போட வேண்டும்." வேறொரு தருணத்தில் "...ஆஸ்தி இல்லாக் குறை ஒன்றைத்தவிர மற்ற விஷயங்களில் அவள் ஒன்றாலுந் தாழ்ச்சியற்றவளென்பதற் கையமில்லை..." என்கிறான் அருளப்பா.

அருளப்பா–கண்மணி திருமணம் கண்டு வெகுண்டெழுந்து, தன் மகள்வீடு சென்று தங்கியிருந்த கைலாசபிள்ளையிடம் செல்லும் கண்மணி, "அவரை வீட்டுக்கு வரும்படி தயவாய்க் கேட்டாள். அவளின் தயாள குணத்தையும் ஆதரவையும், பரிதாப கோலத்தையும் கண்டு, அவள்மேல் மனமிரங்கி மறுத்துக்கொள்ள இயலாதவராய்த் தாம் வருவதாய் வாக்கிட்டு, அவளை அனுப்பி வைத்தார். அன்றே அவர் கண்மணியை முதன்முறை கண்டார். அருளப்பா சொல்லை மீறித்தன் னெண்ணத்திற்கு ஆஸ்தி பணங்குறைந்த ஒரு பெண்ணை மணம் முடித்தபோதிலும், அவள் குணம் ஆஸ்தியிலும் மேலானதென்றெண்ணிப் புறப்பட்டுப் போய், அன்று முதலாக அவரும் அவர் மனைவியும் அருளப்பாவுடன் வசித்து வந்தார்கள்." மாமனாரின் நிலைப்பாடு சற்று மாறியமை கண்மணியைப் பொறுத்தவரை சாதகமான ஒன்று. அதேவேளை கணவனின் நிலைப்பாடு உடனடியாகவே அவளுக்குப் பாதகமாய் மாறுகிறது:

"...தான் எவ்வளவோ தன் புருஷனை நேசித்து, தன்னை அவனுக்கு முற்றாய் ஒப்புக்கொடுத்தும், தன்னைப் புறத்திபண்ணித் தங்களிரகசியங்களை மறைத்துக்கொள்வதை நினைத்து (அவள்) மிகத் துன்புற்றாள்... தன் நிலைமையிலும் தன் மனைவியின் நிலைமை மிகக்கீழானதென்று அருளப்பா எண்ணி அவளை ஒருபோதும் அவளின் தகப்பனார் வீட்டுக்குக் கூட்டிப்போவதில்லை... சில சமயங்களிற் கண்மணி தன் நிலைமைக்கேற்ற பெண்ணல்லவென்றும், தான் ஒரு ஐசுவரியவானின் மகளை மணஞ்செய்யத் தகுதியுள்ளவனென்றுஞ் சொல்வதுண்டு... "என் தகப்பனாரின் விருப்பத்திற்கு மாறாய் உன்னை நான் விவாகஞ்



செய்துகொண்டதால், அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பல நயங்களையுமிழந்தேன். என் ஒரே யொரு சகோதரியின் ஒற்றுமையையுமிழந்தேன். உன்னை விவாகஞ்செய்து கொண்டதால் எனக்கு ஒரு நயஞ்சுகமில்லை... உனக்கு மனுஷர் முகத்தில் முழிக்க வெட்கமில்லையா? பூரணத்தோடு நீயுஞ் சரிவந்தவள் போல் எதிர்த்துப் பேசத் துணிந்ததெப்படி?" கண்மணியின் தமையன் பொன்னுத்துரையையும் அருளப்பா ஏசுகிறான்"

"...உன் எளிய குலத்துக்கடுத்த குணம் வெளித்தோற்றப்படாது போகுமா? ... எங்கள் குலத்துக்கீனமான செய்கையை நான் மதிமயங்கிச் செய்து கொண்டதாலடையும் இலச்சை இம்மட்டென் றில்லை. உன் தங்கை தன் குலத்துக்கேற்ற களவு முதலிய இழிவான செய்கைகளைச் செய்து என்னையும் மனுஷர் கண்ணில் விழிக்காமல் செய்கிறாள். என்னைப் பிடித்த சனியன் எப்போது தொலையுமோ அறியேன்... இச்சமயமே நீங்களிருவரும் என் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விடாதிருந்தாற் தகுந்த ஆக்கினைக்குள்ளாவது நிச்சயம்."

கண்மணி தன் கணவனிடம் அடியுண்டு, உதையுண்டு, இதயம் நொறுங்குண்டு இறக்குந் தறுவாயில் அவன் மனமாற்றத்துக்கு உள்ளாகி, தான் இழைத்த கொடுமைகளுக்காக அவளிடம் மன்னிப்புக் கோருகிறான். அவள் இறந்தபின் அவளுடைய உடலைப் பார்த்து, "... உனக்குத் துயரமே ஆடையாகவும் கண்ணீரே ஆகாரமாகவும் தந்தேன்..." என்று அலறுகிறான். அரியதொரு பதுமை போன்ற கண்மணியின் "நொறுங்குண்ட இருதயம்" எந்த ஒரு வாசகரின் உள்ளத்தையும் கசிந்துருகச்செய்யும்.

குலோத்துங்கரின் மகள் பொன்மணி கைலாசபிள்ளையின் அடுத்த மகன் அப்பாத்துரையை மணம் முடிக்க மறுப்புத் தெரிவித்த வீராங்கனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாள். அப்பாத்துரை கொடுத்தனுப்பிய "ஓர் சுகந்த வாசனைக் குப்பியும், இன்னுஞ் சில சாமான்களும்... தங்கக் காப்பும் ... with my fondest love" என்று பொறித்த கடதாசித் துண்டும் குலோத்துங்கர் கண்ணில் படவே, "வலியவந்த சீதேவியைக் காலாற்தள்ளும் மூதேவியை என்ன செய்யலாம் என விசனத்துடன் சொன்னார்."

பொன்மணி அதற்கு மசியவில்லை: "நான் என் மானத்தைக் காக்கவேண்டியது மிக அவசியம்... ஐசுவரியத்தை நான் பெரிதாயெண்ணவில்லை. ஐசுவரியம் ஓடும் புகையையும், எழும்பும் நீர்க் குமிழியையும் நிகர்த்தது... ஐசுவரியவானிலும் குணசாலியே ஆயிரம் மடங்கு விசேஷித்தவன்... அப்பாத்துரையின் ஐசுவரியத்தையிட்டு நாங்கள் அகந்தை கொள்வோமானால், எங்களுக்கும் அழிவுகாலம்..." என்று முழங்குகிறாள்.

தகப்பனோ, "பொன்மணி சொல்வதெல்லாம் நியாயமாயிருக்கின்றதே!" என்று முணுமுணுக்கிறார். நிலைமையை அறிந்த சம்பந்திகளோ, "ஆடு நினைத்த இடத்திலா பட்டியடைக்கிறது? ... பெண்ணுக்குமொரு மூச்சா? வெட்கமான வார்த்தையை வெளியில் விடாதேயும். பெண்புத்தி கேட்பவரிற் பேதையரில்லை... இவ்வாறு ஒவ்வொருவரும் பகிடிபண்ணத் தொடங்கினார்கள்..." உரோசம் கொண்ட குலோத்துங்கர் சட்டுப்புட்டென்று திருமணத்தை ஒப்பேற்ற உத்தரவு பிறப்பிக்கிறார்.

கடவுள்மீது கொண்ட நம்பிக்கை ஆட்களையும், சமூகத்தையும் நெறிப்படுத்திய விதம் இந்நாவல் முழுவதும் இடைவிடாது விதந்தோதப்பட்டுள்ளது. அதாவது, இன்பமும் துன்பமும் இறைவன் வகுத்த விதிப்படி நிகழ்பவை. அவற்றைத் திறனாயும் அருகதை மாந்தருக்கில்லை! "...பாதிரியாரின் எழுப்புதலான பிரசங்கம்... எழுப்புதலான போதனை..." எத்தகைய தாக்கத்தை விளைவித்தாலும், கண்மணி எந்த மொழி கொண்டு கடவுளிடமும் தெய்வத்திடமும் முறையிட்டாளோ அந்த மொழி கொண்டே தேவனிடமும் கர்த்தரிடமும் முறையிடுகிறாள்! அதேவேளை "யாழ்ப்பாண நாட்டில்" வாழும் முகம்மதியாரையும் நாவலாசிரியர் நினைவூட்டத் தவறவில்லை: (அருளப்பா) "பொன்னுத்துரைக்கு **சலாம்** சொல்லிப் புறப்பட்டான்."

இந்த நாவலில் கண்மணி என்னும் பதுமைக்கு நேரும் கதி எந்த ஒரு மங்கைக்கும் நேரக்கூடாது என்பதை எந்த வாசகரும் ஒப்புக்கொள்வர். கண்மணி ஒரு பழைமைப்பெண் என்றால், அவளுடைய உயிர்த் தோழியாகிய பொன்மணி ஒரு புதுமைப்பெண். நங்கையர் எவரும் பொன்மணிபோல் விளங்கவும் இலங்கவும் விழைவர் என்பதில் ஐயமில்லை. கண்மணியின் தமையன் பொன்னுத்துரையும் பொன்மணியும் ஒருவரை ஒருவர் உளமார நேசிக்கிறார்கள். தொடக்கத்தில் இரு குடும்பங்களும் அதை ஏற்றுக்கொண்டன. காலப்போக்கில் சொத்துப்பத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வினால், குலோத்துங்கர் பொன்னுத் துரையை விடுத்து, ("மேட்டிமையுங் கெறுவமும்" மிகுந்த) அப்பாத்துரை தனக்கு மருமகனாகுவதை வரவேற்கிறார். அதுவே தனக்கு மானம் என்பது அவர் நிலைப்பாடு. அதற்குப் பொன்மணி இம்மியும் விட்டுக் கொடுக்கவில்லை. பொன்னுத்துரையை மணப்பதே தனக்கு மானம் என்பது அவள் நிலைப்பாடு. மனச்சாட்சிக்கு மாறாகச் செய்யும் தியாகத்துக்கு அவளுடைய அகராதியில் இடமில்லை. அப்பாத் துரைக்குத் தாலிகட்டக் குறித்த வேளைக்குச் சற்று முன்னதாக அவள் ஆண்வேடம் பூண்டு, வீட்டை விட்டு நழுவி, திருமண வண்டிகளோடு வண்டியாக (பொன்னுத்துரையாலும், நவரத்தினத்தாலும்) நிறுத்தப்பட்டிருந்த வண்டியின் "முன் அணியத்தில் வீற்றிருந்து கடிவாளவார் பிடித்து மரியாதையாய்த் தங்கள் கரத்தையை எல்லா வண்டிகளுக்கும் பின் செலுத்திப் போனாள்."

பொன்னுத்துரை, பொன்மணி, கண்மணி, நவரத்தினம் அனைவரும் மண்டைதீவு சென்று தங்கியிருக்கும்பொழுது, பொன்னுத்துரையின் முதலாளியார் வந்து பொன்மணியை விளித்துச் சொல்லுகிறார்: "மகளே! உனது விலையேறப் பெற்ற நிதானத்தையும் நிதார்த்தத்தையும் நான் மிகவும் மெச்சிக்கொள்கிறேன். நான் உனது தகப்பனாயிருப்பேனேயாகில், உன் செய்கைகளையிட்டுப் பெருமையுடையவனாயிருப்பேன்..."

"உன்னுடைய செய்கைகள் படிப்பினைக் குரியனவல்லவா?" என்று வினவும் நவரத்தினத்துக்கு இப்படி விடையளிக்கிறாள் பொன்மணி: "உலகம் என்னைப் பற்றி நன்மையாய்ப் பேசிக் கொள்ளுமென்பது ஐயமான காரியம். சிலருக்கு எனது செய்கை மிகவுங் கூடாததாகத் தோற்றக்கூடும். ஆனால் நான் என்னுடைய மனதிற்கு நீதியென்று கண்டதைச் செய்தேன்." நவரத்தினத்தின் பதிலில் ஒரு திறனாய்வாளரின் தொனி பிறக்கிறது: "பொன்மணி! உன்னுடைய செய்கைகள் மெத்த அபூர்வமானவைகள். நீதி, நிதார்த்தம், நிதானம், மொழி தவறாத வாக்கு இவையென்பதை உனது துணிகரமான செய்கையால் எல்லாருக்கும் நல்லாய் விளக்கியிருக்கிறாய். ஆரும் மடையர் உன்னிற் குற்றஞ் சொல்வார்களேயல்லாமல், காரியத்தை விளங்கக்கூடிய புத்தியுள்ளவர்கள் ஒருக்காலுங் குற்றஞ் சொல்ல மாட்டார்கள். உன்னுடைய மேன்மையானவும் துணிகரமானவுஞ் செய்கை என்னை மெத்தவும் பெருமைக்குட் படுத்துகிறது." அதற்குப் பொன்மணியின் அடக்கமான பதில்: "கண்மணியின் பொறுமையே மிகவும் அபூர்வ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. எனது செய்கைகள் எல்லாம் அவளுடைய பொறுமைக்கு எம்மாத்திரம்?"

இந்த நாவலில் ஆசிரியர்–கூற்றுகள் மட்டுமல்ல, உரையாடல்களும் எழுத்துத் தமிழில் அமைந்துள்ளன. அதில் பால்படு சமத்துவம் மிளிர்கிறது: "...இதைக்கேட்ட **தாயார்** "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்றவன் சீலமாய்ப் பயந்து, என்ன செய்யலாமென்று தெரியாது திகைப்புற்றுத் **தம்** கணவனிடம் சென்று அருளப்பாவின் தீர்மானங்களையிட்டு விபரித்துப் **பேசினார்...**" மேலும்: "...அருளப்பாவை அவன் **மாமியார் விருந்துக் கழைத்தார்...**" அத்துடன், தேவைப்படும் இடங்களில் மரியாதையான யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்மணியை மணம் புரிய முன்னர் அவளுடைய தமையன் பொன்னுத்துரை யிடம் அருளப்பா வினவுகிறான்: "உமது சகோதரியுடைய சுகமெப்படி? **அவ அறிவு மயங்கிக் கிடந்தா.** இப்போ அறிவு தெளிந்து **எழுந்திருக்கிறாவா?**"

ஈழத்தில் என்றென்றும் நிலையூன்றிய மரியாதையான பேச்சுவழக்குகள் "அம்மா வந்தா, அக்கா போனா" என்றெல்லாம் அமைந்திருந்தும் கூட, ஈழத்துப் புனைகதையாளர்கள் அவற்றை அவ்வாறு எழுதுவது அரிது. அவர்கள் தமிழ்நாட்டுப் புனைகதை யாளர்களைப் பின்பற்றி, பெரிதும் "அம்மா வந்தாள், அக்கா போனாள்" என்றே எழுதி வந்துள்ளார்கள். எனினும் அ. முத்துலிங்கம் உட்பட, தற்பொழுது ஈழத் தமிழில் எழுதும் புனைகதையாளர்கள் சிலர் ஆசிரியர்–கூற்றுகளில் "அம்மா வந்தார், அக்கா போனார்" என்று மரியாதையும், பால்படு சமத்துவமும் புகுத்தி எழுதி வருவது கவனிக்கத்தக்கது.

"ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகுந்த ஆற்ற லுடையவராகத் திகழ்ந்த மங்களநாயகம் தம்பையா" அவர்களின் உள்ளக்கிடக்கை அவ்வப்பொழுது ஆங்கிலத்தில் கிளர்ந்தெழுந்து தமிழுக்குள் புதையுண்டுள்ளது. அந்திமாலைப் பொழுதை அவர் "... ஒரு அஸ்தமனநேர வெளிச்சம், ... சூரிய அஸ்தமனநேர வெளிச்சம்..." என்று குறிப்பிட்டுள்ளார். இதன் தோற்றுவாய்: twilight. உலகத்தில் உள்ளவை அனைத்தையும் அவர் "...சூரியன் கீழ்க் கண்ட தெல்லாம்..." என்று குறிப்பிட்டுள்ளார் (everything under the sun). உயிர்ப்பூட்டும் போதனையை "எழுப்புதலான போதனை... எழுப்புதலான பிரசங்கம்" என்று குறிப்பிட்டுள்ளார் (inspiring sermon அல்லது discourse). உன்னுடைய மேன்மையான, துணிகரமான செய்கை என்பதை (ஆங்கில சொல்தொடரியலால் ஆட் கொள்ளப்பட்டு) "...உன்னுடைய மேன்மையானவும் துணிகரமானவுஞ் செய்கை..." என்று அவர் குறிப்பிட்டது, your noble and bold action போன்ற ஓர் ஆங்கிலத் தொடரையே.

பொன்னுத்துரையும் பொன்மணியும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். எனினும் அதனை "காதல்" என்று நாவலாசிரியர் குறிப்பிடவில்லை. இந்நாவலில் "காதல்" என்னும் சொல் ஒரே ஒரு தடவையே எடுத்தாளப்பட்டுள்ளது. அதுகூட, பொருளாசை என்னும் கருத்துப்படவே: "... அருளப்பாவின் கேள்விப்படி அவனுக்கென்று விடப்பட்ட பங்கையும் கொடாதபடி (தகப்பன்) பின்போட்டுக்கொண்டு வந்தார். ஆயின் அருளப்பா அதே **காதலாயிருந்து** நெடுகலும் தொந்தரவு செய்துகொண்டு வந்ததால்..."

ஏற்கெனவே "வண்டி, திருக்கல், ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி" போன்ற சொற்கள் வழங்கும்: அதேவேளை, cart என்னும் ஆங்கிலச் சொல் "கரத்தை" என்னும் உருவில் தமிழுக்குள் புகுந்து இந்த நாவலிலும் பிற படைப்புகளிலும் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

இந்த நாவலின் தலையாய பாத்திரங்கள் அனைத்தும் சைவத்தை விடுத்து கிறிஸ்தவத்துக்கு மாறுகின்றன. அருளப்பா "கிறிஸ்துமார்க்கத்தைத் தழுவிப் பூரண விசுவாசத்துடன் உத்தம சீவியம் நடத்தி ஆறுதலடைந்தான்." எனினும் அவன் மதம் மாற முன்னரே மனம் மாறிவிட்டான். கண்மணி தாய் மனைக்கு மீண்ட பின்னர் அருளப்பாவின் மனச்சாட்சி அவனை இடைவிடாது உறுத்துகிறது. மனச்சாட்சியே இந்நாவலின் பாத்திரங்கள் உட்பட அனைவரையும் பெரிதும் நெறிப்படுத்துகிறது. மனச்சாட்சி உடை யோர்க்கு எம்மதமும் சம்மதம். எனினும் இந்நாவலா சிரியர் வாசகர்க்கு ஈயும் பரிகாரம் வேறு: "அரிய சற்போதகமாகிய மருந்தை இனிய சரித்திர ரூபத்துட் பொதிந்து ஆசிரியர் கொடுத்திருக்கின்றார்."

அத்தகைய பரிகாரத்தை ஏற்கெனவே ஆண்டவர் ஈந்ததுண்டு. எனினும், "மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனை களெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்கு வதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது. அப்பொழுது ஆண்டவர், "...இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன்" என்றார்"

"...ஆண்டவர் நறுமணத்தை நுகர்ந்து, தமக்குள் சொல்லிக்கொண்டது: "மனிதரின் இதயச் சிந்தனை இளமையிலிருந்தே தீமையை உருவாக்குகின்றது..." (**திருவிவிலியம்**, பழைய ஏற்பாடு, பொது மொழி பெயர்ப்பு, TNBCLC, திண்டிவனம், 1999, ப: 8 – 11).

நாவலசிரியர் மங்களநாயகம் தம்பையா ஈயும் பரிகாரம் எதுவாயினும், "நொறுங்குண்ட இருதயம்" ஓர் அரிய நாவல் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவகாந்தன்

# ஸரமகோதாசனும் கரப்பான் பூச்சிகளும்

சித்திரை மாதக் கடூர வெய்யிலின் தாக்கத்தில் கொதி மண்டலமாயிருந்த பூமி குளிரத் துவங்கியிருந்த ஒரு மாலை நேரத்தில் நான் ஸரமகோதாசனைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

நித்திரையில் இருந்திருப்பான், நான்கு ஐந்து முறை கதவைத் தட்டிய பிறகு கதவைத் திறந்து, "உள்ளே வா" என்றான்.

மேலே மாமரக் கிளைகள் கவிந்து நின்றிருந்தன. பக்கத்தேயும் பின்னேயும் ஈரப்பலா மரங்கள். கிணற்றடியில் கமுகுகளும் செவ்விளநீர்க் கன்றுகளும் வாழைகளும். பராமரிப்புக் குறைந்திருந் தாலும் செழிப்பாகவே நின்றிருந்தன. முற்றத்தில் கொழுத்த ஓர் அரசமரம். அந்தமாதிரிக் காட்சிகள் நகரத்தில் பெரும்பாலான இடங்களில் கிடைத்துவிடாது. அதனால், "நான் வெளியிலேயே இருக்கிறன்" எனச் சொல்ல, குளித்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டு விரைந்தான்.

நான் அவனது அறைக்கு முன்னால் முற்றத்தில் நின்ற அசோகமரத்தைச் சுற்றிப் போட்டிருந்த கொங்கிறீற் கட்டில் அமர்ந்தேன்.

பெரிய வீட்டின் கதவு சாத்தியேயிருந்தது. மிஸிஸ் பெர்னாண்டோ எங்கோ வெளியே போயிருக் கிறாள் என்று தெரிந்ததில் மனத்தில் ஓர் ஆசுவாசம். இல்லாவிட்டால் உள்ளே வந்திரு என்று வற்புறுத்தி அழைத்துப்போய், உனது சிநேகிதன் இரவு இரண்டு மணிவரை லைட்டைப் போட்டுக்கொண்டு கரண்டை வீணாக்குகிறான் என்றோ, அவன் கடையில் வாங்கி வந்து சாப்பிடும் சாப்பாட்டு மணம் குடலைப் பிடுங்கு கிறது, காலையில் வெளியே வந்தால் எலிகள் இழுத்து வந்து போட்ட எலும்புத் துண்டுகள் முற்றம் முழுக்க பரவிக் கிடக்கிறதெனவோ ஏதாவது குறையைச் சொல்லிக்கொண்டு இருந்திருப்பாள்.

ஸரமகோதாசனைப் பற்றிச் சொல்ல அவளிடம் எப்போதும் ஒரு குறை இருந்து கொண்டிருக் கிறதே யென நான்கூட பலதடவை வியந்திருக்கிறேன். குறையாகச் சொல்ல ஒன்றுமில்லாத நாளில்தான் அவனைப்பற்றி ஏதாவது விசாரித்திருக்கிறாள். ஏன் இன்னும் உனது சிநேகிதன் கலியாணம் செய்ய வில்லையென்று கேட்பாள். இல்லையேல் சகோதரங்கள் இருக்கின்றன என்கிறாயே, அப்படி யாரும் வந்து போவதில்லையே, இவன்கூட போய்வருகிற மாதிரித் தெரியவில்லையே, ஏன் எனக் கேட்பாள். ஒரு பரஸ்பர உசாவுகையை மீறிய கரிசனை யோடுதான் அவள் அவ்வாறெல்லாம் கேட்பதாகத் தோன்றியதில், நானும் விகற்பமில்லாமல் எல்லா வற்றையும் மறைக்காமலே சொல்லியிருக்கிறேன்.

அதற்காக ஸரமகோதாசன் புறுபுறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

வியர்வை அரும்புநிலை காட்டிக் கொண்டிருந்ததில் மெல்லிய காற்றின் அசைவும் சுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது. சலசலவென மேலே அரசமிலைகள் எழுப்பிய சத்தம் சூழவும் செறிந்துகொண்டிருந்தது. சுமார் நூறு யாருக்கு அப்பால் பிரதானசாலையில் வாகனங்களும், மக்களும் கிளர்த்திய இரைச்சல் அந்த அரசமிலைச் சரசரப்பில் அடங்கிவிட்டிருந்ததாகத் தோன்றியது. சத்தமே சத்தத்தை அடக்கி நிசப்தத்தை விழுத்திய அற்புதமான அந்த தருணத்தை மனத்துள் எண்ணியபடி நான்.

நேரமாக ஆக சற்று பொறுமை குறைந்து வந்து கொண்டிருந்தேன். ஸரமகோதாசன் வர தாமதமாவ தினால் மட்டுமில்லை, இந்தமாதிரி ஓர் இடத்தில் வந்து இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அமர்ந்திருக்க முடியப்போகிறது என்ற எண்ணத்தினாலுமாகும் அது.

இந்த இடத்துக்கு என்ன குறை? இங்கிருந்து ஏன் போகவேண்டுமென நினைக்கிறான்? எத்தனை மாதத்துக்கு ஒருதடவை இவன் வீடு மாறுவான்? பழைய இடம் சரியில்லை, வேலைக்கு வந்து போவது கஷ்டமாயிருக்கிறதென்று இரண்டு மாதங்களுக்கு முன்புதான் மட்டக்குளியாவிலிருந்து கிராண்ட் பாஸிலுள்ள இந்த வீட்டு அறைக்கு வந்திருந்தான். அதற்குள்ளேயே இவனுக்கு இந்த இடம் அலுத்துப் போனது. கடந்த பத்தாண்டு கொழும்பு வாழ்க்கையில் மாறிமாறி பதினைந்து இடங்களில் தங்கியவனை என்ன சொல்வது? நாற்பது வயதாகியும், இன்னும் திருமண மாகவில்லை. திருமணம் செய்கிற எண்ணமும் இல்லை. ஒரு மேசை, இரண்டு கதிரைகள், ஒரு கட்டில், அதற்கு மேல் போட ஒரு தும்பு மெத்தை, ஒரு ஸ்டவ், ஒரு கேத்தில், ஒரு அலுமினியப் பானை, இரண்டு அலுமினியச் சட்டிகள், இரண்டு எவர்சில்வர் அகப்பைகள் தவிர இவன் எடுத்துச்செல்ல வேறு தள பாடங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் இல்லையென்பது ஒரு வசதியேயில்லை இவனுக்கு. அதற்குப் பதிலாக ஆயிரம் நூல்களும், நூறு பழைய பேப்பர் கட்டுகளும் வைத்திருக்கிறான். அவற்றை ஏற்றி இறக்குவதிலுள்ள சிரமம் எனக்குத் தெரியும். இவன் வீடு மாறிய இரண்டு வேளைகளில் கூடவிருந்து பட்ட அனுபவத்தில் நானடைந்த ஞானத்தை இவனால் அந்த பதினைந்து தர அறை மாற்றங்களினாலும் ஏன் அடைய முடிய வில்லை?

போன ஞாயிறு விடுமுறையில் என்னை வீட்டிலும் இருக்கவிடாமல், "வா வீடு பாக்கவேணும், இஞ்ச படுத்தால் எனக்கு நித்திரை வருகுதில்லை, மச்சான்" எனச் சொல்லி, காலை பத்து மணியிலிருந்து மத்தியானம் இரண்டு மணிவரை என்னை இழுத் தடித்துக்கொண்டு திரிந்தான். தெருப் பெயரும் இல்லாமல், வீட்டு நம்பரும் தெரியாமல் யாரோ கொடுத்த இடக்குறிப்பை மட்டும் வைத்துக்கொண்டு கொட்டாஞ்சேனையில் ரஹீம் காக்காவின் வீட்டை



எப்படிக் கண்டுபிடிப்பது? எனக்குச் சீயெண்டு போய் விட்டது. திட்டினாலும் என்ன, அவனுக்கு கோபமா வரப்போகிறது? சிரித்தபடியே கேட்டுக்கொண்டு இருக்கப் போகிறான். பிறகு பேசியென்ன, திட்டியென்னவென்று நானும் அவன் அறை பார்த்து முடிக்குமட்டும் கூட இருந்துவிட்டுத்தான் வந்தேன்.

அந்தத் தெருவில் கடந்த பதினைந்து வருஷங்களாகக் குடியிருக்கிற எனக்கு ஏறக்குறைய அதேயளவு காலத்துக்கு மிஸிஸ் பெர்னாண்டோவை பழக்கமாகியிருந்தது. பார்த்து, இரண்டொரு வார்த்தைகள் பேசிய பழக்கம்தான். இரண்டு மகன்களில் இளையவனுக்கும் கல்யாணமாகி அவன் வேறு வீடு சென்ற பிறகு உண்டான தனிமையில் போலும், கண்டபோது லேசாகச் சிரித்து அண்மைக் காலத்தில் ஓர் அன்னியோன்யத்தைக் காட்டிக் கொண்டாள். அந்த நம்பிக்கையில்தான் நான்கு மாதங்களுக்கு மேலாக அறை வாடகைக்கு உண்டு என்ற அறிவிப்புப் பலகையிருந்த அந்த வீட்டுக்கு ஸரமகோதாசனுக்காக நான் அறை கேட்டு வந்தது.

ஒரு மாலைநேரத்தில் தன் மகன்களின் குடும்பத்துடன் தேநீர் அருந்திக்கொண்டிருந்த மிஸிஸ் பெர்னாண்டோ எனது நண்பனென்பதாலேயே தயக்கமின்றி அறையை வாடகைக்குத் தந்தாள். வீட்டோடு இணைந்திருந்த கராஜை அறையாகத் திருத்திக் கட்டிய அந்த இடத்துக்கு மாதத்துக்கு இரண்டாயிரத்து இருநூறு ரூபா வாடகை என்பது அதிகமென நான் தயங்கியபோது, ஸரமகோதாசன் தான் அது தனது கம்பெனிக்கு நடந்து போகிற தூரத்திலுள்ள வசதியைக் கருத்தில்கொண்டு "பேசாமல் வா, நாளைக்கே அட்வான்ஸைக் கொண்டுவந்து குடுத்திடுவம்" என இரண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில்லாமல் என்னை அடக்கினான்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்புவரை ஸரமகோதாசன் என்ற பெயரை பத்திரிகையிலோ சஞ்சிகை எதிலுமோ கண்டதாகத்தான் ஞாபக மிருந்தது. அந்தப் பெயரின் புதுமைக்காகவே அவனது எழுத்தை மினக்கெட்டு வாசித்துமிருக்கிறேன். அதிகமாகக் கவிதைகள்தான். சுமாராக இருப்பதாகவே தான் தோன்றியிருந்தது. நேரடியான சந்திப்பு எதிர்பாராதவிதமாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஓர் இலக்கிய விழாவில் ஏற்பட்டது. அந்த முகத்தை எங்கோ பார்த்திருப்பதாக நான் தடுமாற ஸரமகோதாசன்தான், "ஒரே ஊர் ஆக்கள் பஸ்ஸிலை கிஸ்ஸிலை இல்லாட்டி சந்தையிலையெண்டாலும் கண்டிருக்க ஏலும்தானே"யென்று கூறிச் சிரித்தான். அந்தப் பேச்சும் சிரிப்பும்தான் அவனை உடனடியாக என் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தன. "டேய், நீ முருகதாஸெல்லே" என நான் இருபது வருஷங்களுக்கு முந்திய பள்ளிக்கூட காலத்தை ஞாபகம் கொண்டேன். பிறகு கேட்டேன்: "அதென்ன, ஸரமகோதாசன்?"

"வித்தியாசமாய் இருக்கட்டுமனெண்டு வைச்சன்" என்றான்.

அன்றிலிருந்து விழுந்ததுதான் இந்த வளையம். என் காலிலே வட்டமாய், பொருத்து அற்றதாய், பிறர் கண்ணுக்குத் தெரியாததாய்க் கொழுவியிருக்கிறதே ஓர் இரும்பு வஸ்து, அதைத்தான் சொல்கிறேன்.

ஸரமகோ அபாரமான சிந்தனை ஆற்றலுள்ளவன். ஒரு விஷயத்திலே தீர்வு தேவையென்ற நிலையில் அவனிடம் அபிப்பிராயம் கேட்டால், யோசிச்சுச் சொல்கிறேன் என்றமாதிரிப் பதிலெதுவும் வராது. உடனேயே பிரச்சினையை விளக்கி தனது முடிவைக் கூறக்கூடிய ஆற்றல் அவனிடம் இருந்தது. ஞாபகசக்தியும் அதிகம். அவன் வேலைசெய்யும் பத்திரிகை அலுவலகத்தில், ஏதாவது அரசியல் நிகழ்வின் விபரங்களைத் தேடவேண்டியிருந்தால், ஆசிரியர் உட்பட, சகஊழியர்கள் யாவரும் அவனைத்தான் அணுகுவது. ஆண்டு, மாதம் அச்சொட்டாகச் சொல்வான். இலக்கிய, கலை விவரணப் பட விவகாரங்களில் அவனது கருத்துக்கள் மிகத் தீர்க்கமானவை. காலம்பூராவும் ஒரு தீவிர வாசகனாகவே இருந்து விடுவதற்காகத்தான் தனது தனிமையை அவன் அந்தளவு தீவிரமாய் திருமணமே செய்யாமல் உறுதிப்படுத்தினானோ என பல சமயங்களில் நான் எண்ணியதுண்டு.

அவன் கால்விலங்காக இருப்பதைப் பிரக்ஞையில் கொண்டுவருகிற நேரங்கள் அடிக்கடி நேரும். அவசரமாய்ச் செல்லவேண்டிய ஓர் இடத்துக்கு அவனுடன் சென்று அனுபவித்தால்தான் அது தெரியும். ஏன் கூட்டிவந்தோம் என்று வருத்தப்படுகிற அளவுக்கு ஆகிவிடும். அந்தளவு நிதானமான அசைவு. உடம்பு சற்று பெரிதான அவனுக்கு இயல்பென நினைக்கிற அளவுக்கும் அது இருக்காது. வேண்டுமென்றே அந்தமாதிரி மினக்கெடுத்துவதாகத் தோன்றும். அதனால்தான் அவனுடன் வேலைசெய்யும் திருமதி கண்மணி செல்வன், "உன்ரை விவேகத்துக்கு உன்னிட்ட கொஞ்சம் வேகம் மட்டும் இருந்திட்டா நீ எங்கையோ இருக்கவேண்டிய ஆள்" என்று சொல்லியிருக்கிறாள் போலும்.

அதுமட்டுமில்லை. எதையும் வித்தியாசமாகச் செய்வதென்பது அவனது மனநிலையே ஆகியிருந்தது. எப்படி அவ்வாறெல்லாம் அவனால் சிந்திக்கமுடிகிறதோ? மற்றவர்கள் யோசிக்காத ஊடுகள் கண்டு அந்த இடங்களில் அபிப்பிராயம் சொல்வதும், செயல்படுவதும் சிலநேரங்களில் அந்தத் தன்மைகளைச் சிலாகிக்கிற எனக்கே இம்சையாகி இருக்கின்றன. ஆனாலும் அவன் இவற்றையெல்லாம் வலிந்து செய்வதில்லை என்பதில்தான் இந்த நட்பு இவ்வளவு காலமும் இழுபட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

வீடு மாறுவதிலுள்ள சிரமத்தை விட்டுவிடலாம். ஒருமாத முன்னறிவித்தல் இல்லாமல், அடுத்த கிழமை அறையை விட்டுவிடப் போகிறேனென்றால், கொடுத்த முன்பணத்தை யார் தூக்கிக் கொடுத்துவிடப் போகிறார்கள்? மிஸிஸ் பெர்னாண்டோ முன்பணத்துக்கு எதுவும் செய்துவிடமாட்டாள்தான். ஆனாலும், நீ முன்னரே சொல்லி வைக்கவில்லை, வேறு யாராவது வாடகைக்கு வந்து தருகிற பணத்தில்தான் உனது முன்பணத்தைத் திருப்பித்தர இயலுமென்றோ, உடனடியாக இல்லை, இரண்டு வாரம் கழித்து வா என்றாலோ என்ன செய்வது?

நான் பேசி ஏதாவது ஒழுங்குசெய்வேன் என எண்ணியிருப்பானோ? பணமாகவும் எதுவும் உதவி செய்துவிட முடியாத நிலைமை எனக்கு. அதனால்தான் சொல்லியிருந்தேன், "அட்வான்ஸை திருப்பியெடுக்கிற பொறுப்பு உன்னோட" என்று. "அதை நான் பாத்துக் கொள்ளுறன்" என்றிருந்தான்.

எப்படி பணத்தைத் திரும்பப்பெறப் போகிறான்? மிஸிஸ் பெர்னாண்டோவோ கண்டிப்பான மனுஷி.

மிஸிஸ் பெர்னாண்டோவுக்கு வேறும் இரண்டு மூன்று வீடுகள் கொழும்பில் இருந்தன. வாடகைக்குக் கொடுத்திருந்தாள். மேலும் ஆயுள் காப்புறுதி முகவராகவும் வேலைசெய்தாள். இதனாலெல்லாம் அவள் வீட்டிலே தங்குகிற நேரம் குறைவாகவே இருக்கும். அடிக்கடி விகாரைக்குப் போவதையும் தவறாமல் செய்கிறவள். போன


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாரத்தில் ஒரு மாலையில் வேலை முடிந்து வந்துகொண்டிருந்த என்னை இடையிலே சந்தித்தாள். "என்ன, உன் சிநேகிதன் இப்படியெல்லாம் செய்கிறான்? அங்கே அவன் உதறுகிற பழைய பேப்பர் களில் இருந்து தூசெல்லாம் எனது வீட்டுக்குள்ளே வந்து படிகிறது. அய்யோ, கரப்பான் பூச்சிவேறு அந்தப் பழைய பேப்பர் கட்டுகளுக்குள் இருந்து தொலைத்துவிடப் போகிறது. அவனிடம் சொல்லி வை, அந்த பழைய பேப்பர்க் கட்டுகளை எந்தநேரமும் நோண்டிக் கொண்டிருக்க வேண்டாமென்று. பழைய பேப்பர்க் கடையிலே கொண்டுபோய்ப் போடச் சொல்லு."

"நான் சொன்னவுடன கேக்கவேபோறான்" என்று நினைத்தாலும், "சொல்லுறன்" என்று அவளுக்குச் சொல்லியிருந்தேன்.

ஸரமகோவிடம் இதைச் சொன்னபோது, "என்னிட்டையும் சொன்னாள்" என்று அவன் சிரித்தான்.

அன்றைய முன்னிரவு நியூ கொலனியல் பாரில் கழிந்துகொண்டிருந்தது. பத்து மணிக்கு மேலே அங்கிருந்து கிளம்பி சாப்பாட்டுக்கு கொட்டாஞ்சேனைச் சந்தியிலுள்ள ஒரு கடைக்குச் சென்றோம். திரும்ப வீட்டுக்கு நடந்துகொண்டிருந்தபொழுது, அதுவரை யிருந்த பேச்சின் திசையை மாற்றி, "அட்வான்ஸ் குடுக்க என்ன செய்யப்போறாய்?" என்று ஸரமகோவிடம் கேட்டேன்.

"வாற மாசம் பத்தாந்தேதி சனிக்கிழமை வீடு மாறுறதாய் இருக்கிறன். இன்னும் சரியாய் ரண்டு கிழமை கிடக்கு. சனிக்கிழமை நான் சாமான் தூக் கிறதுக்குள்ளை அட்வான்ஸ் மொத்தமும் தந்திடுவாள்" என்று நிதானமாய்ச் சொன்னான்.

"எப்பிடியடா? மிஸிஸ் பெர்னாண்டோவே சொன்னாளா?"

"வீடு மாறப்போற விஷயத்தையே நாளைக்குத் தானே சொல்லப்போறன்."

எனக்கு நம்பிக்கையில்லை, இவன் ரஹீம் காக்காவுக்குச் சொன்னபடி பத்தாம் திகதி வீடு மாறிப் போவானென்று. அறை பார்த்து ஒரு கிழமை ஆகின்றது, வீடு மாறுகின்ற விஷயத்தையே இன்னும் வீட்டுக் காரிக்குச் சொல்லாமல் இருக்கிறான், இவன் கடைசி நேரத்தில் கரச்சல்படப் போறான்.

அதை அவனிடமே சொன்னேன்.

"பாப்பம்" என்றான். சற்று யோசனையோடு சுணக்கமாய்ச் சொன்னதுபோல்தான் தோன்றியது.

**பத்தாம் திகதி** சனிக்கிழமை மாலை "புத்தக, பேப்பர்" கட்டுகளை ஏற்ற ஸரமகோ வரச்சொல்லி யிருந்தான். நான்கு மணியளவில் வந்துவிடச் சொல்லியிருந்தும் ஆறு மணிக்குச் சற்று முன்னராகத் தான் என்னால் அங்கே செல்ல முடிந்திருந்தது.

அட்வான்ஸுக்கு என்ன நடந்திருக்குமென்று எண்ணியபடியே உள்ளே சென்றேன்.

ஸரமகோ சாமான்களை எடுத்து வெளியே வைக்க அப்போதுதான் ஆரம்பித்திருந்தான்.

"என்ன அவசரம், நான் வந்தபிறகு துவங்கியிருக்கலாம்தானே!" என்றேன்.

"வேன் வரப்போகுது. உன்னைப் பாத்துக் கொண்டிருந்தால் சரிவராதெண்டு நானே துவங்கி யிட்டன்."

"மிஸிஸ் பெர்னாண்டோ எங்கை? உள்ளை நிக்கிறமாதிரித் தெரியேல்லை."

"அவள் வெளியிலை போயிட்டாள்."

"அப்ப அட்வான்ஸ்..?"

"காலமையே வாங்கியிட்டனே" என்றான்.

நான் அதிர்ந்துபோனேன்.

வீட்டுக்காரருக்கும் குடியிருப்பவருக்கும் ஒரு மனக் கசப்பு வளர்ந்த பின்னரும், தகுந்த முன்னறிவித்தல் எதுவுமில்லாமல் பத்து நாளையில் வீடு மாறப் போவதாகச் சொன்னதும் அட்வான்ஸை எப்படி மிஸிஸ் பெர்னாண்டோ தூக்கிக்கொடுத்தாள்?

என் திகைப்பைப் பார்த்து ஸரமகோ சிரித்தான்.

மேலே எதுவும் பேசாமல் புத்தகக் கட்டுகளை எடுத்து வெளியில் வைக்க ஆரம்பித்தோம். இன்னும் சில பேப்பர்க் கட்டுகள் மிச்சமிருந்த நிலையில், "கொஞ்சம் பொறு, நான் எப்பிடி அட்வான்ஸை சுணக்கமில்லாமல் எடுத்தனெண்டு இன்னமும் நீ மண்டையைக் குழப்பிக்கொண்டிருக்கிறது தெரியுது. இப்ப கீழ பார், உனக்கே எல்லாம் விளங்கும்" என்றுவிட்டு பேப்பர்க் கட்டுகளில் ஒன்றை மெதுவாகத் தூக்கினான்.

நான் கீழே பார்த்தேன்.

கரப்பான் பூச்சிகள்! கொழுத்தவை, சிறியவை, குஞ்சு குருமனுகள் என ஒரு நூறுக்கும் மேலான கருப்பு உருண்டைகள் மறைவிடம் தேடி அங்கு மிங்குமாய் ஓடித் திரிந்தன. நான் பாய்ந்து விலகினேன்.

கரப்பானிலிருந்து ஒரு மோசமான வெடில் வீசிக் கொண்டிருக்கும். அதைவிட மோசமான வாடைகொண்டது அவை இட்ட கறுப்பு எச்சக் குறுணிகள். ஒரு பேப்பர்க் கட்டுக்குக் கீழேயே இவ்வளவு இருக்கின்றனவெனின், மீதிக் கட்டுகளுக்குக் கீழே எவ்வளவு ஆயிரம் இருக்கக்கூடும்! எனக்குக் குமட்டல் வருவதுபோல இருந்தது.

"தூக்கு, முதல்ல வெளிய போகவேணும்." நான் குனிந்து இரண்டு கட்டுக்களை கரப்பான்களை உதறுவதற்காக இரண்டு மூன்று முறை பொத்துப் பொத்தென்று அவற்றை நிலத்தில் தூக்கிப் போட்டு விட்டு எடுத்துக்கொண்டு விரைவில் வந்துவிட்டேன். அப்போது கூட சளிஞ்சுபோன ஒரு கொழுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பானின் உடல் எனது சப்பாத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பதை என்னால் காண முடிந்திருந்ததில் உடம்பு பதறிக் கொண்டிருந்தது. மீதிக் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு ஸரமகோ நிதானமாக வெளியே வந்தான்.

"இப்ப தெரிஞ்சிருக்குமே மிஸிஸ் பெர்னாண்டோ ஏன் அட்வான்ஸைத் தந்து என்னைத் துரத்திவிடுறமாதிரி அவசரப்பட்டாளெண்டு. இதுதான் நான் பாவிச்ச ஆயுதம், தம்பி. எனக்கே இந்தப் பழைய பேப்பர்க் கட்டுக்களை குப்பையிலை போட்டிடலா மெண்டுதான் முதல்ல இருந்துது. ஆனா எண்டைக்கு மிஸிஸ் பெர்னாண்டோ என்ரை அறை வாசல்ல வந்துநிண்டு, "என்னாலை இதுகளை கண்ணாலை பாக்கவும் ஏலாது, ஸரமகோ. அண்டைக்கு வீட்டுக் குள்ளை வந்திட்ட ஒரு கரப்பான்பூச்சியைப் பிடிச்சுக் கொண்டுபோய் வெளியிலைவிட நான் பட்டபாடு இருக்கே, அது அந்த புத்தபெருமானுக்குத்தான் தெரியும். நான் ஒரு உண்மையான புத்தசமயக்காரி தெரியுமோ? என்ரை வாழ்க்கையில் ஒரு உயிரைக்கூட நான் இதுவரை கொலைசெய்தது கிடையாது. இந்தக் கிழவியிலை கொஞ்சம் அனுதாபம் வை, ஸரமகோ. இந்தப் பழைய புத்தகங்கள் பேப்பர்க் கட்டுக்களை ஏன் நீ பழைய பேப்பர்க் கடையிலை போடக்கூடாது? நல்ல காசுகூடக் கிடைக்கும்" என்று சொன்னதுதான் எனக்கு வாசியாய்ப் போச்சு. இந்த ஆயுத ஏவலிலதான் மிஸிஸ் பெரனாண்டோ அட்வான்ஸை தூக்கித் தந்தது. எனக்குத்தான் வீடு மாறுற தேவையிருந்தது. இதுகளின்ர புண்ணியத்தால என்னை வீட்டைவிட்டுக் கிளப்புற தேவையை மிஸிஸ் பெர்னாண்டோவுக்கு நான் உண்டாக்கியிட்டன்" என்றான் ஸரமகோ.

கரப்பான் பூச்சியென்றால் எனக்கும் அருவருப்புத்தான். என்றாலும் ஸரமகோ சொன்ன காரணத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியாதிருந்தது.

எண்பத்து மூன்றாமாண்டுக் கலவர காலத்தில் முழுக் கொழும்புப் பகுதியிலுமே இந்த வட்டாரத்தில் தான் அதிகமான கொலைகள் விழுந்திருந்தன. அந்தளவுக்கு காப்பார், கேட்பார் இல்லாத தமிழரின் வதைநிலமாக இது இருந்தது. வீதியோரத்தில் நான் கண்ட காட்சிகளும், இரவிரவாய்க் கேட்ட மரண ஓலங்களும் இந்தப் பகுதியிலுள்ள எந்தச் சிங்கள மனிசரையும்தான் இந்த விஷயத்தில் என்னைச் சந்தேகிக்க வைக்கும்.

மிஸிஸ் பெர்னாண்டோவே ஆயுதமெடுத்து கொண்டுபோய் எந்தத் தமிழனையாவது வெட்டாமல் இருந்திருக்கலாம். நடந்த கொலைகளை இனத்துவம் மனிதாபிமானம் காரணமாய் நியாயப்படுத்தாமலாவது இருந்திருப்பாளா? ஸரமகோ இதையெல்லாம் யோசிச்சிருக்க வாய்ப்பில்லை. கரப்பானுக்கு பயமென்றால் பூச்சி மருந்து வாங்கிவைத்துவிட்டு பேசாமலிருந்துவிட்டிருப்பாளே.

"நீ விட்ட கரப்பான் படைக்குப் பயந்து மிஸிஸ் பெர்னாண்டோ அட்வான்ஸை தூக்கித் தந்ததெண்டு நீ நினைக்கிறாய். கரப்பானை ஒழிக்கிறதுக்கு இப்ப நல்லநல்ல பூச்சிமருந்தெல்லாம் வந்திருக்கு. நான் நினைக்கிறன், ஒருநாள் அவளுக்கு நாரிப்பிடிப்பு வந்திட்டுதெண்டு நீ தைலம்போட்டு உரஞ்சிவிட்டதாய்ச் சொன்னியே, அதை நினைச்சுதான் உன்னை இழுத்தடிக்காமல் அட்வான்சைத் தந்திருக்கிறாள்."

"தன்னால ஒரு பூச்சியைக்கூட கொலை செய்ய ஏலாது எண்டு மிஸிஸ் பெர்னாண்டோ சொன்னதை நீ அப்ப நம்பேல்லையோ?"

"அவ்வளவு அஹிம்சையுள்ள ஆக்கள் எங்கயுமிருப்பினம் எண்டதை என்னால நம்பவே ஏலாது. அந்த இனக்கலவர காலத்திலை அழிஞ்ச தமிழ்ச் சனத்தின்ரை கணக்குத் தெரியுமோ உனக்கு?" நான் சூடேறிக்கொண்டிருந்தேன்.

ஸரமகோ தன் இயல்பான இழிப்போடு என்னைப் பார்த்தபடியிருந்தான். பிறகு சொன்னான்: "என்ரை நம்பிக்கையை நான் அடைஞ்சதே இப்ப இருக்கின்ற மிச்சத்தின்ரை கணக்கினாலதானே."

என்ன சொல்லுறான் இவன்?

"ராசன், இண்டைக்கும் கொழும்பில நீ இருக்கிறாய், நான் இருக்கிறன், இன்னும் எத்தினையோ தமிழ்ச் சனம் இருந்து வாழுதெல்லோ? எப்பிடியெண்டு நினைக்கிறாய்? நல்ல சனங்கள் எங்கயும் இருக்குதுகள், மச்சான். அதுமாதிரி மிஸிஸ் பெர்னாண்டோவையும் நல்ல ஒரு புத்த சமயக் காரியாய் நான் நம்பினன். அதாலைதான் என்ரை ஆயுதங்களும் அவவிலை வேலை செய்துது. பழைய பேப்பர்க் கட்டுக்களை எறியுற எண்ணம் இப்ப என்னிட்டை இல்லை. ஏனிண்டா ரஹீம்காக்காவையும் நல்ல ஒரு முஸ்லீமாய் நான் நம்புறன். சரி, வேன் வந்திட்டுது. வா வந்து கொஞ்சம் கைகுடு" என்றுவிட்டு வாசலடிக்கு நடந்தான் ஸரமகோ.

நான் திகைத்துப்போனேன்.

ஸரமகோ தன் அகண்ட இழிப்பைச் செய்தான். தாறுமாறான பெரியபெரிய பற்களில்கூட ஒருவர் அந்தளவு அவலட்சணமில்லாமல் சிரிக்க முடியுமோ? "இன்னுமேன் அங்க நிக்கிறாய்? வா..வா" என்றான்.

சந்தியில் நின்ற அரசமரத்திலிருந்து ஓர் இலை மெல்ல உதிர்ந்து இறங்கிவந்து என்மேல் வழிந்திறங்கியது. மிஸிஸ் பெர்னாண்டோவின் சாந்த மான பார்வை என் மேனியெங்கும் படர்வதுபோல் உணர்ந்தேன். ஸரமகோ சொன்ன மிச்சத்தின் கணக்கு இப்போது புரிவதுபோலிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.முத்துலிங்கம்


# எட்டாவது சிகரம்

இரண்டு நாட்கள் முன்பு அமர்நாத் குகைக்கு சென்றுவிட்டு வந்த அமெரிக்க பெண் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தலையிலே கறுப்புக் கண்ணாடி குத்திய, கை நகங்களில் பச்சை நிறம் பூசிய பெண். என்னைக் கண்டதும் இதற்காகவே காத்திருந்ததுபோல தான் அமர்நாத் குகைக்கு போய் வந்த சாதனையை சொன்னார். 29 ஜூலை அவர் திரும்பியிருந்ததால் அந்தப் பயணத்தின் அனுபவங்களினால் நிறைந்து போயிருந்தார். என்னிடம் நான் போயிருக்கிறேனா என விசாரித்தார். நான் இல்லை என்றதும் புருவத்தை உயர்த்தி ஆச்சரியப்பட்டார். இந்தியராகவோ இலங்கையராகவோ பிறந்திருந்தால் அந்தக் குகையை பார்த்திருக்கவேண்டும் என அவர் அபிப்பிராயப்பட்டார்.

"ஏன் அங்கே போனீர்கள்?" என்று கேட்டேன். முட்டாள்தனமான கேள்வி. எவரெஸ்டை வெற்றி கொண்ட எட்மண்ட் ஹிலாரியிடமும் இப்படி கேட்டார்கள். அவர் "ஏனென்றால் அது அங்கே இருக்கிறது" என்றாராம். இந்தப் பெண்மணி அப்படியெல்லாம் சொல்லவில்லை. அவர் ஜம்மு காஷ்மீருக்கு போயிருக்கிறார். அது யாத்திரை நேரம். ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் அமர்நாத்துக்கு புறப்பட்டபோது அவரால் ஆர்வத்தை அடக்கமுடியவில்லை. அவரும் யாத்திரை குழுவில் சேர்ந்துகொண்டார். கால்நடையாகவும், பல்லக்குகளிலும் பலர் புறப்பட்டனர். வசதியானவர்கள் ஹெலிகொப்டர்களில் நேராக மலை உச்சிக்கு போய் அங்கே இறங்கி குகையை பார்த்தார்கள்.

நிறைய யாத்ரீகர்கள் வருவார்களா?

"போன வருடம் 6 லட்சத்துக்கும் அதிகமானோர் குகைக்கு போயிருந்தார்கள். நான் மலை உச்சியை அடைந்த அன்று மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான யாத்ரீகர்கள் வருகை தந்திருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டார்கள். குகை பிரம்மாண்டமாக இருந்தது. 130 அடி உயரம். அத்தனை பெரிய குகையை நான் பார்த்ததில்லை. அதன் உள்ளே stalagmite formation இருப்பதாக படித்துள்ளேன். பனி லிங்கம் என்று வழிபட்டார்கள். ஆனால் அதன் உயரம் அமாவாசையின்போது குறைந்தும் பௌர்ணமி அன்று 16 அடி உயரமாவதும் ஒரு மர்மம் என்றே நினைக்கிறேன். 500 வருடங்களுக்கு முன்னர் இந்தக் குகையை ஓர் ஆட்டிடையன் கண்டுபிடித்ததாக



சொல்கிறார்கள். இந்தக் குகையில்தான் பார்வதிக்கு சிவன் படைப்பின் ரகஸ்யத்தை உபதேசித்தார் என்று வழிபடுகிறார்கள்.

உங்கள் அனுபவம் எப்படி இருந்தது?

"நான் பயணம் தொடங்கியபோது குளிருக்கு தக்க ஆடைகள், கையுறை, காலுறை, பூட்ஸ்கள், கம்பளிப்போர்வை, நித்திரைப்பை, தைலம் போன்ற வற்றை ஒரு தோல்பையிலே அடைத்துக் காவிக் கொண்டு போனேன். மலை ஏற ஏற அதைக் தூக்கிக் கொண்டு ஏறுவது சிரமமாகிவிட்டது. மலையின் உயரம் 17,000 அடி. மேலே போகப்போக பிராணவாயு குறைந்துவிடும். நான் சிறுவயதில் இருந்தே குதிரை ஏற்றம் பழகியவள். சிலர் வாடகைக் குதிரையில் ஏறி வரச்சொல்லி அறிவுரை தந்தார்கள். நான் நடந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை உச்சிக்கு போவது என்பதில் தீர்மானமாக இருந்தேன். முதல் நாள் நாங்கள் கடந்தது 16 கி.மீட்டர் தூரம். எனக்கு மலை ஏறிப் பழக்கமில்லாததால் மூச்சுவாங்கியது. அந்தச் சிரமத்திலும் சுற்றிலும் உள்ள மலைச் சிகரங்களையும், லிட்டர் ஆற்றில் ஓடிய பளிங்கு நீரையும் பார்த்தபோது களைப்பு மறைந்துபோனது. அன்று மாலை தங்கியபோது பெரிய தவறு செய்தேன். அடுத்தநாள் ஏறப்போகும் 12 கி.மீட்டர் தூரம் செங்குத்தாக இருக்கும், ஏறுவது சிரமமென பயமுறுத்தினார்கள். ஆகவே ஒரு மூட்டைதூக்கியை ஒழுங்குசெய்து முன் பணமும் கொடுத்தேன். அடுத்தநாள் காலை என் மூட்டையை காணவில்லை. மூட்டை தூக்கியையும் காணவில்லை. மலை ஏறுவதற்கு அத்தியாவசியமான அத்தனை உபகரணங்களும் அந்த மூட்டையில் இருந்தன.

எப்படி சமாளித்தீர்கள்?

"படித்தவர் போல தோற்றமளித்த ஒருவர் எங்களுடன் பயணம் செய்தார். அவருடைய மனைவி பல்லக்கில் "ஆசு ஆசு" என்று பெரிதாக மூச்சுவிட்டபடியே வந்துகொண்டிருந்தார். நான் அந்த மனிதரை அணுகி என் சாமான்கள் தொலைந்ததை சொல்லி உதவும்படி கேட்டேன். நான் ஏதோ அவருடைய ஏடிஎம் ரகஸ்ய எண்ணைக் கேட்டதுபோல அவர் திடுக்கிட்டு என்னைப் பார்த்தார். பின்னர் பல்லக்கை நிறைத்திருந்த அம்மாளைப் பார்த்தார். ஒரு நொடியில் அவர்களுக்குள் ஏதோ சைகை பரிமாறப்பட்டது. அந்த மனிதர் கையிலே சுடுதண்ணீர் பட்டதுபோல இரண்டு கைகளையும் உதறி என்னை துரத்திவிட்டார்.



"இரண்டு சாதுக்கள் எங்களுடனே நீண்டதூரம் வந்துகொண்டிருந்தார்கள். வேக வேகமாக மலை உச்சியை முதலில் அடையவேண்டும் என்பதுபோல ஏறினார்கள். அவர்களுக்கு 40 வயது மதிக்கலாம். இந்த வயதிலேயே உலகத்தை துறந்து சாமியாராகி விட்டார்கள். ஒருத்தர் கறுப்பு தலைப்பா அணிந்து, கழுத்திலே பலவிதமான மாலைகளை பலப்பல நிறங்களில் அணிந்திருந்தார். கையிலே உயரமான சூலாயுதத்தையும், பளபளக்கும் லோட்டா ஒன்றையும் காவினார். அவர் முகத்திலே வெள்ளை மா பூசி முகம் வெளுப்பாக இருந்தது. அடுத்தவர் பார்க்க சிநேக மானவர்போல தோற்றமளித்தார். உயரமான மஞ்சள் தலைப்பா கட்டியிருந்தார். இவரும் கழுத்திலே நிறைய மணி மாலைகளை சுமந்தார். தலைவர்போல தோற்றமளித்த கறுப்பு தலைப்பாக்காரரிடம் என் பிரச்சினையை சொன்னேன். அவர் உதடுகள் ஏதோ ஸ்லோகத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்ததால் ஒன்றுமே பேசாமல் ஒரு விரலை நேராகப் பிடித்துக் காட்டினார்.

"நான் பல நாடுகளுக்கு பயணம் செய்திருக்கிறேன். ஒவ்வொரு நாட்டிலும் சைகைளுக்கு வேறு வேறு அர்த்தங்கள் உண்டு. ஒரு விரலை நேராகப் பிடித்ததால் ஆகாயத்தை பார்க்கச் சொல்கிறாரா? அல்லது மலை உச்சியை முதலில் தொட்டது நான்தான் என்று சொல்கிறாரா? அல்லது என்னை எச்சரிக்கை செய்கிறாரா? அல்லது ஒன்றுக்குப் போகவேண்டும் என்று சொல்கிறாரா? லட்சக்கணக்கான மக்கள் தினமும் செய்வதுபோல இமயமலை சிகரம் பக்கம் திரும்பி அதை நிறைவேற்றப் போகிறாரா? ஒன்றுமே புரியவில்லை. இன்னொன்றை நினைத்தபோது எனக்கு கிலி பிடித்தது. அமெரிக்காவில் ஒற்றை விரலுக்கு ஆபாசமான அர்த்தம் ஒன்று உண்டு. அப்படி ஏதாவது இந்தியாவிலும் இருக்குமோ என பயந்து போனேன். ஆனால் அவர் "பொறு" என்று சைகை காட்டியிருக்கிறார் என்பது சிறிது நேரத்தில் எனக்கு புரிந்தது.

"என்ன வேண்டும்?" என சைகையில் கேட்டார். நல்ல அமெரிக்க ஆங்கிலத்தை உடைத்து நாலு வார்த்தைகளில் நான் என் பிரச்சினையை சொன்னேன். அவர் "நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம்" என்று கூறி இரண்டு கம்பளிப் போர்வைகளைத் தந்தார். அவர்களுடைய தயவினால் நான் குளிரிலிருந்து தப்ப முடிந்தது. அந்தக் கம்பளிகளைப் போல ஒன்றை நான் என் வாழ்நாளில் முன்னர் பார்த்தது கிடையாது. இரண்டு மஞ்சள் கம்பளிகளும் கத்தரிக்காய் நிறத்துக்கு மாறி விட்டன. இருபது வருடங் களாக தண்ணீரைக் காணாத கம்பளிகள். நூற்றுக் கணக்கான ஆட்களின் வியர்வையும், பனிச்சேறும் பட்டு கம்பளி முரட்டுத்துணி ஆகியிருந்தது. நாலாக மடித்து நிறுத்திவிட்டால் கம்பளி அப்படியே நிற்கும் என்று பட்டது.

"நான் இந்த பயணத்தில் பார்த்த இடங்களில் வர்ணிக்கமுடியாத அழகு கொண்டது சேஷாங் என்ற இடம்தான். இமயமலைத் தொடரின் ஏழு சிகரங்கள் காணக் கிடைத்தன. ஏழு தலை நாகம் என வர்ணிக்கப் பட்ட இடத்தை நோக்கி யாத்ரீகர்கள் வணங்கினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் நீல நிறத்தில் காட்சியளித்தது. ஆகாய நிறத்தால் குளம் அப்படியானதா அல்லது குளத்தின் நிறத்தால் ஆகாயம் அப்படியானதா என்பது தெரியவில்லை. தேவதாரு மரங்களின் அபூர்வ மணம் ஒரு மயக்க நிலையை தந்தது. சாமியார்கள் தந்த இரண்டு தடித்த போர்வைகளும் போதாமல் உடம்பு உதறியது. அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் 250 வருடங்களுக்கு முன்னர் பதவியேற்பு விழாவில் மேலங்கி அணியாமல் கலந்துகொண்டதால் குளிரில் விறைத்து ஒரு மாத காலத்துக்குள் இறந்துபோனது நினைவுக்கு வந்தது. நடுக்கம் இன்னும் அதிகமாகியது. ஆனால் வெள்ளைப்பூச்சு அப்பிய சாமியார்கள் குழந்தைகள் போல தூங்கினார்கள்.

இந்த இரண்டு சாமியார்களும் எனக்குப் பக்கத்தில் காவலர்கள் போல வந்தார்கள். என்னைக் காவல் காத்தார்களா அல்லது அவர்களுடைய கம்பளிப்போர்வைகளை பாதுகாத்தார்களா என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்ல. எதற்காக அவர்கள் சாமியார் ஆனார்கள் என்று கேட்டேன். 16 வயதில் ஓடி வந்து விட்டதாக ஒரு சாமியார் சொன்னார். பல வருடங்களாக அவர் அமர்நாத் வந்து போகிறார். மற்றவர் மணமுடித்து வாழ்க்கை நடத்தியவர். ஓர் இரவு அமர்நாத்தில் இருந்து அவருக்கு அழைப்பு வந்ததும் தான் கட்டிய மனைவியையும் பிள்ளையையும் விட்டு விட்டு உடனே புறப்பட்டதாகச் சொன்னார். (அழைப்பு செல்பேசியில் வந்ததா என்பதை கேட்க நான் மறந்து விட்டேன்.) சிலநாட்கள் ஒன்றாகப் பழகியதில் சாமியார் கள் எனக்கு நெருக்கமாகிவிட்டார்கள். மூன்று நாட்கள் கழித்து அவர்களை விட்டு பிரிந்தபோது, நடு இரவில் மனைவியை துறந்து புறப்பட்ட கறுப்பு தலைப்பா சாமி யாரின் கண்கள் கலங்கியது எனக்கு ஆச்சரியத்தை தந்தது..



மூன்றாவது நாள்தான் பயணத்தின் மிக மோசமான நாள். ஒரு பக்கம் செங்குத்தாக ஏறிய பின்னர் மறுபக்கம் கடகடவென்று இறங்கவேண்டும். முதல்நாள் அந்த இறக்கத்தில் ஒருவர் சறுக்கி விழுந்து மரணம் அடைந்துவிட்டார் என்று பேசிக்கொண்டார்கள். அன்றிரவு என்னால் உறங்க முடியவில்லை. காற்று போதியது இல்லாததால் மூச்சுத் திணறி சுவாசிப்பது கடினமானது. சிலர் இரவிரவாக வாந்தி எடுத்தனர். என் சொண்டுகள் வெடித்து பேசமுடியால் ஆகிவிட்டது. கன்னத்தை தொட்டால் தொட்ட உணர்வே கிடையாது. வாயை திறந்து பேச முயன்றபோது வேறு வார்த்தைகள் வேறு மொழியில் வந்தன. நான் குளிருக்கு பூசவென்று கொண்டுவந்த தைலம், உடுக்கவேண்டிய குளிர் ஆடைகள் எல்லாம் திருட்டுப்போன என் பையில் இருந்தன. அந்த திருடனையே இரவு முழுவதும் எண்ணினேன்.

உணவுக்கு என்ன செய்தீர்கள்?

"நான் தங்கிய அத்தனை நாட்களும் ரொட்டியும் பருப்பும் இலவசமாகக் கிடைத்தன. எனக்கு மாத்திரமல்ல, யாத்ரீகர்கள் அத்தனை பேருக்கும். நிறைய தொண்டு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு அங்கே உழைத்தன. ஆனால் கழிவறை வசதிகள் பற்றி ஒருவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஆண்களும் பெண்களும் திறந்த வெளியையே உபயோகித்தார்கள். குளிரில், இருண்ட பின்னர், திறந்த வெளியை நோக்கி சென்றபோது நான் பில்கேட்ஸ் சொன்னதை நினைத்துப் பார்த்தேன். "மனிதர்களுக்கு தண்ணீர் எவ்வளவு முக்கியமோ அத்தனை முக்கியம் கழிவறைகளும்." அவர் நிறுவிய அறக்கட்டளை தண்ணீரிலும் பார்க்க கழிவறை களுக்குத்தான் முதலிடம் கொடுத்தது. உலகில் 2.8 பில்லியன் மக்களுக்கு கழிப்பிடம் கிடையாது. தண்ணீரில்லாமல் சூரிய ஒளியில் இயங்கும் கழிவறை ஆராய்ச்சிக்கு பில்கேட்ஸ் அறக்கட்டளை நிதியுதவி வழங்கி யிருக்கிறது.

"அமர்நாத் யாத்திரைக்கு அனுமதிக்கப்பட்ட கால அவகாசம் ஜுன் 25 இலிருந்து ஆகஸ்டு 2 மட்டுமே. நாற்பதுக்கும் குறைவான நாட்கள். போன வருடம்போல இந்த வருடமும் 6 லட்சத் துக்கும் அதிகமான யாத்ரீகர்கள் குகைக்கு போயிருப்பார்கள். எல்லோருடைய கைகளிலும் பிளாஸ்டிக் தண்ணீர் குடுவைகளைக் காணக்கூடியதாக இருந்தது. அமர்நாத் மலைப் பிரதேசத்தின் வனப்பு சொல்ல முடியாது. யாத்திரை முடிவுக்கு வரும்போது 5 மில்லியன் போத்தல்கள் அங்கே வீசப்பட்டுக் கிடக்கும். அற்புதமான இயற்கை அழகு பிளாஸ்டிக் போத்தல் களால் மேலும் வருடா வருடம் அழகூட்டப்படும்.

அமெரிக்கப் பெண்மணி விடைபெற்று போகமுன்னர் சொன்ன கடைசி வாசகம் என்னை சிந்திக்கவைத்தது. "மறுபடியும் போவீர்களா?" என்று கேட்டேன். நீண்ட நேரம் பேசாமல் இருந்துவிட்டு, செல்பேசியில் குறுஞ்செய்தி அனுப்பும்போது "உஸ்" என்று சத்தம் வருமே அப்படி ஒரு பெருமூச்சு விட்டார். "நான் சிறுவயதில் அம்மாவின் பழைய உடுப்பை போட்டு எடுத்த படம் ஒன்று வீட்டில் இருக்கிறது. அதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதே சமயம் அடிமனதில் இனம் தெரியாத சோகமும் சூழ்ந்து கொள்ளும். அமர்நாத் குகையை நினைக்கும்போது எனக்கு மகிழ்ச்சியுடன் சேர்ந்து ஒரு வலியும் வந்துவிடுகிறது. இனிமேல் என்னால் அங்கே போகமுடியாது" சூழலியல் விஞ்ஞானி ஒருவர் ஆப்பிரிக்காவில் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகராக இருக்கிறார். அங்கே ஒரு கிராமத்தில் ஆழ்கிணறு தோண்டுவதற்கு விண்ணப்பம் வரும் போது அவர்கள் முதலில் நிறுவுவது கழிப்பிடம்தான். அதற்கு பின்னர்தான் கிணறு. கிராமம் இதற்கு சம்மதிக்கா விட்டால் அவர்களுக்கு ஒன்றுமே கிடைக்காது. இது ஓர் அருமையான உத்தி என்றுதான் எனக்கு பட்டது.

படைப்பின் ரகஸ்யம் அமர்நாத் குகைக்குள் இருக்கிறது. அதை மனிதன் அறிய முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால் அழிவுக்கு ரகஸ்யம் கிடையாது. பிளாஸ்டிக் 400 வருடங்களுக்கு அழியாது. வருடத்துக்கு 5 மில்லியன் பிளாஸ்டிக் குடுவைகள் அங்கே குவிகின்றன. மனிதக் கழிவுகள் இன்னொரு பக்கம். அமெரிக்கப் பெண்ணின் மகளின், மகளின், மகளின் – இப்படியே பத்தாவது தலைமுறை மகள் அமர்நாத்துக்கு பயணம் செய்தால் அங்கே அந்த அமெரிக்கப் பெண் எறிந்துவிட்டு வந்திருக்கக் கூடிய பிளாஸ்டிக் போத்தல் ஒன்றை கண்டு பிடிக்கலாம். பிளாஸ்டிக் மலைக்குவியல் இமைய மலைத்தொடரின் எட்டாவது சிகரமாக மாறலாம். அமர்நாத் யாத்ரீகர்கள் "எட்டுத்தலை நாகம், எட்டுத்தலை நாகம்" என அதிசயம் மேலிட வணங்குவார்கள்.

# கப்பற் பறவைகள்

எனதிந்தக் கடவுச்சீட்டு
சிறகுதான் மறுப்பதற்கில்லை
இருந்தும்
கரை மீளும் வழியறியாது
கரைக்கும் கப்பலுக்குமாய்
பதகளித்து அலையும் பறவையின் வாழ்வு.

ஞாபகத்தில் உதிர்ந்து தீராத பூவரசு
அழிந்தும் மறக்காத பனைமரக்காடு
எரிந்த புல்லினடியில்
பழகிய பாதங்களுக்காகக் காத்திருக்கும்
ஒற்றையடிப்பாதை
ஆம்... புளித்துச் சலித்த கதையே!

எனது கடவுச்சீட்டு நிறம் குன்றிவிட்டது
விமான நிலையங்களில்
குடிவரவு அதிகாரிகள் இப்போதெல்லாம்
புதிய அகதியென என்னைச் சந்தேகிப்பதில்லை
பறப்புகளின்போது திடுக்கிட்டு விழிக்கிறேன்
காலம் தலைகீழாய்க் கிடக்கிறது
இன்னமும் திரும்பவியலாத நேரமே அங்கு.

பதின்மத்தில் குளக்கரையில்
மழைத்துளியின் பருமனையொத்து
சிந்திய தேன்பூக்களின் வாசனை...
கீரிமலையின் அலைநுரை கால்தழுவ
சிறு பாறையேறி நின்றுகொண்டிருந்த என்
தோழி...
நிலவோடும் கடலோடும் காதல் நினைவோடும்
பலாப்பழ வாசனையை நுகர்ந்தபடி
சல்லியம்மன் கரையோரம் நடந்த
அப்பொன்னிரா நாட்கள்...
நீ காடுறைந்து வாழ்ந்த காலங்களில்
மார்கழிப் பனி இறங்கும் பின்னிராவில்
காவல் குடிலில் எனக்களித்த முத்தங்களின்



சூடு...

பனிப்பாலையில்
இருபது கூதிர்களைக் கழித்தும்
தணிந்தபாடில்லை
ஞாபகத்தின் தகிப்பு.

நிலம் பிரிந்தவர்களும்
உயிர் பிரிந்தவர்களும் ஒன்றே...

அங்கேயுமில்லை
இங்கேயுமில்லை
எங்கேயுமில்லை

தமிழ்நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூர்ப்பனகை



என் இரத்தம் கொதித்திருக்கும்
பொழுதுகளில்
நீ எனைத் தவிர்த்துக்கொள்கின்றாய்.

புத்திசாலி!
என் பலம், பலவீனமனைத்தையும்
துல்லியமாகக் கணித்து வைத்திருக்கின்றாய்.

மாதவிடாய் அழற்ச்சியில்
உளன்றுகொண்டிருந்த எனை
மிரண்டு பார்க்கும்
என் செல்வங்களிடம்
என் சொல்லியிருப்பாய்?

தொலைந்த சந்தோஷங்களும்
மிஞ்சிய சிறு உயிருமாய்
உழன்றுகொண்டிருக்குமெனை
புரிந்து கொள்ள உன்னால் ஏன்
முயலவில்லை.
என் பெருமைகளை அனுமதித்தது,
நொறுங்கிய என் ஆன்மாவை
அணைத்துக்கொள்ள முய்ன்றதுமில்லை.

உனக்குமெனக்குமிடையில்
புணர்தலைத் தவிர வேறொன்றுமில்லை.
வீங்கிய ஆண்மையினுச்சத்தில்
சுக்கிலம் தெறித்தடங்கும்
சூம்பிய குறியாய்க் கிடக்கிறது
என்னுடல்
எதற்குமே நாதியற்று.

என் பிள்ளைகளுக்கோ,
பேரப்பிள்ளைகளுக்கோ
பயன்படக்கூடுமென
பத்திரமாய் சேகரிக்கின்றேன்
நீயெனக்கிடும் பெயர்களனைத்தையும்.
சேர்த்துக்கொள்.
பத்தினியையும், சூர்ப்பனகையையும்

நல்ல "பெஞ்சாதி" கிடைக்கவில்லை,
"பிழை விட்டிட்டன்" என்றெல்லாம்
புலம்பித்திரிகின்றாயாம்.
என் யோனிக்குள்
உனைப்புதைத்து முயங்கிக் கிடக்கையில்
நிச்சயமாக நானுனக்குப் பத்தினிதான்.

கவனம்!
தீயாய்த் தகிக்குமுன் சொற்களில்
என்னிரத்தம் கொதித்திருக்குமொருநாளில்
சூர்ப்பனகையாகி
என் விரல் கொண்டுனதுதலை
கொய்தெறிவேன்.

# புலம் இழந்த பூர்வீக குடிகளும்

# நானும் எமது முதலாளிகளும்..

சிறு முனகலோடு
அடங்கிக் கொள்ளும்
உங்கள் மீதான
எனது எதிர்ப்பின்
அடையாளம்.

ஓங்கிப் பாயும்
பெருநதியின் இரைச்சலாய்
தொண்டைக்குழிவரை
எகிறிப் பாய்ந்த
எனது ஒவ்வாமையின்
ஒலிகள்
அடங்கி, அடைத்துக் கொண்டன.

"These people"
என்ற
அவர்கள் மீதான
உங்களின் அடைமொழிக்குள்
அடங்காத் தவிர்த்து
தனியனாய்
தவித்திருக்கும்
என் பொல்லாமனசு.

குறிப்பெடுக்க முனையா
என் பேனாக்களின்
முனைகள்
சொல்ல முனையும்
செய்திகள்
என்றேனும்
சொல்லப்படுமா?

இருத்தலுக்காய் வாழுமெனக்குள்
இறந்து கிடந்தன வெஞ்சொற்கள்.

கறுப்பியின்
2
கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமே மனமே...

ஸ்ரீரஞ்சனி

"எத்தினை தரம் நான் உங்களுக்கு ஃபோன் பண்ணிறது? லேற்றாகும் எண்டால் சொல்லுறேல்லையே...? மற்றவையைப் பற்றின யோசினை இருந்தால் தானே?"

கொதி எண்ணெயில் கடுகு வெடித்தது போல் பொருமி வெடித்தவள், அதே வேகத்தில் என் கையில் இருந்த கார்த் திறப்பைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டாள்.

"என்ன நடந்தது எண்டு என்டை கஷ்டத்தைக் கேட்டியாடி .....?" கன்னத்தைப் பொத்தி அறைய வந்த ஆவேசத்துக்கு வடிகால் இல்லாமல் போக, "வரட்டும்..." என மனம் முறுகிக்கொண்டது.

"லேற்றாகுது எண்டு சொல்லியிருந்தால் கிழிச்சிருப்பாள். அவளின்ரை அரிச்சனை வேண்டாம் எண்டு தானே போனை எடுக்காமல் இருந்தனான். உழைக்கிறன் எண்ட திமிர், அவளுக்கு..." மனம் வெறுப்புடன் திட்டிக்கொண்டது.

வயிறு வேறு பசியிலை குடைந்தது. ஏதாவது சாப்பாடு சமைத்திருப்பாள் மாதிரித் தெரியவில்லை. ஃபிறிட்ஜை மூன்று தரம் திறந்து பார்த்திட்டன், அங்கும் சாப்பிடவோ சமைக்கக் கூடியதாகவோ எதுவும் இல்லை. வந்த கோபத்தை வெறுமன ஃபிறிட்ஜ் கதவில் தான் என்னால் காட்ட முடிந்தது.

வெளியில் இடி இடிக்கும் சத்தம் மேலும் பலமாகக் கேட்டது. காற்றும் மழையும் ஒன்றுடன் ஒன்று யார் பலசாலி என்று பார்த்துவிடலாம் என்பது போல் போட்டி போட்டுக் கொண்டிருந்தன.

பீற்சாவுக்கு ஓடர் பண்ணிப் போட்டு, விஸ்கியுடன் சோபாவில் சாய, தொலைபேசி கீச்சீட்டது.

"நான் கேசவன் கதைக்கிறன். என்ரை வைஃப், உங்கடை காரின்ரை பின்னாலை இடிச்சுப் போட்டாவாம்... அதைப் பற்றிக் கதைக்கிறதுக்காகத் தான் எடுத்தனான்."

"அண்ணை, இந்தப் பொம்பிளையளுக்கு கார் ஓடவும் தெரியாது, ஒரு மண்ணாங்கட்டியும்..........."

"சரி, உங்கடை காரை நாங்கள் திருத்தித் தாறம். அல்லது திருத்துறதுக்கு காசு தாறம். எங்கை வந்தால் நான் உங்கடை காரைப் பாக்கலாம்?"

"காலமை 7 மணிக்கு ஃபின்ஞ் அண்ட் கீல் இலை இருக்கிற க்காஸ் ஸ்ரேஷனுக்கு வந்தியள் எண்டால் பாக்கலாம்? எப்படியும் அதைத் திருத்த ஒரு 400 ரூபா மட்டிலை வரும்..."

"சரி, சந்திக்கேக்கை அதைப் பற்றிக் கதைப்பமே, அப்ப வைக்கிறன்."

ஃபோனை வைத்ததும், அந்த விபத்து என் கண்ணுக்குள் வந்தது.

" என்ன... பாத்து ஓடுறேல்லையே? என்ரை புதுக்கார், இது! ஒரு சின்ன அடையாளம் கூட இருக்கேல்லை... எங்கை, உங்கடை லைசன்ஸ், இன்சூரன்ஸ், போன் நம்பர் எல்லாத்தையும் தாங்கோ பாப்பம்." தமிழ் பெண் என்று தெரிந்ததும் இறங்கின வேகத்தில் முழங்கிறன், நான்.

அவற்றை எடுத்து என்னிடம் நீட்டியபடி, "ஸொறி," என்றவள், தனது செல்ஃபோனில் "சரி, ஓகே." என்று சொல்லி விட்டு, "என்ரை ஹஸ்பண்ட் உங்களோடை கதைக்கிறாராம், ஓகேயா..." என்கிறாள்.

"இப்ப, நான் நினைச்சால் பொலிசைக் கூப்பிடலாம்..., தெரியும் தானே! நம்பி, உங்களை விடுறன். என்னைப் பேய்க்காட்டலாம் எண்டு மட்டும் நினைக்காதையுங்கோ! பிறகு வந்து உங்கடை வீட்டிலை தான் நிற்பன், சரியோ?" எண்டு நான் சொன்னதன் தொடர்ச்சியாகத்தான் இந்தக் கோல் வந்திருக்கிறது.

"வீட்டிலை போய் சாயம் கொட்டி அழுதிருப்பாளாக்கும், அல்லது அவன் அவளை எப்படி இறுக்கினானோ ஆருக்குத் தெரியும்?" மனசுக்குள் நினைத்துக் கொள்கிறேன்.

பீசா வருவதற்கான நேரம் போகப்போக, மனிசியிலை எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. "சனியன்..... புருஷன் பசியிலை வருவானே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டுக்கு என்ன செய்வான் எண்டு நினைச்சுதே... காரைக் குடுத்திருக்கக் கூடாது. எக்கேடாவது கெட்டுப் போகட்டும் எண்டு விட்டிருக்க வேணும். பசியோடை அவசரமாய் வந்து நான் காரைக் குடுக்கிறன், அந்த நன்றியில்லாத நாய், என்னோடை கத்திப்போட்டுப் போகுது... எல்லாம் நான் குடுத்த இடம். வைக்கிற மாதிரி வைச்சிருக்க வேணும்." எனக்கு நானே சொல்லிக் கொள்கிறன்.

காலமை வேலையால் வந்து அவள் கதவு திறக்கும் சத்தம், என்னை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தபோது தான் பீற்சாவையும் சாப்பிடாமல் போதையின் உச்சத்தில் , சோபாவிலையே சயனித்திருக்கிறேன் என்பது புரிகிறது. அத்துடன் கேசவனின் 7 மணிச் சந்திப்பும் நினைவுக்கு வருகிறது.

எழும்பி அவசரம் அவசரமாக உடுப்பு மாத்திக் கொண்டு ஓடின போது மனதில் ஒரே எரிச்சலாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. போதாதற்கு வயிறு வேறு புகைந்து கொண்டிருந்தது.

ஃபின்ஞ் அண்ட் கீல் க்காஸ் ஸ்ரேஷனை நோக்கிக் காரைத் திருப்பிய போது, என் காரை இடித்த அந்தச் சிவப்பு நிறக் ஹொண்டா எனக்காகக் காவல் நிற்பது தெரிந்தது. எனது சில்வர் கலர் பிஎம்டபிள்யூ ஐக் கொண்டு போய் அந்தக் ஹொண்டாவுக்குப் பக்கத்தில் நிறுத்துகிறேன். அந்தக் காருக்குள் அவளுடன் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அவன், என்னைப் பார்த்து விட்டு காரை விட்டிறங்கி வெளியே வருகின்றான்.

என் மனதில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறந்தன, பல மின்மினிப் பூச்சிகள் வட்டமடித்தன. என்னால் நம்பவே முடியவில்லை. "ஓ, நீங்கள்.... எழுத்தாளர் ஆதித்தன் தானே?" ஆச்சரியத்துடன் கேட்ட நான் தொடர்கிறேன். "எப்படியிருக்கிறியள்? வாங் கோவன், ஒரு கோப்பி குடித்துக் கொண்டு கதைப்பம்."

பதிலுக்கு மென்மையாகச் சிரிக்கின்றான் அவன். பிறகு என் காரின் பின்பக்கத்தை என் அனுமதியுடன் போட்டோ எடுத்துக் கொள்கிறான். அவள் தான் கோப்பி குடிப்பதில்லை எனக் காரிலேயே இருந்து கொள்கிறாள்.

அந்தக் கோப்பிக் கடை மிக அமைதியாகவும் வெகு துப்பரவாகவும் இருக்கின்றது. இரண்டு கோப்பியை வாங்கிக் கொண்டு இருந்த கையோடை நான் ஆரம்பிக்கிறேன்.

" உங்கடை எழுத்திலை, பேச்சிலை எனக்கு ஒரு பைத்தியம். என்ன மாதிரி எழுதிறியள்! எவ்வளவு தெளிவாய்ப் பேசுறியள்! அப்படியே ஆட்களின்ரை மனசுக்கை போய்ப் பாத்த மாதிரி! மனிச மனங்களை யும் அதிலை ஏற்படுற தாக்கங்களையும் நீங்கள் விளங்கிக் கொண்ட மாதிரி எல்லாராலும் விளங்கிக் கொள்ள முடிந்தால் எங்கடை பாதிப் பிரச்சனை குறைஞ்சிடும்... ம்... உங்கடை மனிசி கொடுத்து வைச்சவ."

" தாங்ஸ், ஆனால் நீங்கள் என்னை அதிகமாய்ப் புகழுறியள். அப்படி ஒன்றும் நான் பெரிய ஆள் இல்லை... சரி, விஷயத்துக்கு வருவம். உங்கடை காரின்ரை பின்பக்கத்தைப் பாத்தனான். நீங்கள்



சொன்னது... 400 டொலர் அதிகம் எண்டு நான் நினைக்கிறன்."

" அதை விடுங்கோ, அதைப் பற்றி பிறகு யோசிப்பம். உங்களை இப்படித் தனியச் சந்திக்கக் கிடைக்கும் எண்டு நான் கனவிலும் நினைக் கேல்லை...."

" எகேன், யூ ஆர் கிவ்விங் மீ ரூ மச் கிறடிற்ஸ்."

"நீங்கள் தன்னடக்கமாகக் கதைக்கிறியள். சரி, ஸ்காபரோவிலை தானே இருக்கிறியள். வீட்டை வந்து ஆறுதலாய்ச் சந்திக்கலாமோ?"

" இல்லை, நான் இருக்கிறது மாக்கத்திலை...."

"என்ன...? அப்ப அவவின்ரை லைசன்ஸிலை ஸ்காபரோ எண்டு ..."

" இப்ப அவ என்னோடை இல்லை, வீ ஆர் டிவோர்ஸ்ட்."

" வட்... ரியலி?" ஒருவகைக் கவலையுடனும் ஏமாற்றத்துடனும் சொல்கிறேன் நான்.

"வெல், தி ஸ் லைவ்! எங்களுக்குள்ளை ஒத்துப் போகேல்லை... அதாலை நாங்கள் புருஷன் பெண்சாதியாக வாழ முடியாமல் போச்சுது. இப்ப நாங்கள் வெறும் நண்பர்களாக இருக்கிறம். அதாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போராட்டமில்லை. பிரச்சனைகளுமில்லை. ஆளுக்கு ஆள் உதவியாக இருக்கப் பாக்கிறம்."

" ஓ மை கோட்! உங்களை விட்டிட்டுப் போன ஒரு பொம்பிளைக்கு உதவுற உங்கடை நல்ல மனசைப் பாத்து என்ன சொல்றது எண்டே எனக்குத் தெரியேல்லை! இப்படியான பொம்பிளையைளைக் கோவிக்காமல், அவதூறு சொல்லாமல் இருக்கிறவை யளைக் காணுறதே அருமை. அப்படியிருகேக்கை, நீங்கள்.... உங்களிலை எனக்கு இருந்த மரியாதை இப்ப இன்னும் அதிகமாயிட்டுது. யூ ஆர் றியலி கிறேற்!"

"வில்லங்கமாக இழுத்து வைச்சுக் கொண்டு ஆளை ஆள் வருத்துறது பெரிய பாவம் இல்லையோ? எதையும் சமாளிச்சு வாழலாம் எண்டது யதார்த்த மில்லை எண்டு நான் நினைக்கிறன். பிள்ளை களுக்காக, சமுதாயத்துக்காக எண்டெல்லாம் காரணம் தேடிக் கொண்டு பலர் பொய்யுக்கு வாழினம். உண்மை யாக வாழவேணும் எண்டு நாங்கள் நினைச்சம்... அவ்வளவுதான்!"

"எனக்கும் இது ஒரு படிப்பினை தான்." என் மனசுக்குள் சொல்லிக் கொள்கிறேன்.

"ரண்டு பேற்றையும் வாழ்க்கைப் பெறுமானங்கள் முற்றிலும் வேறாய் இருந்தால் எவ்வளவுக்கு எண்டு தான் விட்டுக்கொடுக்க முடியும்? ஒருத்தருடைய தனித்துவத்தை இழந்து வாழுறதுக்கு அன்பு, காதல், தியாகம் எண்டெல்லாம் பெயரிடுறது சுத்த அபத்தம். பிடிச்ச விதத்திலை வாழவேணும். பரஸ்பரம் இருவரும் மனமொத்து ஏற்றுக்கொள்ளும் நிலைமை இல்லையெண்டால் காதல் வாழாது. காதல் இல்லாட்டி வாழ்க்கை சுவைக்காது.... சரி, நிறையக் கதைச்சிட்டம்.... வந்த விஷயத்துக்கு வருவம். உங்கடை காரை இடிச்சது அவ, உங்கடை காரைத் திருத்த வேண்டியது எங்கடை பொறுப்பு, எங்காவது கொண்டு போய் மதிப்பீடு செய்து போட்டுச் சொல்லுங்கோ. மீண்டும் பேசிக் கொள்ளுவம்." சொல்லிவிட்டு எழுந்து நின்று எனக்கு கைகொடுக் கிறான் கேசவன்.

இரண்டு பேருமாக வந்து எங்கள் எங்கள் கார்களுக்குள் ஏறிக் கொள்கிறோம். வேலையிடத்தை நோக்கி என் காரைத் திருப்புகிறேன், நான். ஆனால் கை வீட்டுக்குப் ஃபோன் பண்ணுகிறது.

" என்ன செய்கிறாய்? படுத்திட்டியா?"

"இப்பத் தான் படுத்தனான், சொல்லுங்கோ."

"உன்னோடை கதைக்க வேணும் போலி ருந்தது, அது தான் எடுத்தனான்.... ஸொறி..., நேற்று நான் வீட்டுக்கு வர நேரம் போகும் எண்டதை ஃப்போன் பண்ணிச் சொல்லியிருந்திருக்கலாம்..."

"நானும் தான் ஸொறி சொல்லோணும். பீற்சா வாங்கியிருக்கிறியள். ஆனால் சாப்பிடேல்லை. பாக்கக் கவலையாக இருந்தது. நேற்று எனக்குச் சரியான வயித்துக்குத்து. அதுதான் ஒண்டும் செய்ய முடியேல்லை. ஏதாவது வாங்கித் தந்துபோட்டு போகத்தான் நினைச்சனான். பிறகு... காத்திருந்து, காத்திருந்து களைச்சதிலை கோவம் வந்திட்டுது. இரவைக்கு வடிவாச் சமைச்சு வைக்கிறன். என்ன?"

"சரி, ஒரு நேரம் சாப்பிடாட்டில் என்ன, செத்தா போகப் போறன்? நீ படு. 3 மணி மட்டிலை நான் சாப்பாடு வாங்கிக் கொண்டு வாறன். சேர்ந்து சாப்பிடுவம்."

"ஓ !... ஒரு நாளைக்கு நல்லாய் இருப்பியள்.... பிறகு, இன்னொரு நாளைக்கு நாய் மாதிரி நிற்பியள்...என்ன செய்கிறது... சண்டை பிடிக்கிறியள் எண்டு விட்டிட்டேலுமோ...."

"ஏய், என்ன... என்னடி சொன்னாய்?.... சரிதான்... விட்டிட்டுப் போடி..!" செல்லமாய்க் கடிந்து கொள்கிறேன்... அவள் அதை ரசித்துச் சிரிப்பது காதில் கேட்கிறது. ஃபோனை வைக்கிறேன்.

எங்கிருந்தோ வந்த ஒரு அமைதியில், மனம் சாந்தமடைந்துகொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



## க.நவம்

**க.நவம் அவர்கள் பொலிகண்டியில் பிறந்தவர். தற்போது கனடாவில் வசித்து வருகின்றார். "உள்ளும் புறமும்" என்ற சிறுகதைதத் தொகுதியையும், " உண்மைகளின் மௌன ஊர்வலம்" என்னும் கட்டுரைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். இவர் தனது இலக்கியப் பணிகளுக்காக பல பரிசில்களைப் பெற்றவர். "நான்காவது பரிமாணம்" என்னும் கலை இலக்கிய மாத இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராவும் விளங்கியவர். இவர் சிறந்த நாடக, திரைப்பட நடிகராக திகழ்கின்றார். இவரது நேர்காணலை ஜீவநதி வாசகர்களாகிய உங்களுக்கு தருவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.**

**பரணீ** - உங்கள் இலக்கிய உலகப் பிரவேசம் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுங்கள்?

**க.நவம்** - அறுபதுகளின் முற்பகுதியில் பத்தாம் வகுப்பு மாணவனாக யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி விடுதியிலிருந்து நான் கல்விகற்றுவந்த காலமது! நண்பர்கள் சிலரது துணையுடன் "குழலோசை" என்ற மாதாந்த கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை விடுதியில் வெளியிட்டேன். அந்தனிசில் அவர்களது அந்நாளைய "தீப்பொறி" தந்த உசாருடன், விடுதிச் சுவாரஸ்யங்களைச் சு(ரு)தி சேர்த்து, ஊதிப் பெருப்பித்துப் பிரசித்தமாக்குவது பிரதான நோக்கம். காரசாரமான கண்டனங்கள், விமர்சனங்களுடன், கூடவே சின்னச் சின்னக் கதைகள், கவிதைகள், துணுக்குகளைத் தாங்கி வந்த அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் பிரதான எழுத்தாளரும் நான்தான்! விடுதி மேற்பார்வையாளராய் இருந்த சுவாமியாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, மாணவர்கள் அனைவரும் காத்திருந்து "அசுக்கிடாமல்" படித்து மகிழ்ந்த அந்தக் குழலோசையே எனது எழுத்துப் பணிக்கான பிள்ளையார் சுழி!

பின்னர் 1964ஆம் ஆண்டு ஹாட்லி கல்லூரியில் கபொத உயர்தர வகுப்பு மாணவனாக இருந்தபோதுதான் எனது ஆக்க இலக்கியப் பிரவேசம் இடம்பெற்றது. கல்லூரியில் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் பரிசு கிடைத்தது. இலங்கை சாகித்திய மண்டலம் நடத்திய அகில இலங்கை மாணவர் சிறுகதைப் போட்டியில் "தாயுள்ளம்" என்ற எனது சிறுகதை இரண்டாவது பரிசைப் பெற்றது. இந்த உற்சாகம் அடுத்த ஆண்டு சிரித்திரன் சிறுகதைப் போட்டியிலும் பரிசினைத் தேடித்தந்தது. தினபதி அந்நாட்களில் நடத்தி வந்த நாளொரு சிறுகதைத் திட்டத்தின்கீழ் வெளிவந்த "விரதம்" என்ற எனது சிறுகதை பலரது கவனத்தையும் ஈர்த்தது. எழுபதுகளின் ஆரம்பத்தில் மல்லிகையில் வெளிவந்த "ஒரு பூ உதிர்கிறது" என்ற சிறுகதையைத் தொடர்ந்து, படிப்பும் படைப்பும் பணியும் என்பதான எனது முயற்சிகள் நத்தை வேகத்தில் நகரலாயின.


**பரணீ** - படைப்பாக்க முயற்சிக்கு உங்களை இட்டுச் சென்ற மனிதர்கள் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுவீர்களா?

**க.நவம்** - படைப்பூக்கமானது பரம்பரை வழியாக அல்லது புறச்சூழலின் பாதிப்பு காரணமாக அல்லது உண்மையான சுயதேடுதலினூடாக அல்லது இவை போன்ற பல கூட்டுக் காரணிகளின் பெறுபேறாக ஒருவரை வந்தடையலாம். இந்தப் படைப்பூக்கம் எனக்குள் முளை விடுவதற்கு இவை அனைத்துமே காரணங்கள்தான்.

எனது தந்தைவழி மூதாதையர்கள் பலரும் வைத்தியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஆடல் பாடல்களிலும் தேர்ச்சியும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்கள். நாட்டுக் கூத்துக் கலைஞரும், சுடச் சுடச் சிலேடைக் கவிதை சொல்ல வல்லவருமான எமது பெரிய தந்தையார், இலக்கண சுத்தியுடன் அழகான முறையில் முத்து முத்தாகத் தமிழை எழுதவல்லவரான எமது தந்தையார், "தம்பு அண்ணாவியார்" எனப் பிறராலும் அறியப்பட்ட எமது மைத்துனர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபக்தரும் பக்தி இலக்கியங்களில் மிகுந்த நாட்டம் உடையவருமான எமது தாய் மாமனார் ஆகியோர் எனக்குத் தெரிந்த இத்துறைசார்ந்த மூத்த தலைமுறையினர்.



வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பேராதனை பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிலையங்களில் எனக்குக் கல்வி புகட்டிய ஆசான்கள் சிலர் எனது படைப்பாக்க முயற்சிக்கான ஆரம்ப உழவாளிகள். குறிப்பாக, எனது எழுத்துலக முதற் பிரவேச முயற்சிகளுக்குக் கால்கோளிட்டவர்களில் முக்கியமானவர்கள் எனது இரண்டு ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்கள். எனது கட்டுரைகள் ஊடாக என்னை அடையாளம் கண்டு, எனது ஆற்றல் விருத்தி செய்யப்பட வேண்டியதென ஊக்கம் தந்தவர் ஆசிரியர் திரு. இராஜரத்தினம் அவர்கள். பொறியியலாளர்களையும் வைத்தியர்களையுமே பெருமளவில் உருவாக்கி வந்த ஹாட்லியிலிருந்து, படைப்பாற்றல் மிக்க கலைஞர் களையும் உருவாக்கலாம் என்பதை நிறுவியவர் ஆசிரியர் திரு. ஜி. ஜி. மகாலிங்கம் அவர்கள். ஹாட்லி கல்லூரியில் அவர் முன்னின்று நடத்திய படைப் பிலக்கியப் போட்டிகளில் பலவந்தமாகப் பங்குபற்ற வைத்து, எனக்குப் புதிய துறை ஒன்றைத் திறந்தவர், அவர்.

இவர்கள் அனைவருக்கும் மேலாக, எனது படைப்பூக்க ஆளுமை வளர்ச்சியின் பிரதான காரணியாக விளங்குபவர் எனது மூத்த சகோதரர் தெணியான். நான் தமிழை முறைப்படி கற்காதவன். விஞ்ஞானத்தைக் கற்று, விஞ்ஞானத்தையே பல வருடங்களாகக் கற்பித்து வந்தவன். அத்தகைய எனக்குத் தமிழ்மீது நாட்டத்தை ஏற்படுத்தியவர் தெணியான். அவர் தமது மாணவப் பருவத்தில் தமிழிலக்கியம், சைவசமயம் போன்ற பாடங்களில் வரும் பாடல்களை உரத்துப்பாடி மனனஞ் செய்தபடியே தமது அன்றாட காரியங்களைச் செய்யும் பழக்க முடையவர். அன்று அவற்றைச் செவிமடுத்ததன் பயனாகவே இன்றுவரை நான் பல தேவார திருவாசகங் களையும் இதிகாச, சங்க இலக்கியப் பாடல்களையும் மனதில் பதித்து வைத்திருக்கின்றேன். தமது பள்ளிப் பருவத்திலிருந்தே அவர் பலதரப்பட்ட நூல்களை வாசிக்கவும் எழுதவும் ஆரம்பித்திருந்தார். அதனால் அன்றுதொட்டு, வாசிப்புக்குத் தேவையான நூல்களைத் தேடி அலையவேண்டிய தேவை எனக்கிருக்கவில்லை. மேலாக, நானும் நிறைய வாசிக்கவேண்டும், நிறைய எழுதவேண்டும், நிறையவே சாதிக்க வேண்டும் என்பதில் இற்றைவரை அவர் காண்பிக்கும் அக்கறை தான் எனது இன்றைய ஆளுமை யின் உந்து சக்தி.

**பரணீ**- *ஈழத்திலும் கனடாவிலும் உங்களின் கலை இலக்கிய முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?*

**க.நவம்** - மல்லிகையில் வெளிவந்த "ஒரு பூ உதிர்கிறது" என்ற சிறுகதையே எனது காத்திரமான இலக்கிய முயற்சியின் துவக்கப் புள்ளி. அதனைத் தொடர்ந்து, எழுபதுகளில் மேலும் சில கதைகள் மல்லிகையில் பிரசுரமாயின. வர்த்தகக் கப்பல் துறை அமைச்சின் ஆதரவுடன், ஆக்கவுரிமை வியாபாரக்குறி பதிவகத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்டு வந்த இலக்கியப் போட்டியில் 83ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதிக் கான முதற்பரிசை "உள்ளும் புறமும்" என்ற எனது தொகுதி பெற்றிருந்தது. கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர், இது நூலுருவம் பெற்று, இங்கு வெளிவந்த முதலாவது தமிழ்ச் சிறுகதைத் தொகுதியானது. தொடர்ந்து, அவ்வப்போது எழுதிய சிறுகதைகள் இன்னொரு தொகுதிக்கெனக் காத்துக் கிடக்கின்றன. நான் சொல்ல நினைப்பவற்றைக் கதாமாந்தர் ஊடாகச் சொல்வதைத் தவிர்த்து, மிகை யான கற்பனையுடன் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, உருவகக் கதைகளையும் தொடர்ந்து எழுதி வருகிறேன்.

சின்ன வயதிலிருந்து சிலேடைக் கவிதைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி வந்த என்னை, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம்தான் அரங்கக் கவிஞனாக்கியது. கண்டி, கொழும்பு, கனடா என இன்னமும் அது தொடர்கிறது. கவிதையானது செவிப்புலனுக்குரிய கலை என்ற நிலைமாறி, அது கட்புலனுக்குரிய கலைவடிவமாகி நீண்ட காலமாகிவிட்ட நிலையிலும், சந்தக் கவிதை களுக்கென விடுக்கப்படும் நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபடவெனச் சதா முயன்றுகொண்டிருக்கிறேன். விரல் விட்டு எண்ணக்கூடியளவில் சில நவீன கவிதை களைப் படைத்துள்ளபோதிலும், நிறைவான கவி மனதுடன் வாழ்கிறேன் என்ற திருப்தி எப்போதும் எனக்குண்டு.

"நான்காவது பரிமாணம்" என்ற கலை இலக்கிய சஞ்சிகையை தொண்ணூறுகளின் முற்பகுதி யில் கனடாவிலிருந்து வெளியிட்டேன். 13 இதழ் களுடன் அது நின்றுபோன பின்னரும், வெவ்வேறு படைப்பாளிகளின் 14 நூல்கள் இதுவரை "நான்காவது பரிமாணம்" வெளியீடாக வெளிவந்துள்ளன. ஆக்க இலக்கியத் துறையைவிட, இப்போதெல்லாம் கலை இலக்கிய விமர்சனங்களிலும் கட்டுரைகளிலும் கூடுதலான காலத்தை முதலீடு செய்து வருகின்றேன். ஒரு படைப்பாளியாகவும் ஒரு விமர்சகனாகவும் ஒரே சமயத்தில் இருப்பதில் உள்ள சிக்கல்களையும் சிலாக்கியங்களையும் சுமந்து வருகின்றேன்.

**பரணீ**-"நான்காவதுபரிமாணம்" சஞ்சிகையின் வழிவந்த ஒருசில அனுபவங்களை அறியலாமா?

**க.நவம்** - தொண்ணூறுகளின் ஆரம்பத்தில், ரொறொன்ரோவிலிருந்து "தாயகம்" வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், அதன் ஆசிரியர் ஜோர்ஜ் குருஷேவுக்கும் அவரது சகபாடியான மூர்த்திக்கும் (கனடா மூர்த்தி, மொன்றியால் மூர்த்தி, சிங்கப்பூர்



மூர்த்தி என்று பலபேர்கள் அவருக்குண்டு) எனக்கும் இடையே நல்ல நட்புறவு இருந்தது. தாயகம் ஏற்கனவே தனக்கெனப் பூசிக்கொண்டிருந்த அரசியல் அரிதாரம் ஏதுமின்றி, அதன் உபவெளியீடாக "நான்காவது பரிமாணம்" என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை வெளியிட விரும்பினோம். சஞ்சிகையின் ஆசிரியர் பொறுப்பை என்னையே ஏற்குமாறும், பின்னணியிலிருந்து தாம் இருவரும் உதவி வழங்குவதாகவும் எமக்கிடையில் எழுதாதவோர் புரிந்துணர்வு ஒப்பந்தம். கனடாவில் காத்திரமான ஒரு இலக்கிய சஞ்சிகை இல்லாததால் ஏற்பட்டிருந்த இடைவெளியை நிரப்புவது தான் நோக்கம். துரதிஷ்டவசமாக, சஞ்சிகையின் முதல் இதழ் வெளிவர முன்னரே எமக்கிடையிலான முக்கூட்டு முன்னணி முறிந்து போயிற்று. அவர்கள் இருவருக் கிடையிலும் கருவாகி உருவாகிப் பிறந்த பிள்ளையை, அன்று கணினி அறிவோ அல்லது தட்டச்சுத் தேர்ச்சியோ இல்லாத நான், தன்னந் தனியனாகத் தத்தெடுத்துத் தலையிற் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

கடுமையான உழைப்புடன் 13 இதழ்கள் வெளிவந்தன. இலங்கை, இந்தியா, கனடா உட்பட உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ்ப் படைப் பாளிகள் இதில் எழுதினார்கள். இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து ஆக்கங்களை வழங்கி வந்தவர்களுக்கென சிறுதொகைப் பணத்தைச் சன்மானமாக நா.ப. வழங்கி வந்தது. ஈழத்தில் யுத்த மேகம் சூல்கொண்டிருந்த அத்தருணத்தில், பக்கச் சார்பின்றிப் பலதரப்பட்ட கருத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்க விருப்பம் கொண்டிருந்தது. மிகவும் அரிதாகவே கிடைக்கப் பெற்ற வளங்களையும் சாதனங்களையும் பயன்படுத்தி, ஒரு தரமான சஞ்சிகையாக வெளிவந்துகொண்டிருந்தது.

சக்கரவர்த்தி, நிலா குகதாசன், அ. கந்தசாமி, நாளாயினி மூர்த்தி போன்ற பல புதிய படைப்பாளி களை உருவாக்கியிருந்தது. ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையே ஒரு தொடர்புப் பாலமாக இருந்து வந்தது. காலம் கடந்தும் தனது வாசகர்களது மனங்களை விட்டகல மறுக்கும் கனதியான ஆசிரிய தலையங்கங்களைத் தாங்கி வந்தது. இடையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளும், "அரசியல் பலவந்தங்களும்" அதன் ஆயுளை நீண்ட காலம் நீடிக்க இடமளிக்காது போனமை துயரமே. பயணத்தைப் பாதிவழியில் நிறுத்திக்கொண்ட போதிலும், தனது ஒவ்வொரு சந்தாதாரரின் மிகுதிப் பணத்தையும் சரிவரக் கணக்குப் பார்த்து நேர்மையாகத் திருப்பிக் கொடுத்த நற்பெயர் நா.ப.க்கு எப்போதும் உண்டு. தரங்கெட்ட நுகர்வோர் சந்தையில், தரமான உற்பத்தி முயற்சி "ஒரு தற்கொலை முயற்சிதான்" என்ற உண்மையை நா.ப. மிகுந்த விலை கொடுத்துக் கற்றுக்கொண்டது.

**பரணீ** - "புலம்பெயர் இலக்கியம்" என்ற எண்ணக்கருவில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றிக் குறிப்பிட்டு, புலம்பெயர் இலக்கியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் எனக் கூறுங்கள்?

**க.நவம்** - 1980களின் ஆரம்பத்தில் ஈழத்தில் முனைப்புப் பெற்ற இனப்பிரச்சினையானது ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்து, வன்முறைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகோலியபோது, பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் தமது உயிரையும் உறவுகளையும் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளவெனத் தமது வாழிடங்களிலிருந்து வெளியேறி, உலக நாடுகளெங்கும் புகலிடம் தேடிக்கொண்டனர். இவர்களுள் படைப்பாற்றல் மிக்கவர்கள் தத்தமது புகலிட வாழ்வனுபவங்களை இலக்கியங்களாக்கினர். இவர்கள் பெரும்பாலும் ஈழத் தமிழர்களாகவே இருந்ததால் இந்த இலக்கியம் "ஈழத்தமிழரது புலம்பெயர் அல்லது புகலிட இலக்கியம்" எனப் பெயர்பெற்றது.

ஈழத்தமிழரது அலைந்துழலலின் போதான துன்ப துயரங்களையே ஆரம்ப காலப் புலம்பெயர் இலக்கியங்கள் பேசின. சொந்த மண்ணிலிருந்து பிடுங்கி வீசப்பட்டமை முதற்கொண்டு, புகுந்த நாடுகளில் வேர்கொள்ள முடியாமையின் வெறுமை ஈறாக அனைத்து வகைத் துயரங்களையும் அவை பேசின. நிலைமை சீரடையும் பட்சத்தில் மீண்டும் தாயகம் திரும்ப வேண்டும் – திரும்புவோம் என்ற எண்ணமும் நம்பிக்கையும் பெரும்பாலான படைப்புக்களில் விரவியிருந்தன.

சுமார் 20 வருடகாலப் புலம்பெயர் வாழ்வின் இன்றையநிலை இதிலிருந்து மாறுபட்டுக் காணப்படு கின்றது. புதிய வாழிடங்களில் குடும்பக் கட்டுமானங்கள் கிளைவிட்டு வியாபித்துவிட்ட நிலையில், ஊர்திரும்பும் எண்ணம் பெரும்பாலான புலம்பெயர் தமிழச் சமூகத்தவரது மனதைவிட்டு அகன்றுவிட்டதாகவே தோன்றுகின்றது. பதிலாக, தாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகளின் வாழ்வியல் சூழலுக்கு இசைவாக்கம் அடைவதில் பெரிதும் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதனையே இந்நாளைய புலம்பெயர் இலக்கிய முயற்சிகளும் பிரதிபலிக்கின்றன.

இது மட்டுமல்லாமல், புலம்பெயர் இலக்கியம் தோன்றிய வரலாற்றுச் சூழல் பெருமளவில் மாற்ற மடைந்துள்ள நிலையில், இனிவரும் படைப்புக்கள் புலம் பெயர் இலக்கியம் என்ற அடையாளத்தைக் கொண்ட தாக இருக்கப்போவதில்லை. அதனைக் கடந்த, உலகளாவிய பார்வை கொண்ட ஒரு தமிழ் இலக்கியமாகவே புலம்பெயர் இலக்கியம் பரிணாமம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பரணீ** - கனடாவில் குடியேறியுள்ள தமிழர் களின் எதிர்கால சந்ததியினரிடையே தமிழ் இலக்கியம் மீதான ஆர்வம் எவ்வாறு இருக்கும் என நினைக்கின்றீர்கள்?

**க.நவம்** - எந்தவொரு புலம்பெயர் சமூகத்தி லிருந்தும் முதலில் தொலைந்துபோவது அதன் மொழி தான். அதன் பின்னரே அச்சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்கள் சிறிது சிறிதாக மறையத் துவங்கும். கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ்ச் சமூகத்திலும் இது சிறுகச் சிறுகச் சம்பவிக்கத் துவங்கிவிட்டது. பொதுவாக கனடாவில் பிறந்து வளர்ந்த எமது புதிய தலைமுறையினர் தமிழைப் பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ முடியாத தமிழர்களாகவே வளர்ந்து வரக் காண்கின்றோம். இப்படிப்பட்டவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வம் எப்படி ஏற்படமுடியும்?

உயர்கல்வியைக் கற்றுவரும் வேளையில் தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பினையும் கேள்வியுற்று, தமிழையும் தமிழிலக்கியத்தையும் கற்றறிவதில் நாட்டம் கொள்ளும் புதிய தலைமுறை யினர் ஒருசிலர் இருக்கின்றனர். வருடாவருடம் இடம்பெற்று வரும் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழியல் மாநாடுகளில் பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றி ஆய்வுசெய்து கட்டுரை சமர்ப்பிக்கும் இளம் சந்ததியினரைக் காண்கின்றோம். தமிழிலக்கியங்கள் மீதான அவர்களது பரந்த அறிவும் ஆழ்ந்த புலமையும் கூரிய பார்வையும் அலாதி யானவை. ஆனால் அவர்களுக்கோ தமிழிலக்கியங் களை ஆங்கில மொழிவாயிலாகவே கற்றறிந்து, ஆங்கில மொழியிலேயே அவை குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம்.

எமது புதிய சந்ததியினரிடமிருந்து தமிழ் மொழி மறைந்து போனாலும், "நிறம்" மறையாமல்தான் இருக்கப் போகின்றது. இவை இரண்டுக்கும் இடையிலான பண்பாட்டுக் கூறுகளான உணவுப் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் போன்ற ஏனைய அடையாளங்கள் அழிந்தொழிந்து போவதற்கு சற்று நீண்ட காலமெடுக்கும். இந்நிலையில் எமது புதிய தலைமுறையினர் இப்பண்பாட்டு அடையாளங் களையும் அவற்றின் அடிப்படையிலான அனுபவங் களையும் இலக்கியங்களாக நிச்சயம் பதிவு செய்வர். ஆனால் அவை "தமிழர் இலக்கியம்" என வகைப்படுத் தப்படக் கூடுமேயன்றி, "தமிழ் இலக்கியம்" என்றல்ல.

**பரணீ** ~ கனடாவில் தமிழர்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகள் பற்றிய உங்கள் மனப் பதிவைக் கூறுங்கள்?

**க.நவம்** - கனடாவில் தமிழர்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளை நிரல்படுத்தினால் அநுமான் வால் மாதிரி அது நீண்டு செல்லும். சிக்கனம் கருதி அவையனைத்தையும் அரங்கேற்றங்கள், கலை விழாக்கள், நாடக விழாக்கள், வர்த்தக விழாக்கள், சடங்கு நிகழ்வுகள், இலக்கியச் சந்திப்புகள், நூல் வெளியீடுகள், எழுச்சி விழாக்கள், விழிப்புக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்கள், அரசியற் கூட்டங்கள், பருவகால ஒன்றுகூடல்கள் என்ற வகைகளுக்குள் அடக்கலாம்.

பெரும்பாலும் கோடை காலங்களில் இடம்பெறும் பிரதேசம் – ஊர் – உத்தியோகம் – பாடசாலைசார் கலை விழாக்களிலும் அரங்கேற்றங் களிலும் வர்த்தக விழாக்களிலும் பெருந் தொகையான தமிழர்கள் பங்குபற்றுவார்கள். உறுப்பினர் உரிமையை நிலைநாட்டுவதும், அழைப்பை மதித்தேற்பதும், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள், உறவினர் களைச் சந்திப்பதும்தான் பிரதான நோக்கம். கலை யார்வமும், வர்த்தகக் கொள்வனவும் இரண்டாம் பட்சம். நாடகத்துறை ஆற்றல்கள் ஒன்றுதிரண்டிருந்த "ஒரு நிலாக் காலத்தில்" காத்திரமான நாடகங்களைப் பார்ப்பதற்கெனக் கணிசமான தொகையினர் திரண்டு வந்தனர். நாடகக் குழுக்கள் பலவாகப் பிளவுபட்டதைத் தொடர்ந்து, பார்வையாளர்களும் பங்காடப்பட்டு விட்டனர்.

திருமணம், பூப்பு நீராட்டு, மரண நிகழ்வுகள் என்பன சடங்குகளுக்குள் அடங்குபவை. திருமணம், பூப்பு நீராட்டு, அரங்கேற்றம் ஆகிய நிகழ்வுகளுக்கு டொலரை அள்ளி இறைத்துக் கோலாகலமாகக் கொண்டாடுவர். பருவகால ஒன்றுகூடல்கள் கோடை, மாரி காலங்களில் இடம்பெறுபவை. கோடை காலங்களில் திறந்த வெளிப் பூங்காக்களில் தண்ணியுடனும் தணல் வாட்டுணவுகளுடனும் (BBQ) கூடிய கேளிக்கைகள் இடம்பெறும். மாரிகாலங்களில் கிறிஸ்மஸ், புதுவருட ஒன்றுகூடல்கள் உள்ளக அரங்குகளில் நடைபெறும். சினிமா, சீரியல், சில்லறை விஷய ஞானமில்லாதவர்கள் இவ்வகைப்பட்ட சந்திப்புக்களில் ஓரங்கட்டப்படுவது திண்ணம்.

பெரும்பாலான புத்தக வெளியீடுகள் ஊரவர், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் குவிந்திருக்க, "பணச்சடங்கு"ப் பாங்கில் நடந்தேறும் வேடிக்கையைப் பார்க்கலாம். எழுச்சி விழாக்கள், விழிப்புக் கூட்டங்கள், அரசியற் கூட்டங்கள் என்பன குறிப்பிட்ட சமூக, அரசியல் நோக்கங்கள் சார்ந்தவை. அந்தந்தக் கொள்கைகள், நோக்கங்களுடன் உடன்பாடுடையவர்கள் மட்டும் இவற்றில் பங்குகொள்வார்கள்.

காத்திரமான இலக்கியக் கருத்தரங்குகளிலும், நாடக விழாக்களிலும், புத்தக வெளியீட்டு நிகழ்வு களிலும் குறிப்பிட்ட ஒரு சிலரே திரும்பத் திரும்ப வந்து கலந்துகொள்ளக் காணலாம். காத்திரமான கலை இலக்கிய வேட்கை கொண்ட சிறுபான்மைக்குள்ளும் நூறு குழுக்களும் நூற்றுக்கதிகமான குறுநில மன்னர்களும். தோழமை துலங்கும் நட்போ அல்லது ஆழவேர்கொண்ட விழுமியங்களோ அற்ற வெறும் வெட்டிப் பேச்சுக் குழுக்களுக்கே உரிய சிந்திப்பும் சந்திப்பும் சர்வ சாதாரணமாக நிகழக் காணலாம். இவர்களை நோக்கி, அண்மையில் கனடா வந்து போன விமர்சகரும் எழுத்தாளருமான ஜமுனா ராஜேந்திரன் சொல்லிச் சென்ற இந்த வார்த்தைகள், இங்கு சொல்லாத பல செய்திகளைச் சொல்லும் –

"பகிடி செய்வதையும், நக்கல் செய்வதையும், பிறரை நோக்கிக் கேள்வி கேட்பதையும் மட்டுமே உங்களது விமர்சன அறமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களிடமிருந்து வரலாற்று ரீதியான, கோட்பாட்டு அடிப்படையிலான அரசியல் விமர்சனமாக ஒரு பத்தியோ அல்லது கட்டுரையோ உருப்படியாக இதுவரையிலும் வரவேயில்லை. இனிமேலாவது உருப்படியாக எதையாவது எழுத முயற்சி செய்யுங்கள்"

***பரணீ*** ***~ கனடா தமிழர்களிடம் சாதிய உணர்வுகள் இன்றும் மேலோங்கி இருப்பதாகச் சில செய்திகளைப் படித்த ஞாபகம் உண்டு. இது இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடித்து நிற்கும் என நம்புகின்றீர்கள்?***

**க.நவம்** -இந்த வருடக் கோடை விடுமுறைத் தமிழ் வகுப்புத் தொடரின் கடைசி நாள்; கடைசி மணி நேரம். ஆர்வத்துடன் தமிழ் கற்றுவரும் குழந்தைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் அந்தப் பிரமுகர் அங்கு வந்திருந்தார். வெள்ளிக் கோடுகளுடனான வெட்டி விட்ட கூந்தல்கொண்ட ஒரு தமிழ் ஆசிரியையும் இன்னும் இரண்டொருவரும் அவரை வகுப்பு வகுப்பாகக் கூட்டிச் சென்று பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்தனர். அவரும் பிள்ளைகள் வழங்கிய பூச்செண்டுகளை வாஞ்சையோடு வாங்கிக்கொண்டு, அவர்களை வாழ்த்திச் சென்றார். காரிலேற்றி அவரை வழியனுப்பிவிட்டு வகுப்பறை நோக்கித் திரும்பி வருகையில், "ஒரு ...னைக் கட்டியிருந்தவ. இப்ப விட்டிட்டு, ஒருமாதிரி நல்லா வந்திட்டா" என்று அந்த வெட்டிவிட்ட வெள்ளிக் கூந்தல் கூடவந்த சக ஆசிரியையிடம் பச்சையாகச் சாதி சொல்லிப் பல்லிளித்துக் கொண்டது! கனடாவில் சாதி தொடர்பான ஏராளம் உண்மைக் கதைகளுக்கு இது ஒரு உதாரணம்!

கனடாவின் தடையற்ற தாராளவாத ஜனநாயக சுதந்திரம் யாழ்ப்பாணத் தமிழனின் கட்டுப் பெட்டித் தனங்களுக்கும் புகலிடம் வழங்கியிருக்கிறது. அவற்றுள் பிரதானமான சாதியம், கண்ணுக்குப் புலப்படாத "கண்டல்" வியாதியாகக் கனடியத் தமிழனின் உடலில் இன்னமும் ஒட்டிக்கிடக்கிறது. சமத்துவத்தை வலியுறுத்தும் முற்போக்கான சிந்தனை கொண்டவர்கள்கூட, தத்தமது பிள்ளைகளின் கலியாணம் என்று வருகின்ற போது, இரகசியமாகச் சாதி பார்க்கத் தவறுவதில்லை. ஒரு நாகரிக சமூகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துகொண்டும், இச்சமூக அநீதியை எதிர்ப்பதில் இங்குள்ள புலமையாளர்க்கும் புத்திமான்களுக்கும் இன்னமும் ஒருவகைத் தயக்கமும் கூச்சமும் இருக்கிறது.

ஆனாலும் இங்கு பிறந்து வளர்ந்த பிள்ளைகளோ, சாதி பேசுபவர்களை ஒருவகை வியாதி பிடித்தவர்களாகப் பார்க்கின்றார்கள். சாதிமாறிக் காதலிக்கும் தமிழ் இளம் தலைமுறையினர், சாதி பார்க்கும் பெற்றோரை நிராகரிக்கின்றனர். காதலுக்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். இந்நிலையில் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மெல்லக் கலியாணத்தைச் செய்து கொடுத்துவிட்டுத் தலையைத் தொங்கப் போட்டபடி திரியும் சாதிமான்கள் பலர் இருக்கின்றார்கள். ஆகவே யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதிமுறைமை விதிக்கும் அதிகாரப் படிநிலை இறுக்கம், கனடாவில் நீண்ட காலம் நீடிக்கப்போதில்லை என நிச்சயம் நம்பலாம்.

**பரணீ** - **எதிர்காலவியல் நோக்கில் ஈழத்து தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தூர நோக்குடன் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நீங்கள் உணர்கின்றீர்களா?**


**க.நவம்** -இந்த வினாவுக்கு அச்சொட்டான விடை தரும் அளவுக்கு, சமகால ஈழத்து இலக்கியங்கள் அனைத்தையும் நான் அவதானித்துப் படித்து வருபவன் அல்ல என்பதை முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆயினும் அவ்வப்போது படித்தறிந்த படைப்புக்களின் அடிப்படையில் இது குறித்த அபிப்பிராயம் ஒன்று என்னிடம் உண்டு.

எந்தவொரு இலக்கியமும் அது தோன்றும் காலத்தின் கண்ணாடியாக விளங்கும் தன்மையுடையது. அது சமூக இயைபுடையனவாக இருத்தல் வேண்டும். எழுத்தாளனும் பங்குதாரராக இருக்கும் சமகால சமூக, அரசியல், பொருளாதாரப் பின்னணிகளின் பாற்பட்டதாக இருத்தல் வேண்டும். 60களின் ஆரம்பத்தில் ஈழத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களும், உழைக்கும் வர்க்கத்தினரது எழுச்சியும் முற்போக்கு இலக்கியம் தோன்றுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தமையை ஓர் உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம்.

இதுபோலவே இன்று ஈழத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் சமகால சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் பக்க விளைவுகள்தானா எனக் கேட்டால், "இல்லை" என்றே பதில் கூறவேண்டி உள்ளது. இனப்பிரச்சினை உச்சநிலையை எட்டிய தருணத்தில் வீறார்ந்த கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆயினும் கட்டற்ற வன்முறையுடன் கைகோர்த்துச் சமரசம் செய்தும், அதனை வன்மத்துடன் மீறியும் இலக்கியம் படைக்க வேண்டிய இருதுருவ அரசியற் சூழல் எமது படைப்பாளிகளுக்கு இருந்தது. நீதியையும் நியாயத்தையும் தர்மத்தையும் புறக்கணித்து மௌனம் காக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. சமூக சுதந்திரத்திற்காகத் தனிமனித சுதந்திரத்தைச் சமரசம் செய்யவேண்டிய இடர்பாடு இருந்தது. விடுதலையையும் கட்டற்ற சுதந்திரத்தையும் வேண்டி நிற்கும் இந்தப் படைப்பாளிகளின் கைவிலங்கு இன்னமும் முற்றாகக் கழற்றப்படவில்லை. இந்நிலையில், ஈழத்து தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தூர நோக்குடன், இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இப்போது சொல்ல முடியாது.

**பரணீ** - **நாடக, திரைப்படத் துறைகளுக்கான உங்கள் பங்களிப்பையும், இந்த இரு துறைகள் சார் நடிபங்குகளிற்கிடையே உள்ள முக்கிய வேறுபாடுகளையும் கூறுவீர்களா?**

**க.நவம்** - பள்ளி நாட்களிலிருந்து பல்கலைக்கழகக் காலம்வரை நடித்த, எழுதிய, நெறிப்படுத்தி மேடையேற்றிய நாடகங்கள் பல உள. இவற்றுள் அகில இலங்கை ரீதியாகப் பரிசில்களைப் பெற்றவையும் அடங்கும். "இந்தத் தேசத்துக்காக",



"இவர்கள் பைத்தியங்கள்", "அந்தரங்கம் புனிதமானது," "நட்சத்திரவாசி", "மனிதவேட்டை" என்பன அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. 1986இல் நான் எழுதித் தயாரித்து நெறிப்படுத்திய "இனியொரு விதி செய்வோம்" என்ற குறியீட்டு நாடகமே கனடாவில் மேடையேற்றப்பட்ட முதலாவது சீரிய தமிழ் நாடகமாகும். கனடா, மனவெளி கலையாற்றுக் குழுவின் அரங்காடலுக்கென்று கவிஞர் சேரனின் பிரதியாக்கத்திலான "அவன்.அவள்," (2000), "ஊர்ப்போக்கு" (2002) ஆகிய நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளேன். "இவர்கள் பைத்தியங்கள்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தத் தேசத்துக்காக", "மனிதவேட்டை", "இனியொரு விதி செய்வோம்", "கல்லைப் பிழந்து கடலோரம் வைத்த முட்டை", "தலைவாரிப் பூச்சூடினோமே", "சுமை" ஆகிய எனது நாடகப் பிரதிகள் கைவசமுண்டு. நண்பர் வி. திவ்வியராஜன் தயாரித்து நெறிப்படுத்திய "சகா"(2006) என்ற திரைப்படத்திலும், "உறவு"(2010) என்ற திரைப்படத்திலும் முறையே கதாநாயகனின் தந்தையாகவும், கதாநாயகியின் தந்தையாகவும் பாத்திரங்கள் ஏற்று நடித்திருக்கிறேன்.

நடிப்பு என்ற வகையில் இவ்விருதுறை களிலும் துல்லியமான வேறுபாடுகள் சில இருக்கவே செய்கின்றன. திரைப்படத்தில் குறிப்பிட்ட ஓர் உணர்ச்சியை கமராவின் உதவியுடன், மெல்லிழை வான முகபாவங்கள் மூலமாகவும் மிக நுட்பமான உடல் மொழியாலும் வெளிப்படுத்திவிட முடியும். நாடகத்தில் இது சாத்தியமில்லை. அரங்கின் கடைசி வரிசையில் உள்ள பார்வையாளனும் காணும் வகையிலான மிகையான உடலசைவையும் அபிநயத்தையும், சமயங்களில் குரல் வளத்தையும் நாடக நடிப்பு வேண்டி நிற்கும். உயிரற்ற கமராவின் முன்னால் நடிக்கும்போது உடனடி எதிர்வினைக்கு இடமில்லை. மிகச் சிறந்த நிகழ்த்துகை கிட்டும்வரை மீண்டும் மீண்டும் நடிக்க வாய்ப்புண்டு. இதனால் தீவிர, நீண்டகால ஒத்திகை பெரிதும் தேவைப்பட மாட்டாது. நாடகத்திலோ நடிகருக்கும் பார்வையாளருக்கும் இடையே நேரடித் தொடர்பிருப்பதால் அவர்களிடமிருந்து சாதகமான அல்லது பாதகமான உடனடி எதிர்வினை கிடைக்கின்றது. ஆனால் மீள நடிப்பதற்கான வாய்ப்பு அங்கில்லை. ஆகையால் மிகக் கவனமான, தீவிரமான, நீண்டகால ஒத்திகை தேவை. நாடக மேடையில் சக நடிகர்களுடன் இடையறாத ஒருங்கிணைவு பேணப்படுதல் அவசியம். திரைப்படத்தில் அதற்கான தேவை குறைவு. ஒவ்வொருவரும் தனித்தனியே நடித்து, முடிவில் உரியவாறு படத்தொகுப்புச் செய்தெடுக்கும் வாய்ப் புண்டு. இவ்வாறாக இவ்விரு துறைகள்சார் நடிப்புக்கிடையிலான வேறுபாடுகளைத் தொடர்ந்து விபரித்துக்கொண்டே போகலாம்.

**பரணீ** - கனடாவில் உள்ள குறிப்பான தமிழ் இலக்கிய ஆளுமைகள் என யார்யாரைக் குறிப்பிடுவீர்கள்?

**க.நவம்** - குறிப்பிட்ட ஒரு பண்பில் அல்லது திறனில் மற்றவர்களைவிட மேம்பட்டு விளங்கும் ஒருவரைச் சிறந்த ஆளுமையாளர் எனக் கூறலாம். இந்த வகையில், கனடாவில் இலக்கியத் துறையில் மேம்பட்டு விளங்கும் ஆளுமையாளர்களைப் பெயர் சொல்லிக் குறிப்பிடு மாறு கேட்கின்றீர்கள். இதுவரை நீங்கள் கேட்ட



கேள்விகளிலெல்லாம் மிகவும் சிக்கலான கேள்வி இது!

என்னைப் பொறுத்தவரை, உயர்ந்தவர் தாழ்ந்தவர், சிறந்தவர் குறைந்தவர், நல்லவர் கெட்டவர் என்று பாகுபாடுகளைக் கடந்து, எல்லாரையும் ஏற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன், என்னால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவர்கள் உட்பட. சாதாரண மனிதரையே தரம் பிரித்துப் பாகுபடுத்துவதை அறவே வெறுக்கும் நான், எப்படி இலக்கியக்காரருள் சிறந்தவர் யார், குறைந்தவர் யார் என்று பிரித்துப் பார்க்க முடியும்? ஆழமான விமர்சன நோக்கினூடாகப் படைப்புக்களின் தரம், தரமின்மையை நிர்ணயிக்க முடிந்தாலும்கூட, கூடிவாழும் படைப்பாளிகளை அவ்வாறு தரம் பிரிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உண்டு. அவ்வாறான தரநிர்ணயிப்பின்போதும் நாம் பயன்படுத்தும் அளவு கருவியின் தகுதியும் ஏற்புடைமையும் பற்றிய கேள்விகள் வேறு உண்டு. கனடாவில் சளைக்காமல் நிறையவே எழுதிக் குவிப்பவர்கள் இருக்கிறார்கள். பரந்துபட்ட வாசகர்களைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். குறைவாக எழுதிய போதிலும் கொடிகட்டிப் பறப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் சிறந்த இலக்கிய ஆளுமையாளர் யார், குறைந்த இலக்கிய ஆளுமையாளர் யார் என இனங்காண முற்பட்டு எனது இலக்கைத் தவறவிட முடியாதுதானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது கிளி, எது குயில் என்று பாகுபடுத்திப் பார்ப்பதில் எக்கணம் எமது கவனத்தைத் திசை திருப்புகின்றோமோ, அக்கணமே பறவைகளைப் பார்க்கவும் அவற்றின் பாடல்களைக் கேட்கவும் அவற்றை இரசிக்கவும் தவறிவிடுகின்றோம்! அத்தகைய தவறைச் செய்ய நான் தயாரில்லை. ஆகவே கனடாவிலுள்ள அத்தனை படைப்பாளிகளும் ஏதோவொரு வகையில் தத்தமக்குள்ளே தமிழ் இலக்கிய ஆளுமைகள்தான்!

***புரணி*** *– கலைஞன் என்பவன் யார்? ஒரு கலைஞனாக இருப்பது உங்கள் மனதுக்குத் திருப்தி தருகிறதா?*

**க.நவம்** - கலை இலக்கியங்கள் நாகரிகத்தின் அடையாளங்கள். அழகியல் அச்சாணியில் சுற்றிச் சுழன்றுநின்று, மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவது மட்டுமன்றி, தீட்சண்ய தரிசனத்துடன் அனுபவங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வதன் மூலம், ஒரு தொடர்பாடல் தளமாக விளங்குபவை. சமூக விழிப்புணர்வுக்கும் மாற்றங்களுக்கும் கால்கோளிட வல்லவை. இக்கலை இலக்கியங்களின் மூலாதாரமே கற்பனைதான். கற்பனா அனுபவத்தின் வழியாகப் புத்தியையும் புலன்களையும் உணர்வுகளையும் தூண்டக்கூடியவன் எவனோ, அவன்தான் கலைஞன். சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், திரைப்படம், விமர்சனம், இசை, ஓவியம், விளையாட்டு போன்ற பலதரப்பட்ட துறைகளினூடான எனது கலை இலக்கிய எடுப்புக்களும் எத்தனங்களும் உணர்வுகளைத் தூண்டும் வல்லமையைப் பெற்றிருப்பின், தாராளமாக என்னையும் ஒரு கலைஞனாகப் பிரகடனம் செய்துகொள்வதில் பிரச்சினையேதுமில்லை!

மேலும், சராசரி மனிதன் ஒருவன் தனது எண்ணங்களையும் விருப்பங்களையும் இலட்சியங்களையும் எய்துவதன் அளவைப் பொறுத்து அவனது மனத் திருப்தியின் கனபரிமாணமும் வேறுபடுகின்றது. இந்தவகையில் மட்டான (நிச்சயமாக, மட்டமான அல்ல) எனது மனத் திருப்திக்கு, நான் ஒரு சராசரி மனிதனாக இல்லாதிருப்பது ஒருவகையில் காரணமாக இருக்கலாம். ஒரு கலை இலக்கியவாதி என்று பார்த்தால்கூட, எனது எண்ணங்களையும் விருப்பங்களையும் இலட்சியங்களையும் பெருமளவில் நான் எட்டியிருப்பதாகச் சொல்வதற்கில்லை. இவையிவற்றை எல்லாம் இலக்கியத்தில் சாதித்திருப்பதாகப் பட்டியலிட்டுச் சொல்லவும் என்னிடம் பெரிதாக எதுவுமில்லை.

ஆனால் மனம் நிறைய நான் ஒரு கலைஞனாக இருக்கிறேன் என்ற உண்மை எனக்குப் புரிகிறது. நான் உணர்வுகளுடன் உறவாடுகிறேன்; உணர்வுகளைச் சீண்டி எழுப்புகிறேன்; உணர்வு களால் துவம்சம் செய்யப்படுகிறேன்; உணர்வு களுக்கு இரையாகி அவ்வப்போது இறந்து போய்விடுகிறேன்; அதே உணர்வுகளின் நடுவே மீண்டும் மீண்டும் நான் உயிர் பெற்றுவருகிறேன்.

இதைவிட வேறு என்ன மனத்திருப்தி, எனக்கு வேண்டிக் கிடக்கிறது?


## குறுமண்வெளி அருள்செல்வநாயகம்

*நினைவு சிறுகதைப் போட்டி - 2012*

படைப்பாளர் குறுமண்வெளி அமரர் அருள்செல்வநாயகம் அவர்களின் நினைவாக சிறுகதைப்போட்டி நடாத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ள படைப்பாளர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

முதல் பரிசு : ரூபா. 10,000.00

இரண்டாம் பரிசு : ரூபா 5.000.00

மூன்றாம் பரிசு : ரூபா 3000.00

நிபந்தனைகள் :

1. சிறுகதைகள் A 4 அளவுள்ள தாளில் எட்டுப் பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. போட்டிக்காக அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் வேறு நாள், மாத இதழ்களிலோ நூல்களிலோ இடம்பெறவில்லை என்கிற உறுதிமொழியுடன் அனுப்படுதல் வேண்டும்.
3. இன்றைய சமூக வாழ்வைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளாக இருக்க வேண்டும்.
4. ஒரு படைப்பாளர் ஒரு சிறுகதை மட்டுமே அனுப்ப வேண்டும்.
5. படைப்பாளரின் பெயர், முகவரி,தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்ற விபரங்கள் தனித்தாளில் எழுதி இணைக்கப்பட வேண்டும். •படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதி திகதி 15. 10. 2012 ஆகும். பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி-

குறுமண்வெளி அருள்செல்வநாயகம் நினைவு சிறுகதைப் போட்டி 2012

73/1/1, Church Road, Mattakuliya, Colombo-15.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியம் சர்வேசன்



கிரகித்தவற்றை எம்முடன் பகிர்வார். கடவுள்களையும் சாமிகளையும் பேய்களையும் பற்றிப் பகிடி பேசுவார். அதன் மூலம் எமக்கு அவற்றில் இருந்த மூட நம்பிக்கைகளை அகற்றுவார். அவரின் கணிப்பில், கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் எல்லாம் முட்டாள்கள். யாருக்குத்தான் முட்டள்களாக இருக்க விருப்பம்? அதனால் நாமும் முட்டாள்கள் ஆகாதவர்கள் மாதிரி ஒரு நினைப்பு.

ஒரு முறை அவர் தனது வீட்டுக்குத் தனது பாட்டனாரின் திவச கிரியைக்காக வந்த பூசகரையே திருப்பி அனுப்பினார். இன்னொருமுறை

# போதனையைக் காதலியுங்கள் ... ஆசானை அல்ல!

நாம் யார் யாருடன் பழகுகிறோம் - எப்படியானவர்களுடன் பழகுகின்றோம் என்பதிலும் எமது சிந்தனைகள், நடத்தைகள் என்பன சிறிதளவேனும் தங்கியுள்ளன. அதனால்தானோ என்னவோ, பெரியவர் களின் நச்சரிப்பு சிலவேளைகளில் தாங்கமுடியாமல் போய்விடுகிறது. "அவனுடன் சேராதே, இவனுடன் சேராதே" என்று.

எமது சிந்தனைகள், போக்குகள் ஓரளவிற் கேனும் நன்றாக இருக்கவேண்டுமாயின் எமது சுற்றுச் சூழலை நாம் மிகக் கவனமாக அமைத்து கொள்ளல் அவசியமாகின்றது. அதில் ஓர் அங்கமாக எமது நண்பர் குழுவும் அமைகின்றது. நல்ல நண்பர்கள் அமைவது அவரவர் பாக்கியமே. இப்படி எனக்கும் ஒரு நல்ல நண்பர் இருக்கிறார். இவரை எனக்கு பல காலமாகத் தெரியும். நன்றாகவே பழகியுள்ளேன். அவரின் சில எண்ணங்கள் என்னையும் தொற்றியுள்ளன என்பதில் எனக்கு ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

எனக்கு இன்னும் கடவுளைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் சரியாக வரவில்லை. கோவில்களிற்கு வேறு வேறு அலுவல்களாகப் போயிருக்கின்றேனே தவிர, கும்பிட என்று இன்னமும் போகத் தொடங்கவில்லை. இதற்கு ஒரு காரணம் நான் மேற்குறிப்பிட்ட நண்பரும் தான். அவர் கொஞ்சம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர். எமது சிறு வயதுக் காலங் களில் அவர் வாசிக்கும் பல புத்தகங்களில் சில குறிப்பாக மூட நம்பிக்கைளைப் பற்றியது. தான் வாசித்துக்

பாடசாலையில் "சரஸ்வதி பூசைக்கான பணம் தர முடியாது, அதெல்லாம் வீண்" என்று வகுப்பாசிரி யருடன் வாதாடி, அது கொஞ்சம் சிக்கலில் முடிந்தும் போயிற்று. இப்படியான அவரின் போக்கினால் அவர் எமக்கு அந்நேரம் ஒரு முன் மாதிரியான நண்பராகத் திகழ்ந்தார். இப்போது அவரவர் வழிகளிலும் அவரவர் துறைகளிலும் பிரிவு. தற்பொழுது எனது நண்பர் ஒரு சத்திரசிகிச்சை நிபுணராக உள்ளார். "நல்ல சேவை மனம் கொண்டவர்" என அறிகிறேன். அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

அண்மையில் அவரைச் சந்தித்த போதுதான் எனக்குத் திடீரெனக் கடும் ஆச்சரியம்! அவர் கழுத்தில் சாய் பாபாவின் படம் பதித்த பதக்கம் ஒன்றை மாட்டியிருந்தார். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அது பற்றி ஒன்றும் சொல்வதாக இல்லை. பொறுக்கமுடியாமல் நானே கேட்டேன். "அது என்ன கழுத்தில்? நான் இப்படிக் கடவுளைக் கும்பிடாமல் விட்டதற்கு நீயும் ஒரு காரணம். அப்படி இருக்க, இது என்ன மாற்றம்?" முதலில் அவரிடமிருந்து பெரும் சிரிப்பு. பின்னர், "நான் அவரை ஒரு ஆசிரியராக மட்டும் ஏற்றுள்ளேன். அவ்வளவுதான்" என்றார், அமைதியாக. ஆசிரியராக மட்டும் என்பதை மீண்டும் திரும்ப அழுத்திச் சொன்னார். இல்லாவிட்டால் நான் சாய்பாபாவின் சாகசங்களைச் சொல்லி ஏளனம் செய்வேன் என்று எனது நண்பருக்குத் தெரியும். ;அப்படித்தானே முன்பு இவனும் அவரைப்பற்றி ஏளனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவன். இப்ப அவரை இவன் ஆசிரியர் என்கிறானே!; இப்போது நான் அமைதியாக யோசிக்கிறேன்.

முதலில் எனக்குள் சிரிப்பு! "இவன் பயந்திட்டான். இவன் சத்திரசிகிச்சையின் போது இரத்தம் வர வர அல்லவா வெட்டவேண்டும். அந்த பயத்தைப் போக்கவே இப்படிச் செய்கிறான்". எனக்குள் நல்லாச் சிரிக்கிறேன் இதனை நினைத்து. இதனை அவனுக்கும் சொல்ல வாய் எடுக்கும் தருணத்தில் சொல்லாமலே நிறுத்திவிட்டேன். ம்ம்ம்......இல்லை, இவன் சொல்வதிலும் ஒரு நியாயம் உண்டு. நான் ஒரு இயந்திரத்தைத் திருத்தினாலேயே அது சரியாக இயங்க வேண்டும் என்று எனக்குள் வேண்டிக்கொள்வேன். ஆனால் இவன் மனிதர்களை அல்லவா திருத்துகிறான். இதற்கு கொஞ்சம் மன வலிமை அதிகமாகத் தேவைதான். இதற்காகத் தான் இவன் அவரை ஒரு ஆசிரியராக ஏற்றுள்ளான். ஆமாம் அவனுடைய மன வலிமையை அவனது சேவையின் மூலமே அறியக்கூடியதாக இருந்தது. மனிதர்களுக்குச் செய்யும் ஒரு சேவை என்ற ஒரு பொறுப்பு அவனிடம் இருப்பதை உணர்ந்தேன்.



அப்படி ஒரு பொறுப்பு இருப்பதனால்தான் அவனுக்குக் கொஞ்சம் மேலதிக மனவலிமை தேவைப் பட்டு இப்படி ஒரு ஆசானைத் தேர்ந்தெடுத்தானா? அப்படியாயின் கடவுளையோ அல்லது ஒரு ஆசானையோ தேடாமல் இருக்கும் நாம் என்ன ஒரு பெரும் பொறுப்பும் இல்லாதவர்களா? கொஞ்சம் யோசிக்கவேண்டித்தான் உள்ளது. யோசிக்க இதில் என்ன இருக்கின்றது? பொறுப்புக் குறைந்தவர்களிற்கு கடவுள் நம்பிக்கை குறைவுதான். என்றாலும் மனம் ஒத்துக் கொள்ளுதில்லை. அப்படியாயின் இவ்வளவு நாளும் நாம் கடவுள் இல்லை என்று இறுமாப்பு பேசியது? ஏதாவது ஒன்றை நினைத்து ஒருவர் தானும் முன்னேறி மற்றவர்களுக்கும் ஏதாவது நல்லது செய்கிறார் என்றால் அது நல்லதுதானே. அன்றைய பேச்சு அத்துடன் முடிந்தது.

எனக்குள் ஒரே யோசனை... ! அதன் பின்னர் ஒரு முடிவு. யாராவது ஒருவர் தனக்கு ஒருவரை ஆசிரியராக மட்டும் ஏற்றுக்கொள்ளலாம் என்றும், அந்த ஆசிரியரின் போதனைகளை மட்டும் அவர் காதலிக்கலாம் என்றும். அந்த ஆசிரியர் யாரகவேனும் இருக்கலாம். ஒரு நடிகராக, அரசியல்வாதியாக, சாமியாராக, பாடசாலை ஆசிரியராக, .....இப்படி யாராகிலும். அவர்களுடைய கருத்துக்கள், சிந்தனைகள், கொள்கைகள் போன்றவற்றை மட்டும் காதலித்து நம் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை கொண்டுவருதல் போதுமானது. அத்தோடு, அதுதான் நாம் அந்த ஆசிரியருக்குச் செய்யும் நன்றியுமாகும். அவர்களின் நல்ல கருத்துக்கள், சிந்தனைகள், கொள்கைகள் என்பவற்றைப் பல ஆண்டு காலங்கள் வாழவைக்கமுடியும், அவர் இறந்து போன பின்பும் கூட.

இதை விடுத்து, நாம் ஆசிரியரின் போதனைகளைக் காதலிக்காமல் ஆசிரியரை காதலிப்பதனால்தான் நாம் பல பிரச்சினைகளை முகங்கொள்ள வேண்டியதாக உள்ளது. இதற்கான உதாரணங்களை நாம் கண் முன்னாலேயே காணக்கூடியதாக இருக்கின்றது.

நமக்கு நன்றாகத் தெரிந்த உதாரணம் – அண்மையில் சர்ச்சைக்குள்ளான நடிகையும் சுவாமியும். அந்த நடிகை அந்த சுவாமியின் போதனைகளை மட்டும் காதலித்திருந்தால் இவ்வளவு பிரச்சினையும் ஒருவருக்கும் வந்திராது. பதிலாக அவரவர் தத்தம் வழிகளில் முன்னேற்றத்தை கண்டிருப்பார்கள். தற்போது எல்லாமே சிக்கலாகி விட்டது. அந்த சுவாமியின் சிந்தனைகளின் பெறுமதி குறைந்து வரத்தொடங்கிவிட்டது அவர் உயிருடன் இருக்கும் போதே.

இது இப்படி இருக்க, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மகான்களின் கருத்துக்கள், கொள்ளைகள் இன்னமும் உயிருடன் வாழ்வதென்றால் என்ன காரணம்? மக்கள் அவர்களை காதலிக்காமல் அவர்களின் கருத்துக்கள் கொள்கைகளைக் காதலித்தார்கள். இதற்கு மாறாக, கருத்துக்கள் , கொள்கைகைளை காதலிக்காமல் அதனை சொல்கின்றவரைக் காதலித்தால், அவர் காலம் முடியும் போது அவரது கருத்துக்களும் கொள்கை களும் முற்றுப் புள்ளி வைக்க பெறும். இதனை விட வேதனையானது, சிலவேளை சந்தர்ப்ப சூழ்நிலையால் அவர் பிழையான கருத்துக்களையோ, கொள்கை களையோ முன்வைத்தாலும் அவற்றைச் சரி எனத் தலைமேல் ஏற்று நடைமுறைபடுத்தவும் தொடங்கி விடுவார்கள் மக்கள்.

போதனையை காதலிக்காமல் ஆசானை காதலிக்கும் சீடனும், போதனையைக் காதலிக்காதே என்னை காதலி என தூண்டும் ஆசானும் முட்டாள்களே. இது சுவாமிப் பக்தர்களுக்கு மட்டும் பொருந்துவதல்ல. ஏனைய பலருக்கும் பொருந்தும். போதனையை காதலிக்காமல் ஆசானை காதலிப்பதனால் இருவருக்குமே அழிவுதான். இவர்கள் இருவருக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கே அழிவுதான். இதனை நம் கண்முன்னே காண்கிறோம், கண்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனாவரவம்



எழுவதும் வீழ்வதுமாய் கழிகிறது
நாட்கள்
பகல் முழுவதும் உடல் சோர்ந்த உறக்கம்
மின் உமிழ் ஒளியில் புலரும்
என் இரவு
சபிக்கப்பட்ட வாழ்வு
பெருநகரத்துப் பிரமாண்டத்திலும்
எந்திரங்களின் பேரியக்கத்திலும் ஒட்டி
உழன்று கொண்டிருக்கிறேன்

ஆலை இரைச்சலை அழித்து உடல் அதிர
எழுதிறது
பேரொலி
மின் அறுந்து
ஒழியிழந்து
இருளடர்ந்த
துளிக்கணத்தில் தறிகெட்டோடுகிறேன்
உயிர் வேண்டி

இரண்டு போர்விமானங்களின் இரைச்சல்
அடங்க
நெருங்கி வருகிறது ராணுவ வாகனங்கள்
சீருடை மனிதர்; புரியாத மொழி
எதையோ எடுத்து வீசுகிறார்
வெளியில்
அதிலிருந்து சீறி விரைகின்றன குண்டுகள்

விழி பிதுங்கி புலன் ஒடுங்கி உடல் பதுங்கி
நகர்கிறேன்
என்மீதில் வீழ்கிறது ஒரு கொள்ளிக்கண் வீச்சு.
பாய்ந்து வீழ்ந்து
சிறு பள்ளத்துள் பதுங்குகிறேன்
பொறியை திருகி ஒரு கைக்குண்டை வீசுகிறான்
இனி
செத்தேன்
"ஐயோ"

திடுக்குற்று
விழித்த முழிகளை கொத்த
சன்னல்வழிப் பாய்கிறான் வெய்யோன்
"மிட் லான்ட்" வீதியில் ஹஸினோ; தள்ளி
செல்கிறது
பாரிய வாகனங்கள்

போர் தவிர்த்து
நீள நடந்து
இருபது ஆண்டுகள் கழிந்து
பிழைத்தேன் என்றொரு நினைப்பு
ஒரு கண்கொத்திப் பாம்பென
பின்தொடர்ந்து துரத்துகின்றன
போர்க் கனவுகள்

பெரு வலியெனக் கடந்தது
என் வாழ்வு
இனி
எப்படியாவது போகட்டும்

இன்றென்மனவலியெலாம்
முள்ளிவாய்காற் பெருந்துயர் கடந்த
குழந்தைகள் பற்றியது

சிறு பிஞ்சு மனங்களை
இன்னும் எத்தனை ஆண்டுகள்
தீண்டித்தீண்டித் துரத்தப் போகிறது
கொடுங் கனவுப் பாம்புகள் ?

**திருமாவளவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரசவ வேதனைப் புதினம்!

**வீரகேசரி மூர்த்தி**

கனடாவில் தமிழ் கல்விமான்களும், ஓய்வு பெற்ற தமிழ் அதிபர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரும் அதிகளவில் வாழும் ஸ்காபுறோ நகரிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் கடந்த பல வாரங்களாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரு விளம்பரத்தைப் பார்த்ததும் எழுத்தாளரான சுப்பிரமணியத்தாருக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

எழுத்தாற்றல் உள்ளோர் தேவை என்ற தலைப்புடன், பத்திரிகை அலுவலகத்தில் பகுதி நேரமாகப் பணிபுரிவதற்கு எழுத்தாற்றலும், பத்திரிகை அனுபவமும், தமிழ் தட்டச்சு பயிற்சியும் உடையோர் தேவை. உடனடியாக கீழ்க்காணும் தொலை பேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும் என்பது தான் அந்த விளம்பரம். ஒரு நிறுவனத்தை திறம்பட நடாத்துவதற்கு அனுபவமுள்ள முகாமையாளரோ அல்லது அதன் கணக்கு விபரங்களைக் கண்காணிக்க எக்கவுண்டனோ இல்லாத பட்சத்தில் அப்பதவிகளுக்கு அனுபவமுள்ளோர் தேவை என விளம்பரம் போடுவது வழக்கம். அதைப் போலவே ஒரு தமிழ்ப் பத்திரிகைக்கு எழுத்தாற்றலும், பத்திரிகை அனுபவமும், தமிழ் தட்டச்சு பயிற்சியும் உள்ள ஆக்கள் இல்லாததினால் தானே இப்படி தொடர்ந்து விளம்பரம் போடுகிறார்கள் என எண்ணியே சுப்பிரமணியத்தார் சிரித்தார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் பத்திரிகை வெளியிடுவது உண்மையிலேயே சிரிப்புக்குரிய விடயம் தான். "செய்த தொழிலை விட்டவனும் கெட்டான், தெரியாத தொழிலை தொட்டவனும் கெட்டான்" என்ற பழமொழி இதற்கு மிகமிகப் பொருத்தமானது. முன்பின் பத்திரிகைத் துறை அனுபவமோ, எழுத்து வன்மையோ இல்லாத பலருக்கு முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதைப் போன்று ஏனோ பத்திரிகை வெளியிட வேண்டுமென்ற நப்பாசை ஏற்பட்டு வருகின்றது. அந்தளவிற்கு பத்திரிகைத் துறை சிம்பிளான தொழிலென அவர்கள் கருதுகின்றார்கள். அவர்கள் வெளியிடும் பத்திரிகைகளில் ஆணித்தரமான ஆசிரியத் தலையங்கம் இருக்காது. அறிவு பூர்வமான கட்டுரைகள் இருக்காது. இணையத் தளங்களில் வெளிவரும் செய்திகளில் அவர்களது அறிவுக்கு ஏற்ற வகையில் கடத்தல், கற்பழிப்பு, கொலை சம்பந்தமான செய்திகளையும் கொப்பி அடித்து வெளியிடுவார்கள். அத்துடன் தாம் கலந்து கொள்ளும் வைபவங்களில் சில பிரமுகர்களுடன் நின்று எடுத்துக் கொள்ளும் தமது படங்களையும் முன்பக்கத்தில் பெரிதாகப் பிரசுரிப்பார்கள்.

தமது பத்திரிகையினை எவரும் பணம் கொடுத்து வாங்கமாட்டார்கள் என்பதனால் இலவசமாகவே விநியோகித்து வருகின்றனர். அப்படி இருந்தும் கூட எவருமே அந்த விளம்பரப் பத்திரிகைகளை எடுக்காது உதாசீனம் செய்து வருகின்றனர். அதனால் வெளியிடத் தொடங்கி ஆறு மாத காலத்தின் பின்னர் கையில் கடிக்கத் தொடங்கியதும் பத்தரிகை வெளியிடுவதைக் கைவிட்டோர் பலர். அது நான் நினைச்ச மாதிரி லேசான காரியம் இல்லை எனக்கூறி பட்ட கடனை கொடுக்க வழியின்றி அவதிப்படுவோரும் உள்ளனர். மரண விளம்பரங்களை எடுப்பதற்காக மையப் பெட்டிக் கடைக்காரனைப் போன்று யாராவது சாகமாட்டார்களா என ஒரு பிரதம ஆசிரியர் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பார்.

லண்டனிலுள்ள பத்திரிகையாளர்கள் அங்குள்ள அரசியல்வாதிகளை விட ஆடம்பரமாகவும் வசதி யாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். அந்தளவுக்கு அவர்களுக்கு பத்திரிகைத் தொழிலில் அதிக சம்பளம் வழங்கப்படுகின்றது. அவர்களினால் ஒரு அரசியலவாதியை பதவியில் ஏற்றவும் முடியும், இறக்கவும் முடியும். அத்தகைய ஆற்றல் அவர்களது எழுத்துக்கு உண்டு. அதனால் அப்பத்திரிகை நிருபர்களையோ, ஆசிரியர்களையோ கண்டு அரசியல்வாதிகளே அச்சம் அடைவார்கள். அது மாத்திரமல்ல பத்திரிகையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு பகைத்துக் கொள்ளாது அடிக்கடி தண்ணியும், சாப்பாடும் வாங்கிக் கொடுத்து மிக்க மரியாதையுடன் பழகுவார்கள். அத்தகைய பத்திரிகையாளர்கள் தான் உண்மையான எழுத்தாற்றலும், அனுபவமும் உள்ள பத்திரிகையாளர்கள்.

ஆனால் இங்கு கனடாவிலுள்ள தமிழ் செய்திப் பத்திரிகையாளர்களை – இல்லை இலவச விளம்பரப் பத்திரிகைக்காரர்களைக் கண்டும் காணாதது போல் செல்வோர் அநேகர். பத்திரிகைத் துறை அனுபவமோ, எழுத்தாற்றலோ இல்லாத இத்தகைய பத்திரிகை வெளியீட்டாளர்களுக்கு கீழ் பகுதி நேரமாகவோ முழு நேரமாகப் பணியாற்ற எழுத்தாற்றலும், பத்திரிகை அனுபவமும் உள்ள எவனாவது விரும்புவானோ? அதுவும் இவர்கள் கொடுக்கும் பிச்சை சம்பளத்துக்கு யார் வேலை செய்வார்கள்?

இவங்கட விளம்பரத்தைப் பார்த்து எவரும் வேலைக்குப் போகாததற்கு மற்றுமொரு காரணம் உண்டென்பதும் சுப்பிரமணியத்தாருக்குத் தெரியும். ஏதோ பெரிய ஜாம்பவான்கள் மாதிரி வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டும், கோட்டு சூட்டு போட்டுக் கொண்டும் திரியிற எங்கட ஆக்களுக்கு உருப்படியா தமிழோ, இங்கிலீசோ எழுதவும் தெரியாது. அரசாங்கத்தில இருந்து ஏதாவது கடிதம் வந்தால் பலர் அதை வாசித்து விளக்குமாறும், பதில் எழுதித் தருமாறும் அவரிடம் ஓடி வருவார்கள்.

தமிழில் வாற கடிதங்களை வாசிச்சு, தமிழிலேயே பதில் எழுதவும் தெரியாதா என அவர் ஒருவரிடம் கேட்ட போது, என்னையா ஊரில இருந்த போது நான் கொழும்பில கடையில வேலை செய்து கொண்டு யாழ்ப்பாணத்தில இருந்த என்ர மனிசிக்கு காயிதம் மாத்திரம் எழுதுவன். இஞ்ச கனடாவுக்கு வந்த பின்னர் கடிதம் எழுத வேண்டிய தேவையும் இல்லாமல் போச்சுது எனப் பதிலளித்தார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இளம் தலைமுறையினருக்கு தமிழைப் போதிக்காமல் விட்டால் எதிர் காலத்தில் தமிழ் மொழி அழிஞ்சு போய்விடும் என்று இஞ்ச சிலர் மேடை மேடையாக முழுங்கு கினம். ஊரில தமிழ் படிச்சு இஞ்ச வந்த பின்பு தமிழில் எழுதும் ஆற்றலே இல்லாமல் போய் விட்ட இந்த முதியோரை என்ன செய்வது? இவர்களுக்கும் அல்லவா தமிழைப் போதிக்க வேண்டும் என சுப்பிரமணியத்தார் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

ஒரு பத்திரிகையின் பிரதம ஆசிரியரிடம் வீடு வாங்குவோருக்கு வங்கிக் கடன் பெற்றுக் கொடுக்கும் ஒருவர் தன்னைப் பேட்டி கண்டு எழுதுங்கள். அதுக்கு நான் முழுப்பக்க விளம்பரத்துக்கான காசு தாறன் என்று சொன்னாராம். அதைக் கேட்டு சந்தோசம் அடைந்த அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அணில் பிடிக்கிற நாய் மாதிரி அங்கும் இங்குமாக ஓடித் திரிந்தார். காரணம் அவரைப் பேட்டி கண்டு எழுதும் எழுத்தாற்றல் அவருக்கு இல்லை. அதனால் அவரைப் பேட்டி கண்டு எழுதித் தரக்கூடியவர்களைத் தேடி ஓடித் திரிந்தார். ஆள் கிடைக்காததினால் நீங்களே எழுதித் தாங்க நான் அப்படியே அதைப் பிரசுரிக்கிறேன் என்றார் பிரதம ஆசிரியர். எனக்கும் தமிழில் எழுதத் தெரியாது ஆங்கிலத்தில் எழுதித் தாறன் மொழி பெயர்த்து பிரசுரிக்கிறியளே எனக் கேட்டார் அவர். அவரைத் தமிழிலேயே பேட்டி கண்டு எழுதத் தெரியாத பிரதம ஆசிரியருக்கு ஆங்கில கட்டுரையை மொழி பெயர்க்க எப்படி முடியும்?

பிரசுரங்களுக்காக வரும் விடயங்களை புறுவ் பார்த்து பிழைகளைத் திருத்தி பிரசுரிக்கும் ஆற்றல் இல்லாத காரணத்தில் எமது பத்திரிகையில் பிரசுரமாகும் கட்டுரைகளுக்கு அவற்றை எழுதியவர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளிகள். பத்திரிகை வெளியீட்டாளர் பொறுப்பல்ல எனப் பிரசுரித்து தப்பித்துக் கொள்வார்கள்.

அதே பத்திரிகைக்கு சுப்பிரமணியத்தார் முன்னர் பலமுறை சிறுகதைகளை எழுதிப் பிரசுரத்துக்காக அனுப்பி வைத்தார். இலங்கையிலோ, இந்தியாவிலோ பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு கதை எழுதி அனுப்பி அவை பிரசுரிக்கப்பட்டால் அதற்கு சன்மானமாக சிறு தொகை பணம் அனுப்புவார்கள். ஆனால் இங்குள்ள பத்திரிகைகள் கதை எழுதுவோருக்கு ஒரு சதம் கூட கொடுப்பதில்லை. அது மாத்திரமல்ல கதையைக் கூட ஒழுங்காகப் பிரசுரிக்க மாட்டார்கள். ஏதோ வேண்டா வெறுப்பாக ஒரு பக்கத்தின் மேல் அரைவாசிப் பக்கத்தில் விளம்பரம் ஒன்றைப் போட்டுவிட்டு அதற்கு கீழே கதையைப் போடுவார்கள். விளம்பரத்துக்கே முக்கியத்துவம் கொடுப்பதனால் குறிப்பிட்ட இடத்துக்குள் சிறுகதையை அடக்கி விடுவதற்காக வழமையான பன்னிரண்டு பொயின்ற்ஸ் அளவிலான எழுத்துக்குப் பதிலாக பத்துப் பொயின்ற்ஸ் அல்லது எட்டு பொயின்ற்ஸ் அளவுக்கு சிறிதாகக் குறைத்து பிரசுரிப்பார்கள். அதனை வாசிப்பதற்கு வாசகர்கள் பூதக் கண்ணாடியை தேட வேண்டிய நிலை ஏற்படும்.

குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை மாதிரி பத்திரிகைத் துறை இவங்களிட்டச் சிக்கி படும் பாட்டை எண்ணி வெறுப்புற்ற சுப்பிரமணியத்தார் சிறுகதை எழுதுவதையே கைவிட்டு விட்டார். இவ்வாறு நீண்ட காலத்துக்கு எழுதாமல் விட்டால் தன்னுடைய எழுத்தாற்றலும் அஸ்த்தமனம் ஆகிவிடும் என எண்ணி வேதனைப்பட்டார். பத்திரிகைகள் உலகெங்கும் இடம்பெறும் முக்கிய தகவல்களை செய்தியாக வெளியிட்டு வரும் வேளையில் மலடி பிள்ளை பெற முயற்சிப்பதைப் போன்று புலம்பெயர் நாடான கனடாவிலிருந்து வெளியிடப்படும் சில விளம்பரப் பத்திரிகைகளின் பிரசவ வேதனையே புதினமாகி விட்டது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு பாக்கியநாதன்

# DNA- M130



DNA என்பது Deoxyribonucleic Acid என்பதன் சுருக்கமாகும் (Abbreviation). இது மனிதனது மரபணுவினை (Gene) உயிரியல் நோக்கில் கண்டறியும் விஞ்ஞான ரீதியான ஒரு ஆய்வின் முடியாகும். M130 என்பது ஒரு மனிதனதோ அன்றி ஒரு இனக்குழுமத்தினதோ அன்றி பல இனக் குழுமங்களைத் தொடர்பு படுத்திய மரபணுவுக்கு இடப்பட்ட விஞ்ஞான ரீதியான குறியீடாகும். மேலே குறிப்பிட்ட DNA -M130 என்பது 70,000 ஆண்டுகளுக்கு முந்தி வாழ்ந்த உலகின் நவீன மூத்த குடியாகிய ஒரு பகுதி மனிதனினதோ அன்றி ஒரு மக்கள் கூட்டத்தினதோ பொது மரபணு என்று தற்போது அறியப்பட்டுள்ளது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் தலைவரான பேராசிரியர் ஆர்.எம்.பச்சப்பன் அவர்கள் உலகளாவிய அமைப்பான தேசிய புவியியல் (National Geographic) என்ற அமைப்பின் சார்பாக மனித மரபணுவியல் (Genealogy) பற்றிய ஆய்வினை இந்தியாவில் செய்வதற்காக நியமிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டில் தனது ஆய்வினை ஆரம்பித்தார். இவ்வாய்வின் நோக்கமானது நவீன மனித இனம் எங்கிருந்து தோற்றம் பெற்றது என்றும் அந்த மனித இனங்களின் பொதுவான தொடர்புகள் என்ன என்பதனைக் கண்டறிய டி.என்.ஏ பகுப்பாய்வு செய்து மனித இனத்தின் தோற்றம் அதன் பரம்பல் பற்றி நிறுவுவதாகும். இவ்வாறாக அவரும் அவரது குழுவினரும் செய்த ஆய்வுகளில் பல வியத்தகு முடிவுகள் வெளிப்பட்டன.

பேராசிரியர் பச்சப்பனின் ஆய்வு மதுரையிலும், ஆதித் திராவிடர்கள் வாழும் மலைப் பகுதிகளிலும் வடஇந்தியாவின் குஜராத், ஒரிசா, ஹிமாசல்பிரதேஷ், ஜம்முகாஷ்மீர், கார்கில் ஆகிய பகுதிகளிலும் டி.என்.ஏ மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுகூட சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது ஒரு பொதுவான மரபணுவே எங்கும் காணப்பட்டது. இம்மரபணுவை எம்-130 என்னும் பெயரிடப்பட்ட மரபணு முடிவு பெறப்பட்டது. இதில் குறிப்பாக மதுரையில் உள்ள குக்கிராமமான "ஜோதிமாணிகம்" என்னும் கிராமத்தில் பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகள் 700 பேரிடம் பெறப்பட்டு அதில் நடைபெற்ற ஆய்வு முடிவுகளும் எம்-130 என்ற ஆய்வு முடிவினையே காட்டியது. இங்கு முதன் முதலில் விருமாண்டி ஆண்டித்தேவர் என்னும் 30 வயதுடைய முன்னணி கணணி நிறுவன நிர்வாகியிடம் பெறப்பட்ட முடிவின் பிரகாரம் அவரிடம் பெறப்பட்ட டீ.என்.ஏ மாதிரி 70,000 வருடங்களுக்கு முந்திய ஆபிரிக்க மனிதனின் டி.என்.ஏ மாதிரியுடனும் இன்றும் வடமேற்கு அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் பல வகையான ஆதிக்குடிகளிலும் பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகள் யாவும் எம்-130 என்ற முடிவினையே கொடுத்தன. இந்த ஆய்வு முடிவுகளைப்பெற 5 ஆண்டுகள் எடுத்ததாக பேராசிரியர் பச்சப்பன் குறிப்பிடுகின்றார். ஆகவே இதிலிருந்து அறயிப்படுவது இந்த மூன்று இனக்குழுமங்களும் ஒரு மனித இனத்தின் வேர்கள் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. இந்த ஜோதி மாணிக்கம் கிராமத்து மக்களே இந்தியாவின் ஆதிக் குடிகளாகும். இவ்வாறாகவே மலைவாழ் ஆதித் திராவிடர்களும் இவ்வாறான ஆதிக் குடிகளேயாவர். அத்தோடு திருமலை கள்வர் இனம், யாதவர், சௌராஷ்டர் ஆகியோரிடை 5% வீதமானவர்களிடம் இவ்வாய்வினை மேற்கொண்டபோதும் டி.என்.ஏ

எம்130 என்ற முடிவே பெறப்பட்டுள்ளது. ஆனால் ஆபிரிக்காவின் சில பகுதிகளில் பெறப்பட்ட முடிவுகளின் பிரகாரம் அவர்களது டி.என்.ஏ எம்60 என்றும் அறியப்பட்டு உள்ளது. இது வேறொரு இனக்குழுமத்தி லிருந்து பெறப்பட்டதாக இருக்கவேண்டும். 160,000 ஆண்டு களுக்கு முன்பே மனித இனம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் முடிவாகும். இக்காலப்பகுதியில் பல இனங்கள் ஒன்றாகக் கலக்கத் தொடங்கியதனால் இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.


பேராசிரியர் பச்சப்பனால் பாதுகாக்கப்படும் டி.என்.ஏ மாதிரிகள் மதுரை காமராசர் பல்கலைக்கழக உயிரியல் ஆய்வு கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளது. இத்னை ஆழ் உறை நிலையில் $-20^{\circ}C$ வெப்ப நிலையில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது. இந்தியாவின் முதன் மனிதனின் வாரிசான விருமாண்டியின் டி.என்.ஏ மாதிரியும் இங்கேயே பாதுகாக்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் ஏனைய பகுதி களில் மட்டுமல்ல ஏனைய இந்திய பகுதிகளிலும் இவ்வாறான ஆய்வு செய்யப்படின் இவ்வாறான ஒரே வகையான முடிவினையே காணமுடியும் என்பது திண்ணமாகும். இந்தியா முழுவதும் இந்த இனமே ஆதிக்குடிகளாவர். பேராசிரியர் பச்சப்பனின் முடிவின் பிரகாரம் இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து நகர்ந்து வந்து குடியேறியவர்கள் என்று குறிப்பிடுகின்றார். இவர் மேற்குலக ஆய்வாளர்களின் முடிவின்படியே இப்படிக் கூறுகின்றார்.

பொதுவாக தென் ஆசியமக்கள் நிக்குறொய்ட் இனத்திலிருந்து தோன்றியவர்களாகவே மானிடவியல் விஞ்ஞானம் குறிப்பிடுகிறது. இவர்கள் எவ்வாறு நிலத் தொடர்புகள் அற்ற இந்தியா அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு பரவினார்கள் என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது. இவ்வாறு நோக்கும் போது புவியியல் அறிஞர் வெக்னர் (Wegner) அவர்களது கண்டநகர்வுக் கருதுகோளும், லெமூறியாக் கண்ட கருதுகோளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். 70,000 வருடங்களுக்கு முன்பு நீண்ட தூர கடல்ப் பிரயாணம் என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாததாகும். ஆகவே இந்த குடியேறிகள் நிலத் தொடர்புகள் உள்ள பகுதிகளாலேயே உணவு தேடி அல்லது ஆபிரிக்காவில் வரட்சி அல்லது பஞ்சம் ஏற்பட்டதனால் செங்கடல் கடந்து மத்திய கிழக்கூடாக இந்தியாவிற்கு நடந்து வந்திருக்க வேண்டும். ஆனால் அவுஸ்திரேலியாவிற்கு எவ்வண்ணம் கடல் கடந்து சென்றிருக்க முடியும்.

இவ்விடத்தில் தான் லெமூறியாக் கண்டம் ஆசியா. இந்தியா, மடகஸ்கார், அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் ஒன்று சேர்ந்து இருந்து, ஊழிக்காலத்தில் ஏற்பட்ட எதிர் மணிக்கூட்டுத் திசையில் ஏற்பட்ட கண்ட நகர்வினாலும் அதனால் ஏற்பட்ட ஆழிப்பேரலை யாலும் மேற்குறிப்பிட்ட நாடுகள் பிரிந்து சென்றது என்பதுவே லெமூறியா கண்ட கருதுகோளாகும். இதன் காரணமாக இங்கிருந்த மக்களும் அழிவுற்றவர்கள் போக எஞ்சிய மக்கள் அந்தந்த நாடுகளிலேயே எஞ்சியுள்ளவர்களாவர். அத்தோடு ஒன்றாக இருந்த காலத்தில் லெமூறியாவின் மத்திய பகுதியாகி முதல் சங்கம் வளர்த்த கபடமபுரம், தொன்மதுரை, பஃறுளியாறு, குமரிஆறு, கன்னியாறு, மேருமலை ஆகிய இருந்த லெமூறியாவில் இருந்து உணவு தேடி தெற்கு நோக்கி கால்நடையாக சென்றவர்களே வடமேற்கு அவுஸ்திரேலியாவில் குடியேறிய திராவிடர் களாகக் கருதப்படுகின்றனர். இதன் காரணமாகவே மதுரையில் பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகளும் அவுஸ்திரேலியாவில் பெறப்பட்ட டி.என்.ஏ ஆகியன எம்130 என்ற ஒரே வகையினைச் சார்ந்ததாக உள்ளது என்பது இதற்கு உறுதி சேர்க்கின்றது. அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் திராவிடர்களின் வாரிசுகள் என தேவநேயப் பாவணர் அவர்களும் முனைவர் அரசேந்திரன் அவர்கள் கூறிய கருத்துக்கள் இங்கு ஈண்டு நோக்கற்பாலது.



இது மதுரை ஜோதிமாணிகம் என்ற ஊரில் வாழும் எம்.130 என்ற டி.என்.ஏ என்ற மரபணுவுடன் வாழும் 70,000 ஆண்டுகளுக்கு முந்திய நவீன மனித இனத்தின் (Modern Human Race) வாரிசான விருமாண்டி ஆண்டித்தேவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மேற்படி ஆய்வுகளைச் செய்துவரும் மதுரை காமராசர் பல்கலைக்கழக மரபணுவியல் பேராசிரியர் ஆர்.எம்.பச்சப்பன் அவர்கள்

இவ்வேளையில் கடந்த 2010 யூன் மாதம் கோயம்புத்தூரில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதியினை இங்கு மீட்டுப் பார்ப்பதும் இக்கட்டுரைக்கு மேலும் உதவியாகவிருக்கும்.


"அவுஸ்ரேலியாவின் வடமேற்குப் பகுதியில தற்போதும் வாழும் கரிறியா என்னும் ஆதிக்குடிகள் ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியும் என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு அவர்களது உருவத் தோற்றப்பாடு ஆதாரமாயுள்ளது. அத்தோடு அவர்களது மொழியிலும் திராவிட மொழியின் சாயலும் இலக்கண, ஒலியன் ஒற்றுமைகள் உள்ளதாக கு.அரசேந்திரன் குறிப்பிடுகின்றார். ஆதாரம்: தமிழ்க்கப்பல் பக்3. குமரிக் கண்ட நிலத்தொடர்பு இருந்த காலத்திலேயே ஆதித் திராவிடர் குமரிக் கண்டத்தி லிருந்து புலம் பெயர்ந்து உணவு தேடி வேட்டையாடும் நோக்கோடு வேறொரு பிரதேசத்திற்குச் சென்று உள்ளார்கள்".

"மேலும் அங்குள்ள சில ஆதிக்குடிகளின் சில இனக்குழுமங்களின் பெயர்கள் வியப்புத்தருவதாகவும் மேலும் ஆராயப்பட வேண்டியதனையும் வலியுறுத்து கின்றது. அவையாவன குவேனி இது இலங்கையின் இயக்கர் இனப்பெண்ணான குவேனியின் பெயரை ஒத்திருக்கின்றது. மேலும் அவுஸ்திரேலிய ஆதிக் குடிகளின் சில குழுக்களின் பெயர்களான நகர, நன, நந்தா, நங்கா, நகரியா, நகுரி, நகண்டி, நகம்பா என்ற பெயர்களை நோக்கும் போது நாகர் என்ற பெயருடன் தொடர்புபட்டது போன்றும் ஏதோவொரு அறிந்த பெயரான தமிழ்ப் பெயர்கள் போலவும் இருக்கின்றது". ஆதாரம்: விக்கிப்பிடியா தேடுதளம். இக்காரணத்தி னாலும் லெமூறியாவில் தமிழன் வாழ்ந்தான் என்பதற்குரிய ஒரு ஆதாரமாகவும் கொள்ள முடியும். குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவனின் இறுதிக் குடிகளே அதன் எஞ்சிய பகுதிகளான இலங்கையிலும் இந்தியாவிலும் வடமேற்கு அவுஸ்ரேலியாவிலும், மடகஸ்காரிலும் 70,000 ஆண்டுகளுக்கு முந்திய ஆதிக்குடிகளாவர்."

"அவுஸ்ரேலியாவின் சில ஆதி இனக்குழுமங் களின் மரபணுக்கூறுகள் (டீ.என்.ஏ) ஐ.நா சபையினால் ஆராயப்பட்டுள்ளன. திராவிட இனத்தொடர்பு இருப்பதாக நாம் கருதும் இனங்களின் மரபணுக்கள் பரிசோதிக்கப் பட்டால் பல உண்மைகள் வெளிவரும். இதற்கு தமிழ்நாட்டு அரசு நிதியொதுக்கி இச்செயற்பாட்டினை ஆரம்பித்து வைக்கவேண்டும் என பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட கட்டுரையின் பகுதி பேராசிரியர் பச்சப்பனின் முடிவு அறியப்பட முன்னரே எழுதப்பட்டது. ஆனால் அவரது முடிவின் பிரகாரம் அவுஸ்திரேலிய ஆதிக் குடிகளது மரபணுவும் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளின்படியும் எம் 130 என்னும் மரபணு இவர்களிடையே தொடர்பை ஏற்படுத்துவதனால் இவர்கள் லெமூறியாவில் 70000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழனின் மூதாதையர் என்று உறுதிபடக்கூற முடியும்.

கீழே காணப்படும் வடமேற்கு அவுஸ்திரேலி யாவில் வாழும் கரிறியா இனக்குழுமத்தினைச் சார்ந்த பழங்குடி மக்கள். இவர்களது தோற்றப்பாடு திராவிடனின் உருவ ஒற்றுமையோடு இருப்பதனை நோக்கவும்.



மேற்கு அவுஸ்ரேலியாவில் வாழும் திராவிட மூதாதையர்களின் ஆதிக்குடிகளின் படங்கள்.


### ஹோமோ சேப்பியன் [Homo Sapiens] எனப்படும் ஆதி மனிதனின் எலும்பு இலங்கையில் கண்டு பிடிப்பு

ஹோமோ சேப்பியன் என்பது நவீன மனிதன் தோன்றிய காலத்தைய மனிதனையே **Homo Sapien** எனப்படும் ஆங்கிலச் சொல்லைக் கொண்டு அழைப்பர். ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவன செய்தியின் பிரகாரம் ஸ்ரீ லங்கா புதைபொருள் ஆய்வுத் திணைக்களத்தின் பத்திரிகை, இணையத்தள செய்திகளின் பிரகாரம் 37,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி மனிதனின் எலும்புக்கூடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மனிதனது எலும்புக்கூடாக இருக்கலாம் என்றும். இவ்வாறான ஒரு மிகத் தொன்மையான ஒரு எலும்புக்கூடு கண்டிருப்பது இதுவே முதல் முறை என்றவாறாகவும் தெரிவித்துள்ளது.

இதுபற்றிய செய்திகள் மேலும் பல இணையத் தளங்களிலும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த எலும்புக்கூடானது. இது பற்றி மேலும் ஸ்ரீலங்கா புதைபொருள் ஆய்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் திரு சேனரத் திசநாயக்கா தெரிவிக்கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பலாங்கொடையின் புலத்சிங்கல வில் 1900 வருடங்களுக்கு முன்பு சீனத்துறவியான பா ஹெயின் வாழ்ந்த இடமான பா ஹெயின் (**Fa Hien**) குகையில் செய்யப்பட்ட அகழ்வாராய்சியில் இவ்வாறான ஒரு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதனின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது என்றும். அதன் ஒரு மாதிரியினை காபன் டேற்றிங் (**Carbon Dating**) என்ற ஆய்வு முறைக்கு அமெரிக்காவிற்கு அனுப்பி ஆய்வு செய்த போது அது 37,000 வருடத்திற்கு முந்திய மனிதனது எலும்புக்கூடு என்ற முடிவினைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த எலும்புக்கூடு பற்றி மேலதிக ஆய்வு செய்ய பிரித்தானிய ஆய்வாளர்களை அழைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இது பற்றிய தொடர் ஆய்வினை நடாத்த அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் இலங்கை அரசாங்கம் இன்னும் இதற்குச் சாதகமான பதிலைக் கொடுக்கவில்லை.




புலத்சிங்களவில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட எலும்புக்கூறு. எலும்புக் கூட்டிமேல் கற்பாறையே வளர்ச்சி யடைந்துள்ளதனால் அதன் தொன்மையினை ஓரளவு ஊகிக்க முடியும்.

மேற்படி செய்திக்கும் மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் கட்டுரைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. கடலில் ஆழ்ந்துபோன தமிழனின் ஆதிக் குடிகள் வாழ்ந்து மறைந்து போன லெமூறியாக் கண்டத்தின் உறைவிடமும் இந்தியா, இலங்கை, அவுஸ்ரேலியா, மடகஸ்கார் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பாரிய நிலத்தொடர்புள்ள ஒரு கண்டமாகவே இருந்தது என்றும் அங்கு வாழ்ந்த மூதாதையர்களே இலங்கை, இந்தியா, வடமேற்கு அவுஸ்ரேலியா ஆகிய பகுதிகளில் வாழ்வதாகவும் என்று குமரிக்கண்டம் பற்றிய கருதுகோள்களை முதலில் வெளியிட்ட மொழிஞாயிறு தேவநேயப் பாவணர் அவர்கள் தனது நூல்களில் எழுதியுள்ளார். இந்தத் தமிழர்களே உலகின் ஹோமோ சேப்பியன்கள் என அழைக்கப்படும் ஆதிக்குடிகள் என்று பல ஆதாரங்களைக் காட்டி எழுதியுள்ளார். அவரைப் பின்பற்றி தனது ஆய்வுக் கருத்துக்களை வெளி யிட்டுள்ள முனைவர் கு.அரசேந்திரன் அவர்களும் இதே கருத்தினையே வலியுறுத்தியுள்ளார். எனது முந்திய கட்டுரைகளில் இதுபற்றி விரிவாகத் தெரிவித்து வந்துள்ளேன்.

காமராசர் பல்கலைக் கழகத்தில் உலக தேசிய புவியியல் நிறுவனத்தின் உதவியோடு நடைபெற்ற மரபணு பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்ட டி.என்.ஏ பரிசோதனையின் முடிவினை மேலே பார்த்தீர்கள். அந்த முடிவின் பிரகாரம் தமிழ் நாட்டில் 70,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுக்கு முந்திய அதுவும் ஸ்ரீலங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்பின் காலத்திற்கு 30,000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் வாரிசுகளின் மரபணு மாதிரிகள் பெறப்பட்டு அது நிரூபணமாகியுள்ளது. அதன் பிரகாரம் 70,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனாகிய தமிழனே லெமூரியாவின் ஆதிக்குடியாக வாழ்ந்துள்ளான் என்பதனை மதுரை ஜோதிமாணிகம் கிராமத்தில் வாழும் விருமாண்டி மற்றும் அந்த ஊரவர்களில் செய்த ஆய்வுகளின் பிரகாரம் பெறப்பட்ட மரபணு முடிவுகள் மூலம் நிரூபணமாகின்றது. இதனை அடிப்படையாக வைத்து தற்போது புலத்சிங்கலவில் கிடைத்துள்ள எலும்பினது டி.என்.ஏ யினை ஆய்வு செய்தால் M130 டி.என்.ஏக்கும் புலத்சிங்கல எலும்புக்கூட்டு டி.என்.ஏக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதனை அறிய முடியும். ஒரே நிலப்பகுதியாக இருந்த இலங்கையில் வாழ்ந்தவர்களும் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்த தமிழர்களாக (திராவிடர்களாக) இருக்கும் என்றே திடமாக நம்பலாம். அத்தகைய செயற்பாட்டை இந்திய அரசு மூலமாக பேராசிரியர் பச்சப்பன் செய்வாராயின் லெமூரியாவின் ஆதிக்குடிகள் யார்? உலகின் முதல் மாந்தன் யார்? என்ற வினாக்களுக்கு விடை காணமுடியும். இதனைச் செய்வதற்கு தமிழ்நாட்டு மாநில அரசு இதுவரை சிந்தித்துள்ளதா? அதனைச் சாத்தியமாக்க இலங்கை அரசு அனுமதி வழங்குமா? இது ஒரு அரசியல் சார்ந்த விடயமாகவே இலங்கையரசால் நோக்கப்படும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. அவ்வாறாகக் கோரிக்கை விடும் பட்சத்தில் அதன் அனுமதிக்குரிய சாத்தியக் கூறுகளை நேரடியாக அடைய முடியாதுவிட்டாலும் அதனை ஆய்வு செய்யும் நாடுகளின் ஆய்வு முடிவுகளிலிருந்து பெறமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"யாழ்ப்பாணத்து சைவ வேளாள மேலாதிக்க மனோநிலை" என்ற கட்டுறுப்பான சொல்லாடலால் இன்று சுட்டப்படுகின்ற ஒருவகை மனோநிலையை எதிர்கொள்ளத்தக்கஇன்னொரு மனோநிலையில் அப்போது நான் இருந்தேன்.

கோயில்கள்,தேவாலயங்கள், பள்ளிக்கூடங் களில் இன்னமும் முற்றாக துடைத் தெறியப்படாத (கட்டுறுப்பாகச் சுட்டப்படு)அந்த மனோ நிலை எங்கள்பள்ளிக்கூடத்திலும்அப்போது புகைந்துகொண்டு இருந்தது. கடற்றொழிலாளர் கிராமத்திலிருந்து படிக்கச்செல்லும் மாணவர்களைக் கூப்பிட்டு "ஐயாவுக்கு எப்படி உழைப்பு?" என்று தொடங்கி விசாரிப்புகளின் மூலம் கிண்டல் செய்யும் தன்மை ஆசிரியர் பலரிடம் இருந்தது. மீனவக் கிராமத்து மாணவர்கள் படிக்கும் "டியூட்டரிக்கு" வர மாட்டோம் என்று சென்றவர்களும் உண்டு. இக்காலத்தில் பள்ளிக்கூடம் செல்லவே மனமில்லாதவனாய் இருந்தேன். கணிதபாடம் என் மண்டையில் சுத்தமாய் ஏறவே இல்லை. "ஞாபக சக்தி வரவேண்டுமென்றால் மீன் தின்ன வேணுமடா" என்று மச்சமே கையில்தொடாத என் கணித உபாத்தியார் என் மண்டையைப் பதம்பார்த்துக் கொண்டிருந்த காலத்தில்தான் "எம்.ஜி.ஆரைப்" போல வந்தார் எங்கள் புது உபாத்தியாயர்.

புதிதாய் வந்தவரை "புதுமாஸ்ரர்" என்றே நாங்கள் அழைத்துவந்தோம். புதுமாஸ்ரர் ஒல்லியான உருவமும், எண்ணை வைத்து வாரியிழுத்த கேசமும் கொண்ட சாந்தமானவராக இருந்தார். அவர் வரலாற்றுப் பாடத்தை மிகவும் சுவாரஸ்யமாக நடத்திவந்ததோடு, மற்றைய ஆசிரியர்கள் போல அல்லாது ஏற்றத்தாழ்வு அற்ற அணுகுமுறை கொண்ட வராக இருந்தார். ஏற்கனவே இருந்த ஆசிரியர்களால் மனம் நோகடிக்கப்பட்டு பள்ளிக்கூடத்தை விட்டு நின்ற மாணவர்களைக் கூட புதுமாஸ்ரர் அவர்களின் கிராமங்களுக்குச் சென்று "நீங்களெல்லாம் படிக்க வேணுமடா" என்று உற்சாகப்படுத்தி கூட்டிவந்து வகுப்பில் சேர்த்தார். "புதுமாஸ்ரர்" எங்கள் பள்ளிக் கூடத்துக்கு வந்து சில நாட்களிலேயே எங்களுக்குள் புது நம்பிக்கைகளும்,கனவுகளும் கருக்கட்டத் தொடங்கிவிட்டன.

ஒவ்வொரு நாளுக்குமான பாடத்தை அவர் தனது குறிப்புப் புத்தகத்தில் இருந்தே படிப்பித்துவந்தார் ஒருநாள் "யாழ்ப்பாணஅரசு" பற்றிய கதை ஒன்றினை பின்வருமாறு சொன்னார்.

யாழ்ப்பாண அரசு வரலாற்றுக் காலத்தி லிருந்தேதோன்றி வளர்ந்ததொரு அரசு எனலாம். அவ்வரசு கி.பி 13ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராட்சியமாக உயர்சி பெறும்வரை வரலாற்றுக் காலத்திலிருந்து ஒரு சிற்றரசு என்ற நிலையிலேயே இருந்திருக்கிறது. இக்காலத்தில் "ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்" நடத்திய முதலாவது இலங்கைப் படையெடுப்பின்போது தம்பதெனியாவை ஆண்ட சிங்கள மன்னனாகிய "இரண்டாம் பராக்கிரமபாகுவும்", வடபகுதியில் ஆண்ட "சந்திரபானு" எனும் சாவக மன்னனும் திறை செலுத்தும் மன்னர்கள் ஆயினர். இதனால் இலங்கையில் இருந்த இரண்டு அரசுகளையும் வேறு,வேறு அரசுகளாக பாண்டியப் பேரரசு அங்கீகரித்தது. இதுவே வடபகுதி அரசுக்குக் கிடைத்த முதலாவது முக்கியமான அங்கீகாரமாகும்.

வட இலங்கைஅரசை அங்கீகரிக்காது தானே முழு இலங்கையின் உரிமையுள்ள மன்னன் என்று இரண்டாம் பராக்கிரமபாகு வைத்த கோரிக்கைக்கு இது மாறாக அமைந்தது. சிங்கள அரசுக்கும், வடபுல அரசாகிய யாழ்ப்பாண அரசுக்கும் இடையிலான பகை வளர்ந்துவந்தது.மாறி,மாறி ஒருவர் ஒருவரை தாக்கிக்கொண்டு இருந்தனர். யுத்தத்தில் பல உயிர்கள் அழிந்தன. யுத்தம் தீராததொரு வியாதியாய் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் பெற்ற வெற்றிக்குப் பின்னால் நாளைகுறித்த அச்சம் இருந்தது.

வாழ்க்கையில் நிலையாமையைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களை இவ்வகை யுத்தங்களும் தந்துபோகின்றன. அவ்வாறான புரிதல்கள் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேளைகளில் ஆளமாய் நம் அகத்தில் இறங்கும் சந்தர்ப்பங்களை நமக்கு வழங்குகின்றன. இவ்வாறான சூழலில்தான் யாழ்நிலத்தில் "நல்லசிவம்" என்றொரு ஞானவான் தோன்றி யாழ்ப்பாணக் குடாக்கடலின் நடுவில் இருந்த "பேய்த்தீவு" என்ற ஒருதீவில் வசித்து வந்தார். அவர் "இபின் பட்டுடா" என்ற மொரோக்கோ நாட்டு முஸ்லிம்அறிஞர் ஒருவருடன் தொடர்புடைய வராகவும்,பலவகையான பிழவுகளால் நிறைந்து கிடக்கும் யாழ்நிலத்தில் சமத்துவ சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கான மூலச் சிந்தனைகளை தன் உள்ளுணர்வில் இருந்து உருவாக்குபவராகவும் இருந்தார். தன்னை ஆணும், பெண்ணும் என்று உணர்ந்து வைத்திருந்த அந்தஞானவான் "பேய்த்தீவு" என்று யாழ் நிலத்து மக்களால் அச்சத்தோடு பார்க்கப் பட்ட அந்தத் தீவை அமைதிப் பூங்காவாக வளர்த்துவந்தார். ஒவ்வொரு படையெடுப்புக் காலத்திலும் வந்து குடி யேறிய குழுக்களிடையே ஏற்பட்ட சச்சரவுகளில் குடும்பங்களை இழந்த குழந்தைகளை எடுத்து வந்து அந்தத் தீவில் அவர் வளர்த்தார். பேய்த்தீவு என்ற அந்தத் தீவுக்கு "மெய்த்தீவு" என்று அவர் பெயர் சூட்டினார்.

மெய்த்தீவின் தியானப் பள்ளிகளில் ஒரு சமத்துவசமூகத்தை உருவாக்கும் வல்லமை கொண்ட மாணவர்கள் வளர்ந்து வந்தனர். அவர்கள் அத்தீவில் நின்றபடி யாழ்ப்பாணத்தில் எரியும் சுடுகாட்டு நெருப்பை வெறித்துப் பார்த்தனர். இந்தியாவில் ஏற்படும் அரசியல்மாற்றங்கள் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களையும்,எல்லாக் காலத்திலும் யுத்தத்துக்கு முகம்கொடுக்கவேண்டியிருக்கின்றவடபகுதி மக்களின் நிலையையும் கண்டு வேதனைப்பட்டனர். தங்கள் குருவாகிய நல்லசிவத்தின் நண்பர் "இபின் பட்டுடா" மெய்த்தீவுக்கு வந்து செல்லும்போது அவருடன் உலகம் முழுவதும் சென்று தமது சமத்துவ போதனையை செய்ய அவர்களில் சிலர் ஆயத்தமாகியும் இருந்தனர்.ஆனால் அவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் நிலைமையை யும்,அப்போதைய அரசியல் நிலையையும் கணித்து வரும் நோக்கோடு யாழ்நிலத்துக்குச் சென்ற நல்லசிவம் சாதி வெறியர்களால் தாக்கப்பட்டார். மிகுந்த வலியோடுமெய்த்தீவுக்குப் பயணப்பட்ட நல்லசிவத்தை உளவுபார்க்கவந்த இரண்டாம் பராக்கிரமபாகுவின் கூட்டம் கைது செய்து தமது இரகசிய இடத்துக்குக் கொண்டுசென்றது.

நல்லசிவம் அடைக்கப்பட்டிருந்த அந்தச் சிறையில் சந்திரபானுவின் தோழனும், வடபகுதி மக்களின் தனித் தமிழரசைக் கட்டுவதில் ஆர்வம் கொண்டவனுமாகிய "சிவகுமாரன்" என்ற இளைஞனும் இருந்தான் அவன் நல்லசிவத்தை ஒரு கோமாளியைப் போலப் பார்த்தான். வடபகுதி அரசை ஒரு சுதந்திர அரசாக்க, ஒரு விடுதலை பெற்ற அரசாக்க யுத்தம் ஒன்றே பொருத்தமானது என்று அவன் வாதிட்டான்.

ஆனால் நல்லசிவமோ "உரிமை கேட்கும் நம் எண்ணத்தின் அடியில் உடமையாக்கும் ஆசை ஒன்றும் பதுங்கியிருக்கின்றதென்பதை நீ புரிந்து கொள்ள வில்லையா? விடுதலையை முதலில் உன் அகத்தி லிருந்து உருவாக்கு உன்னைக் கடந்த நீயாக இந்த உலகம் உனக்குத் தெரியும்" என்றார்.

அப்படியானால் ஒன்றிணைந்த இலங்கை நாட்டுக்குள் சிங்கள அரசின் ஆட்சியில் இருக்கும்படி மறைவாய் சொல்கிறீர்களோ என்று நகைத்தான் சிவகுமாரன். நல்லசிவமோ "இல்லை ஒன்றிணைந்த உலகத்தின் உள்ளே" என்று திருத்தினார். சிவகுமாரன் சிரித்தான் "தனிமனிதனில் இருந்து தொடங்கும் விடுதலைக்கான செயற்பாடு அந்தத் தனிமனிதன் பிணைந்திருக்கும் சமூகத்தையும் விசாரணைக்கு உட்படுத்தியே கடந்து செல்ல வேண்டியுள்ளது அந்த சமூகவேலையையே நான் இப்போ முன்னெடுக் கின்றேன் அதனை புறம்தள்ளி அகில உலகசமத்துவம் என்பதெல்லாம் பித்தலாட்டம்." என்று சொல்லி நிறுத்தினான். "சமூகவேலையை நான் மறுக்கவில்லை கொலைகளைத்தான் வெறுக்கின்றேன்". என்று நல்லசிவம் பதில் சொன்னார். அதன் பின் இருவருமே பேசவில்லை.

யாழ்ப்பாணச்சமூகம் யுத்த ஈடுபாட்டாலும், தமக்குள்ளே திருத்தப்படாத சமூகப் பிழவுகளாலும் பொருமியிருப்பதை அச்சிறையில் இருந்தபடி நல்லசிவம் உணர்ந்தார். இந்தப் பொருமல் வரலாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதும் இருக்கும்போலும் என்று எண்ணி பெருமூச்சு விட்டார்.

எந்த வேளையும் யுத்தத்திற்குத் தயாராக இருந்த சந்திரபானு ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுக்கு திறை செலுத்துவதற்கும் மறுத்துவிட்டான். இதனை பயன்படுத்தநினைத்த சிங்கள மன்னன் இரண்டாம் பராக்கிரமபாகு தனது தூதுவனை ஜடாவர்மனிடம் அனுப்பி சந்திரபானு பற்றிய மேலதிக முறைப் பாடுகளையும் செய்து, வடபகுதியையும் தன் கட்டுப்பாட்டுக்குள் தரும்படிவேண்டிக் கொண்டான். ஆனால் ஜடாவர்மனோ சிங்கள அரசன் பலமோடு இருப்பதை விரும்பவில்லை. இலங்கைக்கு படை யெடுத்து வந்த ஜடாவர்மன் சந்திரபானுவோடு யுத்தம் செய்தான். இந்தவேளை பராக்கிரமபாகுவின் உளவுக் காரர்களின் இரகசியச் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்ட நல்லசிவம் யாழ்ப்பாணத்திலிருந்து மெய்த் தீவுக்குச் செல்லும் வழியில் ஜடாவர்மனின் படையினரால் தாக்கிக் கொல்லப்பட்டு கடலில் வீசப்பட்டார். நல்லசிவம் பயணித்த அந்தப் படகுமட்டும் கடலின் பரப்புகளில் மிதந்தபடியே இருந்தது. தொடர்ந்த யுத்தத்தில் சந்திரபானுவை ஜடாவர்மன் வீரபாண்டியன் வென்றான்.

நல்லசிவத்தின் நண்பர் "இபின் பட்டுடா" இலங்கைக்கு வந்தபோது ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்குள் வடபகுதி மாறியிருந்தது.அவரால் மெய்த்தீவையோ, நல்லசிவத்தையோ கடைசிவரை காணமுடியவில்லை. வந்தவர் வடபகுதியின் செல்வச் செழிப்பை கண்களால் அளந்துவிட்டு சிலாபத்துறை, சிவனொளிபாதமலை கடந்து தனது நாட்டுக்குத் திரும்பினார்.இது எங்கள் புதுமாஸ்ரர் எங்களுக்குச் சொன்ன கதை. எங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து அடுத்தவருடமே புதுமாஸ்ரர் மாற்றலாகிப் போய் விட்டார். ஆனால் அவர் போனபிறகும் அவர் சொன்ன இந்தக் கதையை என்னால் மறக்க முடியவில்லை. என் கனவில் அடிக்கடி மெய்த்தீவு வந்து,வந்து போனது. அவர் சொன்ன கதையை வைத்துப் பார்த்தால் அந்தத் தீவு எங்கள் ஊர்காவற்றுறைக் கடல்பரப்புக்குள்ளேதான் வருகிறது. நாடியில் விரலைவைத்து, நெற்றியைச் சுருக்கியெல்லாம் யோசித்துப்பார்த்ததில் புங்குடு தீவுக்கும், சுருவிலுக்கும் இடையில் கடல்நடுவில் சில புட்டிகள் இருப்பது நினைவுக்கு வந்தது. இதில் ஒரு புட்டியின் பெயர் "பேய்ப்புட்டி" பேய்த்தீவுதான் கடலில் அரிபட்டு பேய்ப் புட்டியாய்ப் போனதோ என்று எண்ணிய



படி ஒரு பள்ளிக்கூட விடுமுறை நாளில் தோணியில் ஏறி பேய்ப் புட்டிக்குப் போனேன்.பேய்ப் புட்டியை நெருங்க, நெருங்க நெஞ்சுக்குள் ஒரே குதூகலம். ஆனால் அங்கு சென்றுபார்த்தால் எங்கும் கண்ணாப் பற்றைகளால் நிறைந்திருந்தது அந்தத் தீவு. இப்படியொருகதை இங்கே நிகழ்ந்திருக்க சாத்தியங்கள் அரிது என்று நினைத்தேன். வீடு திரும்பி மறுநாள் நூலகம் சென்று யாழ்ப்பாணச் சரித்திரத்தை தட்டிப் பார்த்ததில் சந்திரபானு பற்றிய கதைக்குள், அல்லது இபின் பட்டுடா வந்த காலத்தில் எங்கேயும்"நல்லசிவம்" பற்றிய குறிப்புகள் இல்லை. எனக்கு ஆத்திரம் உச்சியைப் பிழப்பது போல வந்தது எங்கு தேடியும் புதுமாஸ்ரரின் தொடர்பு கிடைக்க வில்லை.

பல ஆண்டுகளின் பின் கனடாவில் புதுமாஸ்ரர் இருப்பதாக நண்பன் மூலம் அறிந்து, ஒருவாறு அவரது விலாசத்தை தேடிப் பிடித்து அவர் வீட்டுக்குப் போய்சேர்ந்தேன். வீட்டின் முன்னால் இருந்த "கறாஜில்" ஒரு கிழவன் குந்தியிருந்து பலகையொன்றை சீவிக்கொண்டிருந்தார். அது அவர்தான். நான் என்னை அவருக்கு நினைவு படுத்திவிட்டு பேசத் தொடங்கினேன். ஒரு வரலாற்று மாணவனுக்கு நீங்கள் செய்தது சரியா? என்று கேட்டேன். அவர் சிரித்தார். தன் வீட்டுக்குள் வரும்படி அழைத்தார்.

நான் அவருக்குப் பின்னால் போகும்போது வீட்டின் முன்னால் இருந்த பெயர்ப் பலகையொன்றில் "இங்கு தமிழ் கற்பிக்கப்படும்– ஆசிரியர்; நல்லசிவம்" என்று இருந்தது.

அப்போதுதான் தெரிந்தது புதுமாஸ்ரரின் பெயர் நல்லசிவம் என்று . அது எனது ஆத்திரத்தைக் கூட்டியது.என் முக மாற்றத்தை அவதானித்தவர் "நான் சொன்ன கதையை முதலிருந்து அர்த்தப்படுத்திப் பார்" என்றார். பேசியபடியே அவரது அறைக்குப் போனேன். அவர் சீவிக் கொண்டிருந்த பலகை ஒரு சிறிய படகுப் பொம்மையைச் செய்வதற்கான துண்டு என்று புரிந்தது. அறையைச் சுற்றி கண்களால் நோட்டம் விட்டேன். அங்கே இருந்த படகுகளில் இரண்டு,அவற்றிலிருந்த இரண்டு பெயர்கள் எனது நெஞ்சில் சுரீரெனத் தைத்தன. அவற்றில் ஒன்றில் "ஆத்மாநாம்" என்றும் மற்றையதில் "சிவரமணி" என்றும் எழுதியிருந்தது.

மாஸ்ரர் சொன்னார் "வரலாறு முழுதும் இந்தப் படகுகள் அடைந்துகொண்டே இருக்கின்றன" என்று . நான் எழும்பி நடந்தேன் அப்போதுதான் "நல்லசிவம் மாஸ்ரர்" செய்யும் புதிய படகு நினைவுக்கு வந்தது. அந்தப் புதிய படகு எந்தக் கவிஞனுக்கானது? இந்தச் சமூகம் இன்னமும் எந்தக்கலைஞனை பலிகேட்கிறது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானஸ்தானத்தின் விளைவுகள்

இளைய ஹசன்
ஒரு கிறிஸ்தவரை மணப்பதற்காய்
ஞானஸ்தானம் பெற்றான்.
அவன் ஒரு கடலோடியாய் இருந்தபோதும்,
மதகுரு
எரிக் என அவனிற்குப் பெயரிட்டார்.
இப்போது
அவனுக்கு இரண்டு பெயர்கள்
மனைவி மட்டும் ஒருவர்

## நீரின் திறப்பு

ரிஷிகேசியின் பின்னால்
கங்கை இன்னும் பச்சையாக இருக்கிறது
கண்ணாடித் தொடுவானம்
மலையுச்சிகளைப் பிரிக்கிறது
பளிங்குகளின் மேல் நாம் நடக்கிறோம்.
மேலும் கீழுமாய்
நிசப்தத்தின் மிகப் பெரும் வெளி.
நீல ஆகாயத்தில்
வெள்ளைக் கற்களில், கரு மேகங்களில்
நீ கூறுகின்றாய்:
எல்லா வளங்களுமுள்ள நாடு.
அன்றைய இரவு என் கரங்கள் நகர்ந்தன
உன் முலைகளில்.

## இளமை

அலையின் பாய்ச்சல்
வெண்மையாய்
ஒவ்வொரு மணியும்
பசுமையாய்
ஒவ்வொரு நாளும்
இளமையாய்
மரணம்.

**ஆக்டோவியா பாஸின் கவிதைகள்**
**தமிழாக்கம்: டிசே தமிழன்**



## தூரத்து அயலவர்

நேற்றைய இரவு
ஒரு ஆஷ் மரம்
(எதையோ) சொல்ல இருந்தது -
ஆனால் சொல்லவில்லை

## விடியல்

காற்றின் கரங்களும் உதடுகளும்
நீரின் இதயம்
ஒரு இயுகலீப்டஸ்
முகில்களின் கூடாரங்கள்
ஒவ்வொரு நாளிலும் பிறக்கும் வாழ்வு
ஒவ்வொரு வாழ்விலும் பிறக்கும் இறப்பு
நானெனது விழிகளைத் தேய்க்கின்றேன்:
ஆகாயமிறங்கி நிலத்தில் நடக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நான் கட்டாயம் வரத்தான் வேண்டுமா? என்று பத்தாவது தடவையாக கமலா கேட்டாள். "ஆமாம்! நீர் வராவிட்டால் அவர்கள் ஏதாவது நினைக்கக்கூடும். அவர்கள், ஊரில் எனது அயலவர்கள். உமக்குச் சுகமில்லை என்று எப்படித்தான் விளங்கப்படுத்தினாலும் அந்த சமாதானத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்", என்றான் சுரேஷ், அவள் கணவன்.

ம்... என்ற பெருமூச்சுடன் ஜக்கட்டை எடுப்பதற்காக முன் வாசலுக்குப் பக்கத்திலிருந்த கொலோசற்றைத் திறந்தாள் கமலா. உடம்பு இன்னும் அனலாகக் கொதித்துக் கொண்டுதான் இருந்தது.

"இன்று வழக்கத்தை விட அதிகமான காற்று. குளிரும் அதிகம்", என்று சுரேஷ் நினைவூட்டினான்.

சற்றுத் தடித்த ஜக்கட்டை எடுத்து கமலா அணிந்து கொண்டாள்.

காரில் ஏறும்போது நவம்பர் மாதக் குளிர்காற்று ஜக்கட்டின் ஊடாகப் புகுந்து உடலை விறைக்க வைத்து விடும் போலிருந்தது.

கூதிர்கால ஞாயிறு மாலை ஐந்து மணியள வில் அவர்கள் ராஜனின் தொடர்மாடிக் கட்டிடத்தை அணுகும்போது இருள் ஸ்காபரோ நகரை விழுங்கத் தொடங்கியிருந்தது. கார் நின்றதும், கமலா அவசர அவசரமாய் இறங்கிக் கட்டிடத்தினுள் தஞ்சம் புகுந்தாள்.

மூச்சு வாங்கியது அவளுக்கு.

காரை விருந்தினர்களின் கார் தரிப்பிடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு சாவதானமாக சுரேஷ் வந்தான்.

இருபதாவது மாடியிலுள்ள ராஜனின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. சாம்பிய முகத்துடன் வந்து ராஜன் கதவைத் திறந்தான். அந்த வீட்டினுள் நுழைந்ததும் ஒரு புறத்தில் ஆட்கள் கதைக்கும் ஆரவாரம் கேட்டது. கனடா, வீசா, ஸ்பொன்சர், குடிவரவு, குடியகல்வு என எத்தனையோ விடயங்கள் அங்கு அலசப்படுவதாக கமலாவுக்குத் தோன்றியது. சப்பாத்து, ஜக்கட் என்பவற்றைக் கழற்றி வைத்து விட்டு, அந்தப் பெரிய ஹோலில் இருந்த சோபாவொன்றில் தன் கணவனின் ஊரவளான பாக்கியத்தின் பக்கத்தில் கமலா அமர்ந்து கொண்டாள். ராஜனின் மனைவி புஷ்பா வேதனை தோய்ந்த முகத்துடன் இவர்களின் சோபா அருகே இருந்த கதிரையில் வந்து உட்கார்ந்தாள்.

ராஜனுடைய அண்ணாவின் மரணம் குறித்து ராஜனை விட புஷ்பா அதிகம் கவலைப்படுபவள் போல கமலாவுக்குத் தோன்றியது.

"கனகாலம் சுகமில்லாமல் இருந்தவரோ?" என்று ராஜனை யாரோ விசாரித்தனர். கடந்த இரண்டு மாதகாலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தன் அண்ணன் மரணத்துடன் நடத்திய போராட்டத்தை ராஜன் பதினொராவது தடவையாக மனப்பாடம் செய்த மாணாக்கன் போல் விவரித்தான்.

மனம் வலித்தது.

சிறுவன் ஒருவன் பல்கனி கதவைத் திறந்து வெளியே வேடிக்கை பார்த்தான். திறந்த கதவூடாகக் குளிர்காற்றுப் புகுந்து ஊசியாற் குத்துவது போன்று அனைவரையும் தாக்கிற்று. மற்றவர்கள் சொல்ல முன்பேயே சிறுவன் கதவை மூடிவிட்டான்.

இளம் மனைவி. பள்ளி செல்லும் நான்கு குழந்தைகள். இரு குழந்தைகள் தாயுடன் கொழும்பில். கடைசி இரு குழந்தைகளும் அம்மம்மாவுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகத்தில். ஏ9 பாதை மூடப்பட்டிருந்தது. யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்பு செல்லப் பிரயாணக் கட்டுப்பாடுகளும் அதிகம். அநியாயப்படுவார்கள் இரு பக்கமும் விட்டால்தானே! அம்மம்மாவால் குழந்தை களைக் கொழும்புக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை.

கமலா கண்களை மூடிக் கொண்டாள். மூடிய விழிகளில் முகம் தெரியாத இரு குழந்தைகளின் நீர் வார் கண்கள் தெரிந்தன.

பல்கனி கதவினூடாக வந்த குளிர்காற்று அந்த ஹோலை இன்னமும் வியாபித்திருந்தது. செயற்கை வெப்பமேற்றி அதைப் போக்கத் தீவிரமாய் வேலை செய்து கொண்டிருந்தது.

"டங்!" கமலா திடுக்குற்று விழித்தாள். தேநீர் குடித்த கோப்பையை யாரோ கை தவறி நிலத்தில் போட்டு விட்டார்கள்.

"நாங்கள் புது வீடு ஒன்று வாங்கி இருக்கிறம். இந்த வெள்ளிக்கிழமை பால் காய்ச்ச எண்டிருந்தம். இப்ப துடக்கெல்லே. ஒன்றும் செய்ய முடியாது" என்று புஷ்பா பாக்கியத்திடம் உதட்டைப் பிதுக்கிச் சலிப்புடன் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பாக்கியத்தின் கண்கள் அகல விரிந்தன. "இவற்ற தங்கச்சி இந்தக் கட்டிடத்தில உள்ள அபாட்மெண்ட் ஒண்டிலதான் முந்தி இருந்தவ. இங்க சரியான எலித் தொல்லையாம். என்னெண்டப்பா ஆறேழு வருசமாக இங்கேயே இருக்கிறியள்?"

சாமிநாதன் திரும்பிப் பார்த்து மனைவியை முறைத்தார்.

புஷ்பா உடைந்த தேநீர் கோப்பைத் துண்டு களைக் கவனமாகப் பொறுக்கத் தொடங்கினாள்.

கமலா பெருமூச்சுடன் கண்களை மீண்டும் மூடிக் கொண்டாள். மூடிய விழிகளுள் மல்லாகத்தி லிருக்கும் குழந்தைகளின் தவிப்பு பூதாகார உருவெடுத்தது.

"இப்படித்தானே எங்களுக்காக உழைத்து, உழைத்துத் தேய்ந்த அப்பா ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் காலமானபோது அக்கா, தம்பி, அண்ணா, தங்கை என நாம் ஐவரும் சிதறுண்டு கிடந்தோம். எனினும், தம்பியைத் தவிர, மற்றெல் லோரும் ஒன்று கூடி அவர் இழப்பின் வலியையும், துயரத்தையும் பகிர்ந்து கொண்டோம். தம்பியால் வர முடியவில்லை. மேற்கு நாடொன்றிற்குச் செல்வதற்காக பூமிப் பந்தின் எங்கோர் மூலையில் விலாச மற்றிருந் தான். அது தம்பியின் மனதில் அகலாத சோகம். அதைப் பற்றி இன்றும் தொலைபேசியில் பேசும்பொழுது அவன் குரல் உடையும்."

கமலாவுக்கு இருமல் வந்தது. அதனை அடக்குவதற்குப் பிரயத்தனப்பட்டாள்.

"உங்களுக்கென்ன நல்ல சளி, கன காலமாக இருக்குது போல," என்று பக்கத்திலிருந்த பாக்கியம் தாழ்ந்த குரலில் கரகரத்தாள். கமலா கண்களைத் திறந்தாள். "உங்களுக்கு இலங்கைக்குப் போய் வரும் எண்ணமில்லையோ?"

இது என்ன அசந்தர்ப்பமான கேள்வி என்பது போல கமலா பாக்கியத்தைப் பார்த்தாள்.

"இவர் ஜனவரியில கொழும்பு போறார். எங்களுக்கு பம்பலப்பிட்டியிலும், கொள்ளுப்பிட்டியிலும் இரண்டு வீடு இருக்குது. கொள்ளுப்பிட்டி வீட்டை ஒரு ஜேர்மன்காரனுக்கு வாடகைக்கு விட்டிருந்தனாங்கள். அவன் இலங்கையை விட்டுப் போறானாம். வேறு யாரா வது நல்ல ஃபோறினருக்கு அதைக் குடுக்க வேணும்."

கமலா பாக்கியத்தை உற்றுப் பார்த்தாள்.

கமலா ஒரு வாடிக்கையாளர் என்பது போல, கட்டிடக் கலைஞரால் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்ட கொள்ளுப்பிட்டி வீட்டின் சிறப்புகளை, பாக்கியம் மேலும் விவரிக்கத் தொடங்கினாள்.

கமலா சற்று விலகியிருந்த யன்னல் திரை யினூடாகத் தொலைவில் தெரிந்த பல்மாடிக் கட்டிடங் களை மின்னுகின்ற செயற்கை வெளிச்சத்தில் பார்க்க முயன்றாள். களைப்பு மேலிட்டது. கட்டிலிற் படுத் தாற்றான் சௌகரியமாக இருக்கும் போலிருந்தது. கண்களை மூடினால் நீர் வழியும் விழிகளுடன் குழந்தைகளின் பிம்பங்கள்.

வெளியே காற்றின் வேகம் கூடியிருந்தது. இறுக மூடிய யன்னல்கள் வழியாக வீட்டினுள் அதன் அரவம் கேட்டது.

பம்பலப்பிட்டி வீட்டை தன் தங்கை குடும்பத் துக்குக் குறைந்த வாடகைக்கு விட்டிருப்பதாகவும், அதனால் கனடா வர முன்னர் வெள்ளவத்தையில் தாம்



வாங்கி விட்டிருந்த ஃப்ளட்டொன்றில் தன் கணவர் கொழும்பு சென்றால் தங்குவார் என்ற நுணுக்கமான விவரமும் கூறி பாக்கியம் தன் தனிப்பேச்சுக்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள். இது கமலாவுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. ஆனால், தலைவலி கூடியிருந்தாற் போல உணர்ந்தாள்.

"சடாரென்று" எழுந்தாள். "நாங்கள் இனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை போவம்", என்றாள் கணவனிடம்.

கமலாவின் இந்தத் திடீர் யோசனைக்கு சுரேஷ் சுற்றியிருந்தவர்களிடம் சிறிய தயக்கமுடன் விளக்கமளிக்க வேண்டியதாயிற்று. "அவவுக்குக் கடந்த ஒரு கிழமையாக நல்ல இருமலும், காய்ச்சலும்" என்றான்.

உடனே ஆயிரம் இலவச அறிவுரைகள் காற்றில் பறந்து வந்தன. தடிமன், தலையிடி, சளி, காய்ச்சல் வந்தால் என்ன செய்ய வேண்டும்? அவை வராது எவ்வாறு உடம்பைப் பாதுகாக்க வேண்டும்? என்ற வைத்திய ஆலோசனைகள் சுரேஷையும், கமலாவையும் திக்குமுக்காட வைத்தன.

கமலா, சுரேஷைத் தொடர்ந்து பாக்கியமும், அவள் கணவன் சாமிநாதனும் ராஜன் தம்பதியினரிடம் விடைபெற்றுக் கொண்டனர். மகனுக்கு ஃபோன் பண்ணத் தேவையில்லை என்றும், தானே அவர்களை வீட்டில் கொண்டு போய் விடுவதாகவும் சாமிநாதன் தம்பதியினர்க்கு சுரேஷ் கூறினான். லொபியில் அவர்களை கமலாவுடன் காத்திருக்கும்படி சொல்லி விட்டு கார் எடுத்துவர வெளியே சென்றான்.

கணவனைப் பார்த்து, பாக்கியம் "ராஜனவை புது வீடொன்று வாங்கியிருக்கினமாம்", என்றாள்.

கமலாவின் மனமும் உடலும் களைத்துச் சோர்ந்திருந்தன.

சுரேஷ் காரைக் கொண்டு வந்துவிட்டான்.

இலை உதிர்த்து நின்ற மொட்டை மரங்கள் காற்றில் நடுங்குவது போன்று, குளிரில் நடுங்கும் தனது மனைவியைப் பரிவுடன் கார் யன்னல் கண்ணாடியூடாகப் பார்த்து நெகிழ்ந்தான்.

கமலா பாக்கியத்துடன் பின்சீட்டில் நுழைந்து கொண்டாள்.

வானமும் இன்னமும் கன்னங்கரேல் என்று தானிருந்தது. ஒரு நட்சத்திரமும் தென்படவில்லை.

கார் ஓடத் தொடங்கியது.

கமலா கண்களை மூடிக் கொண்டாள். குழந்தைகளின் நீர் சோரும் விழிகள் மட்டும் தெரிந்தன. கண்களை ஒருகால் திறக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவளால் முடியவில்லை.

"இஞ்ச தம்பி! மெய்தானோ! ராஜன் புதிசா வீடொன்று வாங்கியிருக்கிறானாம்" என்று முன் சீற்றிலிருந்த சாமிநாதன் வாகனம் செலுத்திக் கொண்டிருந்த சுரேஷைக் கேட்டார்.

கமலா பெருமூச்செறிந்துவிட்டு கார்சீட்டில் சாய்ந்தாள்.

பதிலை எதிர்பார்த்திருந்த சாமிநாதனிடம் "உங்கள் பக்கக் கதவு சரியாக மூடப்படவில்லை. எனவே, கதவைச் சற்றுத் திறந்து விட்டு வடிவாகச் சாத்துங்கள்", என்றான் சுரேஷ்.

சாமிநாதன் கார்க் கதவைத் திறந்ததும், வெளியே குளிர்காற்று கமலாவின் நீண்ட பெருமூச்சுப் போல "ஊ" என்று ஊதிக்கொண்டு, காரையும் ஆட்டிச் சென்றது. சாமிநாதன் கதவை வடிவாகச் சாத்தினார்.

# என் முற்றத்தின் இறுதி முத்தம்

நான் உன்னில்......நீ என்னுள்.....
உமிழ்ந்த அன்பின்
நறுநீர் உறைந்திருக்கும்!!! என்பதாகத்
தானிந்த நாள்வரையில் தாங்கி வந்தேன்
தறுவாய்கள் தவறாகித் தளர்ந்த போதில்
வானின்றிழிந்த எரி சரங்க ளாலென்
வாழ்வுருகிப் போனதென விருத்தம் பாட
ஏனிங்கு விண்முகடும் எரிந்த நீயும்
இயலாமை சொல்லியெனை ஏங்க வைத்தாய்?
ஓசையில்லா என்மனதைச்
சொல்ல வென்றென்
ஓசைகளை வேண்டியொரு யாகம் செய்தேன்
யாசித்தேன்...பாஷைகளை...திறந்து போடு!
யாருடனும் பேசவொரு ஏது வாகும்
வாசிப்பிற் குழலாகும்...வளைந்து போகும்
வசிப்பிற்கும் வலியதொரு வழிய தாகும்
நேசிப்பில் நீர்சுரக்கும்....நேத்திரங்கள்
நின்றுநெடு நாள்கடக்கும்...நீடு வாழும்!
சூழ்நிலையின் சூக்க்ஷுமத்தால் நானோர்
கைதி
சுந்தரங்கள்....சுதந்திரங்கள் சிதைந்த
போதும்
வாழ்முனைப்பு வேறுவழி யின்றி ஏகும்
வண்ணமென விழித்திரைக்குள் மாயம்
ஆகும்!!!
காழ்ப்புமனப் படுதாவில் கவிதை தீட்ட
யாப்புமனம் ஒண்ணாது...யந்திரம் போல்
ஆழ்மனத்தே நீயுமிழ்ந்த அதர பானம்
ஆற்றுப்படுத்துமென ஆறி நிற்பேன்.

**ஆனந்தபிரசாத்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகக் கடவ...

நடுச்சாமத் திடுக்கிடலில்
அவரை கண்டேன்
அசுமாத்தங்களின்றி போர்வைக்குள்
நுழைந்தவரை
யாரென்று கேட்பதுடன் அயர்ந்தேன்
ஆக
உனக்குக் கடவுளைத் தெரியாதென்றது அசரீரி
மயிர்க்கால்கள் கூச்செறிய துடித்தெழுந்து
அவர் காலடியில் அமர்ந்து கொண்டேன்

சாமங்கள் தாண்டிய குளிர்
கடவுளுக்கப்பால் கிடந்தது

தூக்கமேயில்லை என்றேன்
கனவுகள் அந்தரித்துத் திரிகின்றன என்றும்
சொல்லி
அவர் நாமங்களை உச்சரித்துச் சாய்ந்தேன்

----------

வெக்கை முகிழ்த்த பகல்

பெருமழைக்கான காத்திருப்பில்
பூளை கசியும் கண்மூடி
தனித்திருந்தாள் கிழவி
காற்றில் கைகள் துளாவி
இவளைப் பிடிக்க வந்தாள்

கடவுளே
முற்றமெல்லாம் மாம்பழங்கள்
வெம்பிப் பழுத்தவற்றை
தின்று செரித்தது மாடு

கடவுளே
கோழிப்பீ கரைந்தோடும் மண்ணை
நான் வெறுத்தேன்

கடவுளே
போறணைக்குள் தூங்கிக் கிடந்த போயிலை
மணம்
என் அம்மாவிலும் வீசியது
ஈரப் பொச்சு மட்டைகளின்
தீய்ந்த மணம் காற்றில்

கடவுளே

பனையளவு தாப்பம் எங்கள் கிணறு
அதுக்குள் நிலவு விழுந்து கிடந்தது

கடவுளே
என் கொலுசை
பாம்புப் புத்துக்குள் ஒளித்து வைத்தேன்

கடவுளே
இப்படி ஒரு சாமத்தில்
நான் கடல்களை நீந்தித் தாண்டினேன்

கடவுளே
நேற்று என் கனவுகளை
மழைக்குக் கடன் கொடுத்தேன்

இன்றைக்கானவற்றை
செம்பாட்டு மண்ணுக்கு

நாளைக்கானவற்றை
வரப்பு நிறையும் மிளகாய்களுக்கு

----------

கால் உதறி விழிக்கையிலும்
கடவுள் அங்கிருந்தார்

கொடுத்தனுப்ப ஒன்றுமில்லை

குழந்தையின் எச்சில் முத்தமும்
சாம இருட்டின் ஒரு கைப்பிடியுமாய்
அவரை அனுப்பலாயிற்று

கடவுளே
இந்த அறை உன்னுடையதாயிருந்தது
இப்போது என் போர்வையும்
உனதேயாகக் கடவ.


மயூ-மனோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டைக் கட்டிப்பார்!

வ.ந.கிரிதரன்

என் பெயர் கனகசபை. நான் ஒரு ஈழத்துத் தமிழ் அகதி. கனடாக் குடிமகன். கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து அகதியாகக் கனடா வந்து கடந்த இருபது வருடங்களாகக் கன்டாவின் முக்கிய நகரான டொராண்டோவில் மனைவி, குழந்தைகளென்று வசித்து வருகின்றேன். நான் எனது வீடு வாங்கிய அனுபவத்தை உங்களுடன் இப்பொழுது பகிர்ந்து கொள்ளப் போகின்றேன். இதில் நான் உங்களது அபிப்பிராயத்தைக் கேட்கப்போவதில்லை. ஆனால் மனப்பாரத்தை இறக்கி வைத்தால் ஓரளவுக்கு ஆறுதல்தானே. அது தான் கூறலாமென்று நினைக்கின்றேன். மக்கள் ஊரில் அகதிகளாக அலைகின்றார்கள். சொந்த மண்ணிழந்து வாழ்கின்றார்கள். இந்த நிலையில் "இவர் பெரிய மசிரு. வீடு வாங்கின கதையினைக் கூற வந்திட்டாராக்குமென்று" நினைக்கிறீர்கள் போலை. இருந்தாலும் என் கதையினைக் கூறாவிட்டால் என் மண்டையே வெடித்து விடும் போலையிருப்பதால் அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். அது தவிர என் அனுபவம் ஒரு சிலருக்குப் படிப்பினையாகவிருக்குமல்லவா? ஏன் வீடு வாங்கிய அனுபவத்தை மட்டும் வைத்து வீடு வாங்குவது பற்றி ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான அனுபவம். என் அனுபவம் இது. மேலே படியுங்கள்.



1.

அன்று....

செல் போன் "ரீங்"காரமிட்டது. அழைத்தது இந்திரகுமார். "ரியல் எஸ்டேட்" முகவராகத் "டொராண்டோவில்" பணிபுரியும் ஆயிரக்கணக்கானவர்களிலொருவன். சென்ற முறை நண்பன் கந்தரட்னத்தின் இல்லத்தில் சந்தித்திருந்தேன். கந்தரட்னம் என்னுடன் தான் கனடா வந்தவன். இன்று வீடும், வாசலுமென்று பொருளியல் ரீதியில் மிகவும் உச்சநிலையிலிருப்பவன். முதலீடுகள் மூலம் பணத்தைப் பெருக்குவதில் வல்லவன். செல்வத்தின் உச்சநிலையில் இருந்தபோதும் நட்பை இன்னும் மதிப்பவன். இலங்கையில் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து தொடரும் நட்பு. அவ்வப் போது சந்தித்துக் கொள்வதுண்டு. இயற்கை, அறிவியல், அரசியல், தத்துவம், இறையியலென்று அனைத்து விடயங்களையும் பற்றிக் கதைப்பதில் ஆர்வமுண்டு. வானியல் பற்றியும் மிகவும் ஆர்வமுள்ளவன். அதற்காக இரவுச் சுடர்களைத் தெளிவாகப் பார்க்கும் வகையிலான தொலைக்காட்டியொன்றையும் அண்மையில் வாங்கி வைத்திருந்தான். வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக இருக்கும் சமயங்களில் இரவுச்சுடர்களை, தன்நிலவுப் பெண்ணை அத்தொலைகாட்டியினூடு பார்ப்பதுண்டு. அவ்விதமாக ஒருநாள் பார்ப்பதற்காக அவனில்லத்திற்கு வந்த போது தான் எனக்கும் இந்திரகுமாருக்குமிடையிலான முதற்சந்திப்பு நடை பெற்றது. அப்பொழுது அவன் என்னைப் பற்றி விசாரிப்பதில் ஆர்வம் காட்டினான்.

"அண்ணை, எங்கை இருக்கிறீங்கள்? "மார்க்கத்"திலையா"

எதற்கெடுத்தாலும் "அண்ணை" போட்டுக் கதைப்பது எம்மவர் பலரின் பழக்கம்.

"ஸ்கார்பரோவிலைதான்"

"இன்னும் ஸ்கார்பரோவிலையா?"

இந்திரகுமாரின் குரலில் வியப்பு சிறிது தொனித்தது.

"ஓமோம். அதுதான் குழந்தைகளின்ற் படிப்புக்கெல்லாம் நல்ல வசதி" என்றேன்.

இந்திரகுமார்: "இப்பதானே எங்கடை ஆக்கள் எல்லாரும் ஸ்கார்பரோவிலையிருந்து வீட்டை வித்திட்டு, மார்க்கம் , பிராம்டன், ஏஜக்ஸ் என்று மூவ் பண்ணுகினம். மூவ் பண்ண வேண்டியதுதானே"

இவ்விதம் இந்திரகுமார் கூறுவதை அருகில் நண்பனின் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருந்த என் தர்மபத்தினி கேட்டுக்கொண்டிருந்தவள் இடையில் புகுந்தாள்: "நல்லாச் சொல்லுங்கள். இவருடைய மண்டையிலை ஏறுகிறமாதிரிச் சொல்லுங்கள். எல்லாரும் வீடு, வாசலென்று இருக்கேக்கை இந்த மனுசனுக்கு இதைப்பற்றி ஒன்றுமே கவலையில்லை. கனடாவுக்கு வந்ததிலை இருந்து இன்னமும் அபார்ட்மென்ட்டுக்குள்ளை வாழவேண்டு மென்றிருக்கு"

இந்திரகுமாருக்கு நல்லதொரு பிடி கிடைத்து விட்டது. உற்சாகமுற்றான். அத்துடன் அந்த உற்சாகம் குரலில் தொனிக்கக் கூறினான்: "அண்ணை, அக்கா சொல்லுறதும் சரிதானே. இன்னமும் அபார்ட்ட் மென்டிலையா இருக்கிறியள். என்னைக் கேட்டால் நீங்கள் வீணாக "ரென்ட்" கட்டுறியள். கட்டுகிற "ரென்ட்"டுக்குப் பதிலாக இன்னும் கொஞ்சம் சேர்த்து, இப்ப கிடைக்கிற மோட்கேஜிற்கு ஒரு வீட்டையே வாங்கிப் போட்டிங்களென்றால் விலைக்கு விலை. "சேவிங்க்"சுக்கு சேவிங்ஸ்.".

"அப்படிச் சோல்லுங்கோ. நீங்கள் சொல்லி யாவது இந்த மனுசன் கேட்கிறாரா என்று பார்ப்போம்" இது என்னவள்.

அன்றிரவு நண்பனின் வீட்டிலிருந்து வந்ததி லிருந்து ஆரம்பித்த என் மனைவியின் தொண தொணப்பு நின்றபாடில்லை. இந்தச் சமயத்தில்தான் இந்திரகுமாரின் இந்தத் தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது.

"அண்ணை, என்ன பிஸியோ"

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. பெரிதாக வேலையெதுவுமிருக்கவில்லை.

"அப்படியொன்றும் பெரிய பிசி இல்லை. என்ன விசயம்?"

"அண்ணை, எனக்கு ஒரு அரை மணித்தி யாலம் காணும். மார்க்கமும், டொராண்டோவும் சந்திக்கிற இடத்திலை, ஸ்கார்பரோவிலை நல்லதொரு வீடு நல்ல விலைக்கு வந்திருக்கு. உங்களுக்குப் பிடிச்சு தென்றால் அமுக்கிப் போடலாம். என்ன சொல்லுறியள்?"

இதற்கிடையில் மோப்பம் பிடித்துக்கொண்டு என் மனைவி வந்துவிட்டாள்: "என்னங்கள், யாரது போனிலை?"

"அன்றைக்குச் சந்தித்தமே அந்த ரியல் எஸ்டேட் ஏஜன்ட்தான்"

இனி இவள் இதற்கொரு முடிவு காணாமல் விடமாட்டாளென்று பட்டது. முகவனிடம் "வீட்டைப்பற்றி என்னுடைய மனுசியுடன் கதையும். அவவுக்குத்தான் இதுபற்றி நல்லா விளங்கும்" என்று கூறிவிட்டு மனுசியிடம் போனைக் கொடுத்தேன்.

அவர்களுக்கிடையிலான தொலைபேசி உரையாடல் மேலும் சிறிது நேரம் தொடஉந்தது.

இந்திரகுமார் (ரியல் எஸ்டேட் முகவன்): "அக்கா, இப்பத்தான் அண்ணையிடம் கூறிக் கொண்டிருந்தன். நல்ல விலைக்கு, நல்ல லொகே சனிலை வீடொன்று விலைக்கு வந்திருக்கு.வீட்டுச் சொந்தக்காரன் அமெரிக்காவுக்கு மூவ் பண்ணு கிறானாம். அதுதான் குறைந்த விலைக்கு வித்துப்போட வேண்டுமென்று நிக்கிறான். என்ன சொல்லுறியள்? போய்ப்பார்ப்பமே. இப்ப உங்களுக்கு டைம் இருந்தால் இப்பவே போய்ப்பார்க்கலாம். அக்கா, அண்ணையுடன் கதைச்சுப் போட்டுச் சொல்லுறியளே. நான் லைனிலை நிற்கிறன்"

இதைக்கேட்டு விட்டு என்னிடம் திரும்பிய என் மனைவி "ஏஜன்ட் சொல்லுறார் நல்ல விலைக்கு வீடொன்று வந்திருக்காம். பேரய்த்தான் பார்ப்பமே. என்ன சொல்லுறியள்?"

இனி என்ன சொல்ல இருக்கு. இவள் அந்த வீட்டைப் போய்ப் பார்க்காமல் இனி நித்திரை கொள்ளவே போக மாட்டாள். அவளுடைய பிடிவாதம் அப்படி. அவளுடைய பிடிவாதத்தை என் சொந்த அனுபவத்திலை நன்கு அறிந்தவன். எங்களது திருமணம் கூட ஒருவகையான காதல் திருமணம்தான். முதலிலை அவள்தான் எனக்குக் கடிதம் போட்டாள். காதல் கடிதம். "என்னைப் பார்த்த முதல் நாளிலேயே என்னைப் பிடித்துவிட்டதென்று" எழுதியிருந்தாள். "எல்லாம் பருவக்கோளாறு" என்று பதிலெழுதினேன்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை உண்மைக் காதல். காதல் காதல் காதல் போயில் சாதல் சாதல் சாதல்" என்று பாரதியைத் துணைக் கழைத்துப் பதிலளித்திருந்தாள். "நாடிருக்கிற நிலை யிலை என்னாலை எப்ப கல்யாணம் செய்ய முடியு மென்று தெரியவில்லை. வெளிநாடு வந்து இப்பத்தான் ஒரு வருசம். இன்னும் இங்கை எனக்குப் பேப்பரும் கிடைக்கவில்லை. அது கிடைத்தபிறகுதான் ஸ்பான்சரே பண்ணலாம்" என்று மீண்டும் பதிலளித்தேன். "எத்தனை வருசமென்றாலும் சரி. வாழ்ந்தால் உங்களோடுதான்" என்றாள். சொன்னவள் எட்டு வருடங்களாகக் காத்திருந்தாள். இந்திய அமைதிப்படையும் வந்து நாட்டை விட்டும் போனபிறுகுதான் அவளை ஸ்பான்சர் செய்ய முடிந்தது. அதன்பிறகு தன்னந்தனியாக டொராண்டோ வந்திறங்கினாள். அப்படி வந்தவள் அவ்வப்போது எமக்கிடையில் வரும் வாக்குவாதங் களின்போது "நீங்கள் இப்படி பொறுப்பில்லாமலிருப் பவரென்று தெரிந்திருந்தால் இப்படி வந்து மாட்டுப் பட்டிருக்க மாட்டேனே" என்று புலம்புகின்றாள். அதற்கு நான் கூறுவது: "பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் முருங்கை மரம் ஏறத்தான் வேண்டும். இது நீயாக வந்து விழுந்த வாழ்க்கை."

வீடு விற்பனை முகவன் "ஓடு மீன் ஓடி , உறு மீன் வரும்வரையில் வாடி நிற்கும் கொக்கா"க, பொறுமையாகத் தொலைபேசியில் காத்திருந்தான். மனைவி என்னிடம் போனைத் தந்தாள். நான் காத்திருந்த வீடு விற்பனை முகவனிடம் கூறினேன்: "தம்பி. அப்ப வாருமென். போய்த்தான் பார்ப்பமே"

அடுத்த அரை மணித்தியால நேரத்தில் அந்த முகவன் எனது இருப்பிடத்திலிருந்தான்.

அவனே எங்களைத் தனது காரில் விற்பனைக் காகவிருந்த அந்த வீட்டைக் காட்டுவதற்குக் கூட்டிச் சென்றான். மார்க்கம் நகருக்கும், டொராண்டோ நகரும் சந்திக்கும் ஸ்டீல் சாலையும், மார்க்கம் சாலையும் சந்திக்குமிடத்தில் இருந்த , நான்கு பெரிய அறைகளைக் கொண்ட வீடு. அந்த விலையில் அப்படி யொரு வீட்டைப் பார்ப்பது அவ்வளவு சுலபமல்ல. அந்த வீட்டைப் பார்த்து விட்டு வந்ததிலிருந்து என் மனைவி எப்படியாவது அந்த வீட்டை வாங்கிவிட வேண்டு மென்று ஒற்றைக்காலில் நின்றாள். அவளுக்குத் துணையாக அந்த வீடு விற்பனை முகவனும் ஒத்தூதினான்.

இறுதியில் அந்த வீட்டை வாங்குவதற்கு முடிவு செய்தோம். அதற்கு முன் சில நிபந்தனைகளை விதித்தேன். வீடு வாங்குவதென்றால் மோட்கேஜ் கட்ட வசதியில்லையென்று "பேஸ்மென்ட்"டை வாடகைக்கு விடுவதில்லை. "பிரைவசி" இல்லையென்றால் வீடு வாங்கி என்ன பிரயோசனம். ஐந்து வருடங்கள் மட்டும்தான் வீட்டை வைத்திருப்பது. அதற்குப் பிறகு விற்றுவிட வேண்டும். அதன் பின் இலாபத்தில் விற்றால் இன்னுமொரு வீடு வாங்குவதுபற்றி யோசிக்கலாம். இல்லையென்றால் மீண்டும் அபார்ட்மென்ட் சென்று விட வேண்டியதுதான். வீட்டை வாங்கிவிட்டு இருபத் தைந்து வருடங்கள் மாட்டைப்போல் உழைத்துக் கட்டிவிடுவதற்குள், குழந்தைகள் படித்து முடித்து நல்ல வேலையுமெடுத்து விடுவார்கள். அதற்குள் எங்களது காலம் முடிந்துவிடும். இதற்கெல்லாம் ஓமென்றால் நான் வீடு வாங்கத் தயாரென்றேன். மனைவியும் உடனடியாகவே அதற்குச் சம்மதித்தாள். ஒருமாதிரி இருவருமாகச் சேர்த்து வைத்திருந்த ஐம்பதினாயிரம் டொலர்களை முற்பணமாகப் போட்டு (வீட்டு விலையில் அது பதினைந்து சதவீதம் வரையில் வந்தது) வீட்டை வாங்கிக் குடிபுகுந்தோம்.

2.

இடையில் ....

ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. இந்த ஐந்து வருடங்களும் மாடு மாதிரி உழைத்தோம். மாதாமாதம் மோட்கேஜ் கட்டினோம். மேலதிகமாக ஒவ்வொரு வருடமும் மோட்கேஜ் கட்டி முடிப்பதாகத்தான் முதலில் திட்டம் போட்டிருந்தோம். ஆனால் மாதச் செலவு களுக்கே வரும் சம்பளம் போதுமானதாக விருக்க வில்லை. அபார்ட்மென்டில் இருந்தபொழுது மாத வாடகை ஆயிரம் டொலர்கள். ஆனால் வீட்டு மாதச் செலவுகளோ... மோட்கேஜ் இரண்டாயிரம் டாலர்கள். மேலதிகமாக தண்ணீர் வரி, மின்சாரம், இயற்கை வாயு என்று ஐநூறு டாலர்களுக்குக் குறையாது. இரண்டா யிரத்து ஐநூறு டாலர்கள். தவிர வீட்டுச் செலவுகள், கார்ச் செலவு, கார் காப்புறுதிச் செலவு , வீட்டுக் காப்புறுதிச் செலவு அது இதென்று இன்னும் ஆயிரத்தைந்நூறு டொலர்களுக்குக் குறையாது. நாலாயிரம் டொலர்கள் வரையில் மாதச் செலவு வரும். அபார்ட்மென்டி லிருந்தால் ஆயிரம் டொலர்கள் வாடகை, இன்னும் ஆயிரத்தி இருநூறு வரையில்தான் செலவு. மொத்தம் இரண்டாயிரத்தி இருநூறு டாலர்கள். வீட்டில் இருந்ததற்காக மாதம் ஆயிரத்தி எண்ணூறென்று ஐந்துவருடங்கள் கட்டிய தொகை யினைப் பார்த்தால்.. வருடத்திற்கு இருபத்தி யோராயிரம்படி பார்த்தாலும், ஐந்து வருடங்களுக்கு நூறாயிரம் டாலர்களைத் தாண்டி விட்டிருந்தது. அப்பார்ட்மென்டிலிருந்திருந்தால் அந்தக் காசு மிச்சம். வைத்திருந்த முதலும் மிச்சம். இது தவிர "பேஸ்மென்ட்", கூரை, "டிரைவ் வே"யென்று மேலுமொரு முப்பதினாயிரம் டாலர்கள் செலவு. அதனையும் சேர்க்க வேண்டும். இதற்கிடையில் அவ்வப்போது வீட்டுச் செலவுகளுக்குக் கஷ்டமாகவிருக்கும்போது கடனட்டைகளிலிருந்து வேறு கடனெடுத்து, ஒழுங் காகக் குறித்த தவணைக்குள் கட்டாமல் , "கிறடிட் ரேட்டிங்" வேறு பழுதாகிவிட்டிருந்தது. இதற்கிடையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறடிட் கார்ட் கொம்பனியொன்று அவன் அடிக்கடி தாமதமாக மாதாந்தக் கட்டுப்பணம் கட்டவே , உயர்நீதி மன்றத்திற்குச் சென்று அறிவித்தலொன்றை அனுப்பியிருந்தது. அப்பொழுது என்ன செய்யலாமென்று ஒரு யோசனை எழுந்தது. தமிழர்களால் வெளியிடப்படும் வடித்தக் கையேடுகளிலொன்றில் திரு. சு.க.வின் விபரங்களைப் பெற்றுக்கொண்டேன். சுப்பிரமணியம் கந்தையாவின் சுருக்கம்தானது. அவர் தான் கடன் பிரச்சினைகளால் வாடுவோரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் வல்லவரென்று அறிவித்திருந்தார். அவருடன் தொடர்புகொண்டபொழுது மனைவியை யும் அழைத்துக்கொண்டு, அந்த நீதிமன்றக் கடிதத்தையும் கொண்டுவரும்படி கூறியிருந்தார். ஒரு நாள் அவருடன் சந்திப்பதற்கு போனில் ஏற்பாடு செய்துவிட்டு அவருடைய காரியாலயத்திற்குச் சென்றோம். திரு. சு.க எங்களைக் கண்டதும் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே வந்து கதவைத் திறந்து வரவேற்றார். அப்பொழுது கூட கைகளில் தடித்த சட்டப்புத்தக மொன்றினை வைத்திருந்தார். ஊரில் பத்தாம் வகுப்பு வரையில் படித்திருந்தவர், இங்கு வந்ததும் கடன் ஆலோசகராகப் பணியாற்றத் தொடங்கியிருந்தார். எங்களிடமிருந்து நீதிமன்றக் கடிதத்தினை எடுத்து வாசித்தார். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவருடனான எமது உரையாடலின் விபரம் வருமாறு:

நான்: "எப்படியும் இதற்கொரு நல்லதொரு வழியை நீங்கள்தான் செய்ய வேண்டும்?"

திரு. சு.க: "இதற்கு நல்லதொரு வழி "வாடிக்கையாளருக்கான பிரேரணை" (Consumer Proposal). இது சட்டரீதியிலான வழி."

இவ்விதம் கூறியவர் வாடிக்கையாளருக் கான பிரேரணை பற்றி விபரித்தார். இதற்காக "ட்ரஸ்டிகள்" இருக்கிறார்கள். அவர்களே இப்பிரேரணயைத் தயாரிப்பார்கள். அதன் பிறகு ஐந்து வருடங்கள் உங்கள் கடனில் குறிப்பிட்ட தொகை யினைச் செலுத்த வேண்டும். அவ்வளவுதான். அதன்பிறகு நீங்கள் உங்கள் கடன் பிரச்சினையிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்" என்றார்.

நான்: "இருவரும் ஒரே நேரத்தில் செய்யாமல் ஒருவர் முதலில் செய்யலாமா?"

திரு. சு.க: "முதலிலை உங்களுடைய வைப் செய்யட்டும். அதன்பிறகு இப்பொழுது ஆரம்பிக்கப் பட்ட இக்கடன் மீதான சட்டநடவடிக்கை நிறுத்தப்பட்டு விடும். அதன் பிறகு உங்களுக்கு அவர்கள் இன்னுமொரு நோட்டிஸ் இதுபோல் அனுப்புவார்கள். அப்பொழுது நீங்களும் வேண்டுமானால் உங்களுக்கும் வாடிக்கை யாளர் பிரேரணை செய்யலாம்"

இறுதியில் அவர் கூறியதுபோலவே மனைவிக்கு மட்டும் முதலில் வாடிக்கையாளர் பிரேரணையினைச் செய்தோம். அவருக்கும் எழுநூறு டாலர்கள் கொடுத்தோம். அதன்பிறகு நான் கிறடிக் கார்ட் நிறுவனத்திடமிருந்து எனக்கு வரவேண்டிய கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால் வந்ததோ இன்னுமொரு நீதிமன்றக் கடிதமல்ல. வந்த கடிதம் எமது வீட்டின் மேல் லீன் போடப்பட்ட விடயத்தைக் கூறிய கடிதம். அத்துடன் கிறடிக் கார்ட் நிறுவனம் முழுக் கடனையும் என்னைப் போடும்படி நீதிமன்றத்திடமிருந்து தீர்ப்பு வேறு பெற்றிருந்தது. அதன்மூலம்தான் அவர்களால் வீட்டின்மேல் லீனைப் போட முடிந்தது. "பாவி போன இடமெல்லாம் பள்ளமும் திட்டி என்று ஆச்சி அடிக்கடி கூறுவதுண்டு. என் விடயத்தில் அது மிகவும் சரிதான் போலையிருக்குது."

கடன் அலோசகர் திரு. சு.க.வின் ஆலோசனையின் விளைவு. மனைவி கட்ட வேண்டிய கடனுக்கு வாடிக்கையாளர் பிரேரணை செய்யதிருக்கும் நிலையில், அதே கடன் முழுவதையும் அக்கடனின் ஒரு பங்குதாரர் நானென்ற முறையில் நான் கட்டும்படி நீதிமன்றத்திடமிருந்து தீர்ப்புப் பெற்று, அதன் மூலம் வீட்டிற்கும் சொத்தில் பங்குரிமையினை , "லீன்" , பதிவு செய்திருந்தார்கள். "கிறடிட்கார்ட்" நிறுவனத்தினர். உண்மையில் முதலில் எமக்கு வந்திருந்த நீதிமன்றக் கடிதத்தில் இருபது நாட்களுக்குள் அதற்கு எதிரான என் எதிர்வாதத்தினைச் சமர்ப்பித்திருக்க வேண்டும். திரு சு.க.வின் ஆலோசனையின்படி நான் கிறடிக் கார்ட் நிறுவனத்தினமிருந்து இன்னுமொரு கடிதத்தினை எதிர்பார்த்திருந்த நிலையில், அவர்கள் ஏற்கனவே அனுப்பியிருந்த கடிதத்திற்கு நான் எதிர்வாதத்தினைக் குறித்த காலகட்டத்தில் சமர்ப்பிக்காத காரணத்தைக் காட்டி அந்தத் தவறுக்கான தீர்ப்பினைப் பெற்றிருக் கின்றார்கள். எழுநூறு டாலர்களை எம்மிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் ஆலோசகரான திரு. சு.கவின் ஆலோசனையின் விளைவு இந்நிலையினை எமக்கு ஏற்படுத்தியிருந்தது. அவர் ஒருபோதுமே மனைவிக்கு மட்டும் வாடிக்கையாளர் பிரேரணையினைச் சமர்ப்பித்திருக்கக்கூடாது. இருவரையும் ஒன்றாகச் செய்யும்படி கூறியிருக்க வேண்டும். இல்லாதுவிடத்து இருபது நாட்களுக்குள் இருவரையும் எதிர்த்தரப்பு வாதத்தினைச் சமர்ப்பித்திருக்க ஆலோசனை கூறி யிருக்க வேண்டும். ஆனால் அவரோ தனது கட்டணத்தை யும் , ட்ரஸ்டியின் கட்டணத்தையும் எடுப்பதில் மட்டுமே குறியாயிருந்ததன் விளைவுதான் எமக்கு இந்த நிலையினை ஏற்படுத்தி விட்டிருந்தது.

வீட்டைக் காட்டி கடன் பெற்று ஏனைய கடன்களையும் அடைக்கலாமென்று பார்த்தால், வீட்டின் மீதிருந்த "லீன்" காரணமாக இரண்டாவது மோட்கேஜ் எடுப்பதென்றால் அதற்கும் சேர்த்து எடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டியும் கிறடிட் ரேட்டிங் பழுதாகியிருந்த காரணத்தால் மிகவும் அதிகம். மாதாமாதம் முதலாவது மோட்கேஜுடன் இரண்டாவது மோட்கேஜின் வட்டியும் சேர்ந்தால்.. பிரச்சினை இன்னும் அதிகமாகிவிடும். இதற்கிடையில் பங்குச் சந்தையில் நான் போட்டு வைத்திருந்த சேமிப்புப் பணம், அந்தப் புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனமான "நோட்டல்" திவாலாகி விடவே, கரைந்து மறைந்து போனது. இவ்விதமான தொரு சூழலில் வீட்டை விற்றபொழுது வீடு விற்பனை முகவர்களுக்கான செலவு, கிறடிட் கார்ட் செலவு அது இதென்று எல்லாச் செலவுகளும் போக, போட்ட காசுடன், மேலுல் சில ஆயிரங்கள்தாம் மிஞ்சின. இதற்குப் பேசாமல் அபார்ட்மென்டிலேயே இருந்து தொலைத்திருக்கலாமென்ற ஞானோதயம் அப்பொழுது தான் ஏற்பட்டது. இதற்கிடையில் இயற்கை வாயு மாதாந்த கட்டணம் கட்டுவதற்குக் காலதாமத மாகும் சமயங்களில் என்பிரிட்ஜ் நிறுவனத்தினர் வாயுவை நிறுத்தி விடுவார்கள். மீண்டும் பணம் கட்டி, வாயு கிடைக்கும் மட்டும் ஊரிலை இருந்த மாதிரி தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குளிக்க, முகம் கழுவப் பாவிக்க வேண்டியதுதான். சீயென்று போய் விடும். இந்த ஐந்து வருடங்களில் வீட்டுச் செலவு களுக்காகவே உழைத்ததில் கண்ட பலன். ஒரு நாளாவது ஓய்வாக இருந்ததில்லை. குழந்தைகளுடன் சுற்றுலா அது இதென்று போனதில்லை. நண்பர்களுடன் கதைப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. வேலை! வேலை! வேலை. மோட்கேஜ், மின்சாரம், நீர்வரி, இயற்கை வாயு, வீட்டுக் காப்புறுதி, கார்க் காப்புறுதி அது இதென்று மாதாந்த "பில்"களைக் கட்டுவதே வாழ்க்கையாகவிருந்தது. இப்படியொரு வாழ்க்கைக் காக வீடு தேவைதானா? வீடு தேவைதான். அதுவே வாழ்வின் அடிப்படை இயல்பு களையெல்லாம் இல்லா தொழித்து விடுகின்ற தென்றால்... என்ன வாழ்க்கை யென்று பட்டது. அப்பொழுதுதான் வீட்டை விற்பதற்கு முடிவு செய்தோம். கனவுகளுடன் வாங்கிய வீட்டினை விற்பதற்கு முடிவு செய்தோம்.

3.

இன்று....

தொடர்மாடிக் கட்டடமொன்றிலுள்ள "அபார்ட் மென்"டொன்றில் எங்களது வாழ்க்கை மீண்டும் தொடர்கிறது. மனைவி இப்பொழுது என்னுடன் வாக்குவாதப்படும்போதெல்லாம் "கனடா விலை ஒரு வீட்டை வைத்திருக்கத் தெரியாது. வெட்கக்கேடு. பேசாமல் பேஸ்மனடை யாருக்காவது வாடகைக்குக் கொடுத்திருந்தால் இப்படி வித்திருக்கத் தேவையில்லை. வீடு வாங்கினால் கடைசி மட்டும் வைத்திருக்க வேண்டும். அப்பத்தான் இலாபம் வரும். இப்படி இடையிலேயே வித்தால் எப்படி இலாபம் வரும்?"

வீடென்பது ஆறுதலாகக் குடும்பத்தவர் களுடன் மகிழ்ச்சியுடனிருப்பதற்கு. அதனை வேறு பலருடன் பகிர்ந்துகொண்டு வாழுவதெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் சரி வராதது. இதனை வீடு வாங்குவதற்கு முன் கூறி, அவள் சம்மதித்துத் தானே வீடு வாங்கவே சம்மதித்திருந்தேன். ஆனாலும் அதனைக் கூறி மேலும் அவள் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. அப்பொழுதெல்லாம் நான் கூறுவேன்: "வாழ்க்கை இன்னும் முடியவில்லையே. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட வேண்டியது தான். இந்த முறை நாங்கள் தோற்கவில்லையே. அடுத்த முறை இந்த முறை விட்ட பிழையை விடக் கூடாது. இன்னும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். காசிருந்தால் கூடுதலாக முதல் போட்டு வீடு வாங்க வேண்டும். அதற்கு வழியில்லாவிட்டால் வீட்டை வாங்கி, வாழ்க்கைக்காக வீடென்ற நிலை போய், வீட்டுக்காக வாழ்க்கை என்று வாழுற வாழ்க்கையை மட்டும் வாழவே கூடாது. நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. நான் மண்டையைப் போட்டு விட்டால், கொஞ்சமாவது லைவ் இன்சுரன்ஸ் இருக்கு. நீங்களொன்றும் ரோட்டிலை நிற்க மாட்டியள்தானே"

அதற்கவள் கூறுகின்றாள்: "இப்படியே சொல்லிக்கொண்டேயிருங்கள். அதுக்குள்ளை எங்கடை காலம் போய்விடும்."

அவளது கூற்றுக்கு நான் பதிலேதுமிறுக் காமல் மௌனமாயிருக்கிறேன். "எல்லாரும் போனாற்போலை நானும் போனேன் சாமி மலை யென்று", எல்லாரும் வீடு வாங்கிறார்களென்று நானும் வாங்கினேன். வீட்டைக் கட்டிப்பார் என்பார்கள். உண்மையில் வீட்டின் மோட்கேஜ் போன்றவற்றின் மாதாந்தச் செலவுகளைக் கட்டிப்பார் என்பதன் அர்த்தமோ அதுவென்று சிந்தித்துப் பார்க்கின்றேன். ஆனாலொன்று... இப்பொழுது வாழ்க்கை முன்போல் அமைதியாகச் செல்கின்றது. குழந்தைகளுடன் நேரம் கழிப்பதற்கு, சுற்றுலாக்கள் செல்வதற்கு, தேவையான செலவுகளைச் செய்வதற்கு, நண்பர்களுடன் அவ்வப் போது நேரத்தைக் கழிப்பதற் கென்று நேரமிருக்கிறது. மாதச் செலவுகளை உரிய நேரத்தில் கட்ட வேண்டுமே யென்ற மன அழுத்தம் இல்லை. மேலே ஆகாயம். கீழே பூமி. வாழ்க்கைதான் எவ்வளவு இனிமையாக விளங்குகின்றது. அகதிக்கு ஆகாயமே துணையென்று சும்மாவா சொன்னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தகுமாரன்



நந்தகுமாரன் என் வீட்டுப் படலையைத்
திறக்கிறபோது
நள்ளிரவு சாய்கிறது
ஏரிக்கரையில்

ஏரிக்குக் கனவுகள் இல்லை
அதனைச் சுற்றிக் கட்டிடங்களை
எழுப்பிவிட்டார்கள்
அந்தக் கட்டிடங்களை
வடிவமைத்தவர்களின் தலைக்குள்
களிமண்
காற்றில் உப்பு

அந்த வெற்றுப் பக்கத்தை
நீ திருப்புகிறாய்
கட்டிடத்தின் அழகு
கடலின் அழகு என்கிறாய்

சிலவேளைகளில் காதலிகளை விடக்
கட்டிடங்கள் அழகாக மிளிரும்
மந்திரம் தெரிகிறது

நந்தா,
இதயத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களின்
கவனம்
ஈரலில் இருப்பதில்லை
ஈரலைத் தொலைத்தவர்க்கு
ஒரு கைப்பிடியளவு ஈரலை
நான் வழங்குகிறேன்
பெறுவாரில்லை

அதியமானின் நெல்லிக்கனி இருக்க
உள்ளங்கை இல்லை

உன்னோடு உல்லாசங்களைப்
பகிர்ந்துகொண்டவர்கள்
முகமூடிகளோடு திரிகிறபோது
இயல்பிழக்காத உன் முகத்தை
வலிமையோடு தாங்கின உன் தோள்கள்

174 A பிறண்ஸ்விக் தெருவில்
என் மாடி அறையில்
உன்னுடைய கனவைப் பற்றியும்
என்னுடைய கவிதையைப் பற்றியும்
பின்னிரவிரவாய்ப் பேசிய நாட்கள்
இனியவை இனி வரா

அடுத்த வசந்தம் இனி வராது

எமது உடல்நலம் குறித்த பொறுப்பின்மை
தருகிற பெருந்துயர் எமக்கன்று
மற்றவர்க்குத்தான் என்று
உனக்குத் தெரியாமல் போனதில்
எனக்கு ஆச்சரியமில்லை

உனது நினைவை எழுதுகிறபோது
எனக்கும் அது தெரியும்

நதி அலைக்குப் பெருங்காற்றைத்
தெரியாது
நீராய் இருப்பதா, நதியாய் இருப்பதா
கடலாய் இருப்பதா, காற்றாய் இருப்பதா?

சாம்பலைக் கேள்.

(இராஜேந்திரம் நந்தகுமாரனுக்கு 01-12-1956 26-05-2012)

-சேரன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.சந்திரபோஸ்


# கனடாவில் பல்கலைச்செல்வன் திவ்வியராஜனின் கலை இலக்கியப் பங்களிப்புக்கள்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற பல்கலைச் செல்வனாக கனடா நாட்டில் தடம் பதித்து பவனி வருபவர் வைரமுத்து திவ்வியராஜன்.

யாழ் குடா நாட்டில் வரணியூரில், அக்காலத்தில் பேச்சாற்றல் பெற்ற குழந்தையர் வைரமுத்துவுக்கும், இனிமையாகப் பாடும் திறன் கொண்ட இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். பெற்றோரிடமிருந்து பேச்சாற்றலையும், பாடும் திறனையும் முதுசொம்மாகப் பெற்றார்.

கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டதாரிப் படிப்பினையும், (diploma in market management) சந்தைப்படுத்தும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பினையும் பெற்று, பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தராகப் பணி புரிந்தார்.

கனடா நாட்டிற்குப் புலம் பெயர்வதற்கு முன்னர், கொழும்பில் இலங்கை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், மெல்லிசைப் பாடகராகவும், நாடக நடிகராகவும் பங்கு பற்றினார். இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிப் பிரதி ஆக்கம் செய்பவராகவும், ரூபவாகினி தொலைக்காட்சியினர் நடத்திய மெல்லிசைப் போட்டியில், தொலைக்காட்சி நேயர்களின் அதிகப் படியான வாக்குகளைப் பெற்று முதலிடம் பெற்றார்.



இவருடைய மனைவி சிவா திவ்வியராஜன் தமிழ் நாட்டில் அடையார் நுண்கலைக் கல்லூரியில், நடனக் கலையில் டிப்ளோமாப் பட்டம் பெற்று "பரத சூடாமணி" என்ற பாராட்டினையும் பெற்றவர். இலங்கைத் தேசிய இளைஞர் மன்றம் நடாத்திய கலைவிழாவில் இடம் பெற்ற நாட்டிய நாடகப் போட்டியில் "நட்பு" என்ற நாட்டிய நாடகத்தின் பிரதியாக்கத்தினையும் இசையாக்கத்தினையும் திவ்வியராஜன் செய்ய, துணைவியார் சிவா திவ்வியராஜன் நாட்டிய நாடகத்தைத் தயாரித்து இயக்கி அளித்தார். இந்நாட்டிய நாடகம் அதிசிறந்த நாடகமாக தெரிவு செய்யப் பட்டதுடன் நடிப்பு, இசையமைப்புக்கான பரிசில் களையும் பெற்றுக் கொண்டது.

இவ்வாறு இலங்கையில் தமது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்த திவ்வியராஜன் தம்பதிகள் தமது இரு பிள்ளைகளுடன் கனடா நாட்டிற்கு1993 நவம்பரில் குடி புகுந்தனர். கனடாவில் திவ்வி யராஜனின் கலை இலக்கியப் பணிகள் பன்முகத் தன்மை வாய்ந்தவை.



## எழுத்துத்துறை

1994 இல் ரொரன்ரோ நகரில் வெளி வந்த வாராந்தப் பத்திரிகை யான "சூரியன்" இதழில் ஓர் "ஈழத்து அகதியின் மனப் பதிவுகள்" என்னும் தலைப் பில் ஓர் ஆண்டுக்கு மேலாக தொடர் கட்டுரைகளை எழுதி வந்தார். இக்கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவும் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். திரு.எஸ்.திருச்செல்வம் முதன்மை ஆசிரியராக இருந்து வெளியிடும் தமிழர் தகவல் சஞ்சிகையின் ஆண்டு மலர்களுக்கு வருடந்தோறும் கலை, இலக்கியம், சமூகம், கல்வி போன்ற தலைப்புக்களில் கட்டுரை எழுதி வருகின்றார். இவற்றினை விட கனடா நாட்டில் ஈழத்தமிழர்களால் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்களையும் கனடாவில் வெளியாகும் பல்வேறு பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். இவரது விமர்சனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆக்கபூர்வமானதாகவும், உற்சாகமூட்டுபவையாகவும், சில ஆலோசனை கூறுபவையாகவும் அமைகின்றன.

திரு.ஆர்.என். லோகேந்திரலிங்கத்தைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வாரந்தப் பத்திரிகையான உதயன் இதழுக்கு சிறுவர்களுக்கான "வளரும் தளிர்கள்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளைத் திவ்வியராஜன் எழுதியுள்ளார். அவ்வாறு தமது எழுத்துப் பணிகளுடன் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவராகவும், உபசெயலாளராகவும் பணிபுரிகின்றார்.

**நாடகத்துறை**

நாடகத்துறையில் திவ்யராஜன் நடிகனாக, தயாரிப்பாளராக இயக்குனராக, இசை அமைப்பாளராக பணியாற்றி வருகின்றார். கனடா அரங்காடல் அமைப்பினால் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் சிலவற்றில் நடித்துள்ளதுடன் இசை அமைப்பும் செய்துள்ளார்.

1995 இல் ரொரன்ரோ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 20ஆவது இலக்கியச் சந்திப்பில் அரங்கேறிய மகாகவியின் "புதியதொரு வீடு" நாடகத்திற்கான இசை அமைப்பினைச் செய்தார். கொழும்பில் வாழ்ந்த காலத்தில் அங்கு நடத்தப்பட்ட நாடகப் பட்டறைகளில் பங்கு பற்றியதன் மூலமும் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் எஸ்.மௌனகுரு, தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், நா.சுந்தரலிங்கம் ஆகியோரிடம் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதன்




மூலமும் அவருக்கே இயல்பாக இருந்த ஆர்வமும் அவரை நாடகத்துறையில் சிறந்து விளங்கச் செய்தது. கொழும்பில் அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை நாடகத்தில் நடித்துள்ளார். 1998 இல் அரங்காடல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நாடக விழாவில் குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகமான நரகோடு சுவர்க்கம் என்பதைத் தயாரித்த இசை அமைத்து இயக்கி மேடையேற்றினார்.

"குளிர் காய்ச்சல்" என்னும் நகைச்சுவை நாடகம் 1995 இல் அரங்கேற்றப்பட்டது. 1994 இல் மனைவி சிவா திவ்யராஜனும், திரு.திவ்யராஜனும் இணைந்து "கவின் கலாலயா" என்னும் நிறுவனத்தை ரொரன்ரோவில் நிறுவினர் இந்நிறுவனம் மூலம் பல பெண்குழந்தைகள் பரதம் பயின்றனர். இத்தம்பதியினரின் மூத்த மகள் சங்கீத்தா திவ்ய ராஜனும் பரதம் பயின்று அரங்கேற்றம் செய்ததுடன் தந்தையைப் போன்று சிறந்த நடிப்புத்திறன், இசைஆர்வம் கொண்டவர்.

ஆண்டுகொருமுறை தம்மிடம் பரதம் பயிலும் மாணவர்களுக்கான "அரங்கேற்றமும் நாட்டிய நாடகமும்" கவின் கலாலயாவால் அரங்கேற்றப்படுகின்றன. நாட்டிய நாடகங்களுக்கான பிரதியாக்கம், இசை அமைப்பு என்பவை திவ்யராஜன் பணியாகும். திவ்யராஜன் பாடல்களை இனிமையாகப் பாடுவதுடன் பல்வேறு இசைக்கருவிகளை இரசப்பதிலும் வல்லவர். 1994 இல் "ஒரு தாயின் குரல்" இசைக் கூத்து நாடகம் கவின் கலாலயத்தால் அரங்கேற்றப்பட்டது. இவற்றை விட "மௌனம் கொண்டீரோ", "பேயரசு", "பழைய சுமை எங்களுக்கு", ஆர்க்கும் குடியல்லோம்" ஆகிய நாட்டியநாடகங்கள் கனடாவிலும் "குருதிப்பூ", "கட்டை விரல்" ஆகிய நாட்டிய நாடகங்கள் (Fetna) அமெரிக்க தமிழ்ச்சங்க ஆண்டுவிழாக்களிலும் அரங்கேறின. திவ்யராஜன் தம்பதிகளின் மகன் கீர்த்தனன் தந்தையைப்போல் சகல இசைக்கருவி களையும் மீட்டும் வல்லமை பெற்றவர். மிருதங்க அரங்கேற்றம் செய்தவராவார்.

திவ்யராஜன் தம்பதிகளின் பிள்ளைகளான சங்கீத்தாவும், கீர்த்தனனும் பெற்றோரின் கலைத்துறை ஈடுபாட்டிற்கு உறுதுணையாக இருப்பதனை அவதானிக்கும் போது, திவ்யராஜன் குடும்பமே ஒரு கலைக்குடும்பமாக கனடாவில் திகழ்கின்றது. திவ்யராஜன் கனடாவில் காப்புறுமுகவராகவும், கனடா கல்வி அமைச்சின் சர்வதேச மொழிப்பயிற்சி திட்டத்தின் கீழ் தமிழ் மொழி கற்பிக்கும் பகுதி நேர ஆசிரியராகவும், உதவி ஆசிரியர்களுக்கான ஆலோசகராகவும் பணி புரிந்து வருகின்றார். இதன் காரணமாக தமிழ் மொழி கற்கும் மாணவர்களைக் கொண்டு பாடசாலைக் கலைவிழாக்களிலும், கலை நிகழ்வுகளிலும் நாடகங்கள் நடிப்பதற்கான பயிற்சி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களை அளித்து வருகின்றார். இவ்வாறு மாணவர் களைக் கொண்டு "பலிக்கடாக்கள்" என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து, இயக்கி, இசையமைத்து மேடை ஏற்றியுள்ளார்.




## கவியரங்கும், கவிதா நிகழ்வுகளும்

திவ்யராஜன் அவர்கள் கனடாவில் பல கவியரங்குகளில் பங்கு கொண்டு கவியரங்கு நிகழ்வுகளை களை கட்டச் செய்துள்ளார். நகைச்சுவை உணர்வோடு கவிதை வரிகளை அபிநயத்தோடு கூறும் போது கபையில் கிரிப்பும் சிந்தனையைத் தூண்டும் அவரது சமூகப் பார்வையும் வெளிப்படும். கவிஞர் கந்தவனம், கவிஞர் க.நவம், அ.கந்தசாமி, திருமாவளவன், பொன்னையா விவேகானந்தன், கவிஞர் புகாரி, கோதை அமுதன், மீரா இராசையா போன்றவர்களுடன் இணைந்து கவிதை பாடியுள்ளார்.

பேராசிரியர் சிவசேகரம் அவர்களின் கனகவிதைகளை கவிஞர் கந்தவனம், கணபதி இரவீந்திரனுடன் இணைந்து திவ்யராஜன் வழங்கினார். "முற்போக்குத் தமிழ்ப் பெண்கள் கலை அமைப்பினரின் ஏற்பாட்டில் "போர் உமுத நிலம்" என்னும் கவிதா நிகழ்வு திவ்யராஜனால் அரங்கேற்றப்பட்டது.

## வில்லிசை

திவ்யராஜன் பல வில்லிசை நிகழ்ச்சிகளை கனடாவில் அரங்கேற்றியுள்ளார். இந்து சமயப் பேரவையில் "எங்கள் கலாசாரம்", "பாரதியின் விடுதலைப் பெண்", "பெண்ணாகிப் பெற்ற பெரும் பேறு", கே.டானியல் நினைவு தின நிகழ்வில் அவரது கதையை "ஆற்றல் மிகு கரத்தில்" என்னும் வில்லிசை நிகழ்வாக, 2001 இல் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் மாவலி வசந்த நிகழ்வில் "காதலாகி" என்னும் வில்லிசை களையும் வழங்கியுள்ளார். மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடாக்கிளை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கனடாக்கிளை ஆகியவற்றிலும் பல மேடை நிகழ்ச்சிகளை தயாரித்து அளித்து பாரட்டுக்கள் பெற்றுள்ளார்.

## இசை ஒலிநாடா, இறுவெட்டு வெளியீடு

திவ்யராஜன் பாடி இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பாக 1995 இல் கனடாவில் ஒலி நாடா வெளியிடப்பட்டது. தாயக மண் மீட்புக் கானங்களின் தொகுப்பாக "விடியலைத்தேடும் கானங்கள்" என்னும் ஒலிநாடா 1995 இல் வெளியிடப்பட்டது. "வெண் பனிப் பூக்கள்" என்னும் சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய இறுவட்டு 2003 இல் வெளியிடப்பட்டது. பாரதி பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து 2012 இல் இறுவட்டு வெளியிடப்பட்டது. இவை அனைத்தும் கவின் கலாலயா வெளியீடுகளாகவே வெளிவந்தன. இவ் இசைப் பாடல்களைத் திவ்யராஜன், சங்கீத்தா செங்துரன், ஜானகி காந்தரூபன், சிறீதேவி கவநீதன், பிரபா பால கிருஷ்ணன், மயூரன் தனஞ்சயன், வைஷாலி ஆகியோரால் பாடப்பட்டு திவ்யராஜனால் இசையமைக்கப்பட்டது.

இவை தவிர அருவி வெளியீடாக 2001 இல் "காற்றோடு பேசு" என்னும் கவிஞர் சேரனின் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளி வந்தது. இதில் உள்ள "ஊரான ஊர் இழந்தோம் என்ற பாடலை திவ்யராஜன் புலம்பெயர்ந்த தமிழர்களின் மன உணர்வுகளை சோக ததும்பும் குரலில் பாடியுள்ளார்.

## திரைப்படம்

கனடாவில் குடியேறியுள்ள ஈழத்தமிழ் கலைஞர்கள் சிலர் தமிழ்த்திரைப்படத் தயபாரிப்பில்



ஈடுபட்டுள்ளனர். திவ்யராஜனும் இரு திரைப் படங்களைத் தயாரித்து திரையிட்டுள்ளார். கனடாவில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிவந்த திரைப்படங்களை விட இவரது இரு திரைப்படங்களும் இரசிகர்களால் பாராட்டப்பட்டது. 2005 இல் "சகா" என்னும் திரைப்படத்தை திவ்யராஜன் திரையிட்டார். கனடாவில் வாழும் தமிழ் இளைஞர் களிடையே ஏற்படும் நட்பு பகை கோபதாபங்கள், புதியநாட்டில், புதிய சூழ் நிலையில் பெற்றோரின் பரிதவிப்பு ஆகியஅம்சங்கள் இப்படத்தில் யதார்த்தமாக சித்திரித்துள்ளார். இப்படத்தில் இலங்கையின் பிரபல நாடக சினிமாக் கலைஞர் ஆன கே.எஸ். பாலச்சந்திரன், க.நவம், கீர்த்தனன், பாரத், தர்சன், உலகநாதன், யசோ, வதனி சுந்தரலிங்கம், பவளம் கோபல கிருஸ்ணன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இத்திரைப்படம் கனடா, இலங்கை, லண்டன், பாரிஸ், நோர்வே, டென்மார்க் ஆகிய இடங்களில் திரையிடப் பட்டது. இத்திரைப்படத்தின் கதை, வசனம், தயாரிப்பு. இயக்கம், இசை அனைத்தையும் திவ்யராஜனே பொறுப்புடன் செய்து முடித்தார்.

அடுத்து 2010 இல் "உறவுகள்" என்ற திரைப்படம் திவ்யராஜனின் எழுத்து, இயக்கம். தயாரிப்பு, இசை ஆகியவற்றுடன் வெளிவந்தது. இத்திரைக்கதைக்களமாக கனடாவும் ஈழத்தில் யாழ்ப்பாணமும் சித்திரிக்கப்படுகின்றன. கனடாவில் வாழும் குடும்பத்தின் சகோதரி குடும்பம் போர் சூழலில் வாழும் அவலமும் அக்குடும்ப இளைஞன் அரசின் உயர் பதவியில் இருந்து உயிர் ஆபத்தினை எதிர்நோக்குவதும் இதனால் மாமனார் மகளைத் திருமணம் செய்ய கனடா வருவதும் திருமணத்தின் பின் மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையே ஏற்படும் கருத்து முரண்பாடுகள் பெற்றோரின் துயரங்கள் கலைத்துவம் ஆக காட்சிப்படுத்தப் படுகின்றன.

இத்திரைப்படத்தில் சங்கீத்தா செந்தூரன், பி.எஸ்.சுதாகரன், க.நவம், சித்திரா பீலிக்ஸ், பாலா கமலா, திவ்யராஜன் ஆகியோர் நடித்தள்ளனர். இத்திரைப்படம் கனடாவின் பல பகுதிகளிலும், யாழ்பாணத்தில் நெல்லியடி, தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் திரையிடப்பட்டது. இத்திரைப் படங்களை தமிழகத்தில் இருந்து கனடா வந்திருந்த கழலஞர்கள், எழுத்தாளர்கள் பார்த்துப் பாராட்டியதுடன் தமிழகத் திரைப்படங்கள் பலவற்றை விட யதார்த்தமாக அமைந்துள்ளதாக பாராட்டினர்.

இத்தகைய பல்திறன் ஆற்றல்களைக் கொண்ட பல்கலைச்செல்வன் திவ்யராஜன் அவர்களையும் அவரது துணைவியார் சிவா திவ்யராஜன் அவர்களையும் கௌரவித்து தமிழர் தகவல் சஞ்சிகையின் 2003 ஆம் ஆண்டு விழாவில் சிறந்த கலைத்தம்பதிகளுக்கான விருதினை வழங்கி வாழ்த்தினர்.


# ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 45U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில்

மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan

Commercial Bank -

Nelliady Branch

A/C No.- 8108021808 CCEYLKLY



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org